7

# ஜகன்மோகினி

7

ஆசிரியை: வை.மு.கோதைநாயகிஅம்மாள்.




3 - OCT 1944
MADRAS

SL
ஜ211, N225M
N144·21·9
183093

"...HINI," SINGAPERUMALKOIL.

தாரண ஆவணி Sept 1944.

TAMIL MONTHLY Vol. 21 No. 9

LARGEST
ESTD 1923

4

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. -திருவள்ளுவர்

ஜகன்மோகினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து. -வீராகவ கவி

Vol. 21. No. 9. தாரண ஆவணி Sept. 1944.

## சந்தோஷச் செய்தி

சென்ற இதழைவிட இவ்விதழில் பக்கங்கள் அதிகரித்திருக்கிறோம். மோகினியின் புதிய அமைப்பு வாசகர்களுக்கு மோகனவடிவாய் அமைந்து பரவசப்படுத்தியதைக் கண்டு மகிழ்வுறுகிறோம். புதுப்புது அம்சங்களுடன் மோகினியை அலங்கரித்து உங்களை மகிழ்விக்க வேண்டுமென்பதே எமது அவா.


சென்ற இதழில் ஒரு புதிய அம்சத்தைச் சேர்த்தோம்: டாக்டரின் டயரியிலிருந்து என்ற தலைப்பில் காப்டன் சேஷாத்ரிநாதன் அவர்களின் அரிய குறிப்புகளை வெளியிட்டால் மிகவும் உபயோகமாகவும், ரஸமாகவுமிருக்கும் என்ற நம்பிக்கையுடன் ஆரம்பித்த இந்த அம்சத்தை நேயர்கள் பெரிதும் வரவேற்பதைக் கண்டு குதூகலமடைகிறோம். இலக்கிய சேவை என்ற புதியபத்தியை இவ்விதழில் ஆரம்பித்திருக்கிறோம். அதில் தற்காலத் தமிழ் உலகில் அரும்பணி புரியும் சிறந்த எழுத்தாளர்களைப் பற்றி குறிப்புகள் வெளியிடப்படும். கவியோகியைப்பற்றின குறிப்புடன் ஆரம்பிக்கும் இப்புதிய அம்சமும் பெரும் விருந்தாக விருக்குமென்பது திண்ணம். (ப-ர்.)

---

இந்தியாவிலுள்ள ஒவ்வொருவரும் பாஸிசத்திற்கு விரோதிகள். ஜப்பானில் இருப்பது போல ஒரு சர்வாதிகாரி, சுதந்திர இந்தியாவிற்கு இருக்கமுடியாது. இராணுவம் வியாபாரம் என்னும் இரட்டை சர்வாதிகாரியால் ஆளப்பட்டு வரும் ஒரு நாடு சுயேச்சை வழங்குவதாகக் கூறுவது கேலிக் கூத்தாகும். அது ஒரு சுத்தப்பொய். ஜப்பானியரிடமிருந்து எவ்வித உதவியும் நமக்கு வேண்டாம்.

**வெற்றி வழியே விடுதலை**

AAA 1018TM





# ஜகன்மோகினி

மோகினி அன்பர்களுக்கு
ஓர் அரிய விருந்து

3-OCT 1944
MADRAS

★

“[illegible] பிறகு ஏன் தனி நாவல் [illegible] வெளியிடவில்லை?” என்று கேட்டுக் கொண்டிருக்கும் “மோகினி” அன்பர்களுக்கு ஓர் அரிய விருந்து தயாராகி வருகிறது.

வை. மு. கோ. 65-வது நாவல்

# அமுத மொழி

122093.

விரைவில் வெளிவரும்
சுமார் 200 பக்கங்கள்.
[illegible] படங்கள்.

| | |
|---|---|
| உயரிய கிளேஸ் பதிப்பு— | 2—8—0 |
| அன்பிளீச்ட் மலிவுப்பதிப்பு | 2—0—0 |
| பாதாமி (மஞ்சள்) ,, ,, | 2—0—0 |

முன்பணம் அனுப்பி ரிஸர்வ் செய்து கொள்ள வேண்டும். வி. [illegible]



ஸ்ரீமான் பி. ஸ்ரீ.

# தவறு செய்து உய்வித்தவர்

அவசரமாகச் சமையல் செய்து கொண்டிருந்தாள் தஞ்சமாம்பாள். உள்ளுக்குள்ளே, "எவ்வளவு பெரிய ஞானியானாலென்ன? வைசியரல்லவா? நம்முடைய கணவருக்கு ஏன் இப்படியெல்லாம் புத்தி போகிறது? காலவித்தியாசந்தான்!" என்று நினைத்துக்கொண்டிருந்தாள். ராமானுஜரோ, "திருக்கச்சி நம்பி நம்முடைய இல்லத்தில் அமுதுசெய்யச்சம்மதித்தார்; என்ன பாக்கியம் பெற்றேன்!" என்ற குதூகலத்துடன் தேவியை உத்ஸாகப்படுத்த முயன்றார்.

கணவர் இஷ்டப்படியே தஞ்சமாம்பாளும் விருந்து தயார் செய்தாள். ராமானுஜர் நீராடி வரதராஜப்பெருமாள் கோவிலில் தனக்குரியகைங்கரியத்தைச்சடக்கென்று முடித்துக்கொண்டு திருக்கச்சி நம்பியை அழைப்பதற்காக அவர் மடத்தை நோக்கிச் சென்றார். அதற்கு முன்னே நம்பிகள் புறப்பட்டு மற்றொரு வீதியாகப் போய் ராமானுஜர் மாளிகையை அடைந்தார். அடைந்து, "கோவில்-கைங்கரியத்திற்குப் போகவேண்டும்" என்று சொல்லி அவசரமாகச் சாப்பிட்டுவிட்டுத் திரும்பினார். தஞ்சமாம்பாள் நம்பிகளைச் சம்பிரமமாக விருந்து செய்வித்துக் கணவர் வருவதற்கு முன்னமே அவர் அமுது செய்த இலையைக் கோலாலே தள்ளி, அந்த இடத்தைக் கோமயத்தாலே ஸ்தல சுத்தி பண்ணித் தாமும் நீராடிக் கணவர் வருகையை நோக்கிக் காத்திருந்தாள்.

ராமானுஜர் நம்பிகளை மடத்திலே காணாதவராய், "ஒரு வேளை நம் இல்லத்தில் எனக்காகக் காத்திருப்பாரோ?" என்று நினைத்துத் திரும்பி வந்தார். தன் மனைவி நீராடியிருந்த நிலை கண்டு, "இது என்ன?" என்று கேட்டார். அதற்கு அவள், "அந்த ஸ்ரீவைஷ்ணவர் ஆலவட்ட கைங்கரியத்திற்குப் போகவேண்டுமென்று அவசரமாக அமுது செய்து போய் விட்டார். அவர் வைசியர்தானே; எனவே அமுது செய்த இலையைக் கம்பாலே தள்ளி இடத்தையும் சுத்தி பண்ணி என்னையும் சுத்தி செய்து கொண்டேன்!" என்று பதில் சொன்னாள்.

"உன்னையும் சுத்தி செய்து கொண்டாயா? பாகவத கைங்கரியமல்லவா நம்மை எல்லாரையும் சுத்தி செய்பக்கூடியது? அதற்கு மாறாக, நீயோ பாகவத அபசாரத்தைத் தேடிக்கொண்டாய்! இப்படிப்பட்ட ஸஹதர்மிணியுடன் நான் 'என்ன கைங்கரியம் செய்யப்போகிறேன்? என்னுடைய கனவோ பெரிது; உன்னுடைய நிலையோ இப்படியிருக்கிறது! இந்தத் தவற்றைப் பொறுத்துக்கொள்கிறேன். இனிமேல் இப்படித் தவறொன்றும் செய்யலாகாது' என்றெல்லாம் முடிவு செய்துவிட்டு ராமானுஜர் திருக்கச்சி நம்பியைத் தேடிப் போய்விட்டார்.

* * *

கொஞ்ச காலம் கழிந்தது. காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோவிலில் எண்ணெய்க்காப்புச் சாத்த வந்த வைஷ்ணவர் ஒருவர் ராமானுஜரிடம், "எனக்குப் பசி அதிகமாகத் தொந்திரவு செய்கிறது" என்று விண்ணப்பித்தார். ராமானுஜர் தேவியை அழைத்து, "இந்த

ஸ்ரீவைஷ்ணவருக்கு அன்னம் இட வேணும்" என்று ஆக்ஞாபித்தார். தேவியோ, "சாப்பாடு இல்லையே" என்று சொல்லிவிட்டாள்: "பழையதுகூட மிஞ்சி இருக்கவில்லையா?" என்று ராமானுஜர் கேட்க, "அற்பமாகிலுமில்லை!" என்றாள் தஞ்சமாம்பாள். அந்த வார்த்தையில் ராமானுஜருக்கு நம்பிக்கை பிறக்கவில்லை. மனைவியை வேறொரு காரியத்தில் ஏவிவிட்டு உள்ளே சென்று சோதித்துப் பார்த்தார். பாத்திரத்திலே பழைய சாதப் இருந்தது. உடனே அவளை அழைத்துக்காட்டி, "ஒரு வைஷ்ணவர் பசித்திருக்க, நீயோ இப்படிச் செய்தாய்; இல்லையே என்று நெடுஞ் சொல்லால் மறுத்த நீசை நீ!" என்று சொல்லி மிகவும் கோபித்துக்கொண்டார். மேலும் அவர், "நீ செய்த முதல் தவறே பெருந்தவறு; இந்த இரண்டாவது தவறு அதைக்காட்டிலும் பெரிது. இனிமேல் ஒரு தவறு செய்தாலும் என்னால் பொறுக்க முடியாது" என்று எச்சரிக்கை செய்து வெளியே போய்விட்டார்.

* • * *

ராமானுஜர் பெரிய நம்பிகளை முக்கிய குருவாகக்கொண்டு தம்முடைய மாளிகையில் மேல் பாதியிலே அவர் குடும்ப சகிதமாக இருக்க இடம் கொடுத்திருந்தார். நம்பி அங்கே ஆறு மாசம் தங்கி இவருக்குத் திவ்வியப் பிரபந்தங்களையும், ஸ்ரீ வைஷ்ணவத்திலுள்ள விசேஷ ரகஸ்யங்களையும் கற்பித்து வந்தார். செவிக்கினிய செஞ்சொல் கேட்டு, "உண்டோம்; உயர்ந்தோம்!" என்று இவர் தமது மனைவியின் பழைய தவறுகளையும் ஒருவாறு மறந்திருந்த காலத்திலே, ஒரு நாள் இவர் இல்லாத சமயத்தில் தஞ்சமாம்பாளுக்கும் பெரிய நம்பி மனைவிக்கும் சண்டை ஏற்பட்டது.

சாதாரணமாகக் கிராமாந்தரங்களில் ஏற்படும் கிணற்றங்கரைச் சண்டைதான்! தோண்டிச்சண்டைதான்! பெரிய நம்பி பிராமணராயிருந்தபோதிலும் தஞ்சமாம்பாள், அவர்கள் தங்களைக் காட்டிலும் தாழ்ந்த பிரிவைச் சேர்ந்தவர்கள் என்று எண்ணியிருந்தாள். "நீ ஆசார்ய பத்தினி என்று கர்வம் பிடித்துத்தானே..." என்றெல்லாம் பேசிவிட்டாள்.

இது கேட்ட பெரியநம்பி தம்முடைய மனைவியையே கண்டித்து ராமானுஜருக்குத் தெரியாமலே அவளை அழைத்துக்கொண்டு ஸ்ரீரங்கத்திற்குப் புறப்பட்டார்.

ராமானுஜர் தம்முடைய கைங்கரியங்களை முடித்துக்கொண்டு "ஆசாரியனைச் சேவிக்க வேணும்; சில சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ள வேணும்" என்று ஆவலுடன் தமது மாளிகைக்கு வந்தார். "குருவையும் அவரது பத்னியையும் காணவில்லையே; என்ன அதிசயம்!" என்று திகைத்திருக்கும்போது, தஞ்சமாம்பாள் வந்து அவர்கள் ஸ்ரீரங்கம் போய்விட்டார்கள் என்று தெரிவித்தாள். "என்னிடம் சொல்லிக் கொள்ளாமலே அவ்வளவு அவசரமாகப் போவதற்கு என்ன காரணம்?" என்று கேட்க, அங்கே இருந்தவர்கள் நடந்ததை விவரமாகச் சொன்னார்கள். தமது பத்தினி பாகவத அபசாரத்தின் சிகரத்தை அடைந்துவிட்டாள் என்று அவர் பரம துக்கத்தில் ஆழ்ந்தார். ஆனால் இப்போது அவள்மீது அதிகமாய்க் கோபம் கொள்ளவில்லை. அவளுக்கு வேண்டிய உடைமைகளையும், நகைகளையும், செல்வங்களையும் கொடுத்துப் பிறந்தகம் போகும்படிப் பயணமாக்கிவிட்டு, கோவிலுக்குப்போய்




வரதராஜர் முன்னின்று, "இனி அடியேன் பந்தத்திலிருந்து பூர்ண விடுதலை பெற்று ஸ்ரீவைஷ்ணவ கைங்கரியத்திலேயே ஈடுபட அருள்செய்ய வேணும்" என்று பிரார்த்தனை செய்துகொண்டார். பிறகு ராமானுஜர் துறவியாகி யதிராஜர் அல்லது துறவிகளுக்கெல்லாம் அரசர் என்று பேரும் புகழும் பெற்றார்.

கணவனையும் உய்வித்த தேவியர்களின் கோஷ்டியில் தஞ்சமாம்பாளுக்கும் ஒரு ஸ்தானம் கிடைத்திருப்பது அதிசயந்தான். மற்றவர்கள் தவறு செய்யாமல் உய்வித்தார்களென்றால், தஞ்சமாம்பாள் தன்னுடைய மூன்று தவறுகளாலும் ஸ்ரீ ராமானுஜரைக் குடும்பத்திலிருந்து உலகத்திற்கே அளித்து விட்டார் என்று சொல்லலாம்.

கைகேயி இரக்கமில்லாமலிருந்ததால்தான் ராமனுடைய புகழமுதை உலகம் இன்றளவும் பருகிவருகிறது என்று கம்பர் பாடியிருக்கிறார். அப்படியே தஞ்சமாம்பாள் தவறு செய்ததால் ராமானுஜரின் புகழமுதையும் ஸ்ரீவைஷ்ணவ உலகம் பருகிப் பயன்படுத்திக் கொண்டது என்று கருதக்கூடுமல்லவா?

# 1. நமது சமதர்மம்

இது சீர்திருத்தக்காலம்; தலைக்குத் தலை தலைவர்; அவரவர் மனம் போன்ற கொள்கை; அதை வலியுறுத்தக் கட்சி, பத்திரிகை, மேடைகூட்டம், சீர்திருத்தப் பிரசாரம்—இவை எங்கும் அமளிபடுகின்றன.

சீர்திருத்தம் வேண்டும்; பழைய தீமைகள் ஒழியவேண்டும்; ஆனால் புதிய தீமைகளும் ஒழியவேண்டும். பழைய நன்மைகளைக் காக்க வேண்டும். நமது நாட்டு மஹான்கள் குருட்டு நம்பிக்கையாளரல்லர்; ஆழ்ந்த யோக ஐக்கியத்திலிருந்து, மனித சமுதாயத்தின்மேல் கருணைகூர்ந்து அவர்கள் வாழ்க்கை விதிமுறைகளை நன்கு வகுத்திருக்கிறார்கள். ஆனால் நமது அசக்தத்தால் அவர்கள் காட்டிய வழியில் செல்லமுடியாமல், தள்ளாடிக் குறுக்குப் பாதை தேடி முள்ளிலும் கல்லிலும் அகப்பட்டுத் தவிக்கிறோம். சந்தேக விபரீதங்கள் நேர்ந்தால், அருள் பெற்ற மஹான்கள் சென்ற வழியைப் பார்த்து நடக்கும்படி வேதம் கட்டளையிடுகிறது.

எந்த நாட்டிலும் ஒரு காரியத்தைச் செய்ய மூன்று அளவுகோல் வேண்டும்—(1) சுருதி (2) யுக்தி (3) அனுபவம். இந்த மூன்றும் பொருந்தினாலே நாம் செய்யும் காரியம் தகுந்த காரியம் ஆகும். இன்றேல் தகாத காரியம் ஆகும். அறிவாளிகள் தக்கது இன்னது தகாதது இன்னது என்றுணர்ந்தே எதிலும் அடி வைப்பார்கள். நாம் சீர்திருத்தம் பேசும்போது, நமது பேச்சு சுருதி, யுக்தி, அனுபவங்களுக்குப் பொருந்தியிருக்கிறதா என்று கவனிக்கவேண்டும்.

நமது பெரியோர் நமக்கு இரும்புச் சட்டம்போடவில்லை. அவர்கள் தர்மத்தை ஸநாதன தர்மமென்றும் யுகதர்மமென்றும் வகுத்திருக்கிறார்கள். ஸநாதன தர்மம் என்றால் சிலர் பிராமண வைதிகர்களின் சூழ்ச்சி, சாதிச் செருக்கிற்கு அடிப்படை என்று நினைக்கிறார்கள்; அது பிசகு.

**ஸநாதனம் என்றால் என்றும் உள்ளது, தர்மம் என்றால் வாழ்வைத்தாங்கும் சக்தி; எக்காலத்திலும் மனநனைத்தாங்கும் தெய்வ சக்தி நியமமே ஸநாதன தர்மம்.**

ஆத்மஞானம், தெய்வ நம்பிக்கை, தர்ம சாதனம், சத்தியவிரதம், கற்பு, ஸர்வாத்ம ஸமதர்சனம், அன்பு, அருள், மனோவாக்கு, காயசுத்தம்—இவையெல்லாம் என்றும் மனித வாழ்விற்கு இன்றியமையாத தருமங்கள். இவற்றைக் கைவிட்டால் மனித வாழ்வு பாழாகும். இவற்றை அடிப்படையாகக் கொண்டு மனிதன் ஸநாதன தர்மம் அல்லது யுகதர்மத்தை அனுஷ்டிக்கலாம். யுகதர்மமே அந்தந்தக் காலத்திற்கு வேண்டிய சீர்திருத்தமாகும்.

உதாரணம் தருகிறேன்: "என் பாட்டன் சக்கிமுக்கிக் கல் தட்டி விளக்கெண்ணெய் விளக்கேற்றினார்; இன்று நான் தீப்பெட்டியைத் தொடமாட்டேன்; மின்சார வெளிச்சத்தைப் பார்க்கமாட்டேன்" என்றாலாகாது; காலத்தால் வந்த முன்னேற்றத்தை ஏற்கத்தான் வேண்டும். பாட்டனார் ஓலை எழுத்தாணி

இக்காலக் காகிதம் பேனவுக்கு இணங்கித் தீரவேண்டும்.

ஒரு வக்கில் ஹைகோர்டில் அவசரமாக ஆஜராகவேண்டுமானால், தாத்தா காலத்துக் கட்டை வண்டியில் போய்க்கொண்டிருக்க முடியாது. மோட்டாரிலேதான் போக வேண்டும், அல்லது விசையான சாரட்டில். அந்தக் காலம் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் முன்னோர் படித்ததால், இந்தக் காலக் கல்லூரிகளை நிராகரிக்க முடியாது. என் மூதாதை அத்யயனம் பண்ணினார்; எனக்கும் அது போதும் என்று தற்காலம் அமோகமாகப் பெருகிவளரும் ஆங்கிலக் கல்வியையும் விஞ்ஞானங்களையும் நாம் புறக்கணிக்கக் கூடாது. அது யுக்தி, அனுபவங்களுக்கு விரோதமாகும்.

இதற்குமாறாக, ஒருவன் ஆங்கிலமே படித்து, தாய்மொழியை மறந்து ஹாட் பூட் பேர்வழியாகி, பிரம்மபத்திரப் புகைவிட்டுத் திரியக் கூடாது; இது சுருதி யுக்தி இரண்டையும் புறக்கணித்ததாகும். ஒரு பிராமணன் காயத்திரியையும் ஒழுங்காகச் செய்துகொண்டு, காலத்திற்குரிய கல்வியையும் கற்கவேண்டும். காலஞ் சென்ற மஹனீயர்களான, கிருஷ்ணஸ்வாமி ஐயர், மணி ஐயர், முத்துசாமி ஐயர், பாஷ்யம் ஐயங்கார், திவான் இராமையங்கார், திவான் மாதவராவ் முதலியோர் நித்திய கர்மானுஷ்டானங்களுடன் உத்யோக காரியங்களையும் நிறைவாகக்கவனித்துப்புகழ்பெற்றார்கள். நமது காலத்தில் மதன்மோகன் மாளவியா சுதர்ம வீரராக விளங்குகிறார். ஹிந்து மாணவர் கீதையும், குறளும் ஓதவேண்டும். மில்தன் ஷேக்ஸ்பியரையும் படிக்கவேண்டும். அரசமொழியும் கற்கவேண்டும், தாய்மொழியும் பயிலவேண்டும் — அப்போதுதான் அறிவு நிறைவாகும்.

ஜனசீர்த்திருத்தத்திற்காகப் பாட்டுக்கட்டும் கவிகள், மனம்போனபடி பாடிவிடக் கூடாது. சுருதி, யுக்தி அனுபவங்களை ஒட்டியே உள்ளெழுச்சியுடன் மனச்சாட்சி மகிழப் பாடவேண்டும், இன்றேல், அக்கவிதை மனிதரிடையே பிரிவினையும் கட்சியும் பிளவும் கலகமும் ஏற்படுத்தி, சமுதாயத்திற்குப் பெருந்தீமை விளைவிக்கும்

இப்போது சீர்திருத்தக் கவிகள் ஏராளமாக வருகின்றன. அவற்றை அலசிப்பார்த்தால்எல்லாம்சோவியத் ரஷ்யாவின்எதிரொலியாகவேயிருக்கும். நமதுநாடு தனக்குரிய சுதர்மத்தைக்கொண்டது. சுதர்மம் என்றால் பார்ப்பனருக்குரிய தர்மமன்று, சுயநல தருமமன்று, சாதிபேதமன்று. ஸ்வ+தர்மம் என்றால் மனிதனின் ஆத்ம இயல்பிற்குப் பொருந்திய நன்னெறி என்பதே பொருள். உளிபிடிப்பதும் வீடமைப்பதும் தச்சனுக்குச் சுதர்மம்; சம்மட்டியடிப்பது கொல்லன் சுதர்மம். ஓதல் ஓதுவித்தல் அந்தணன் சுதர்மம்; வாள் பிடித்தல் க்ஷத்திரியன் ஸ்வதர்மம். க்ஷத்திரியன் பிடிக்கும் வாளை, மளிகைக் கடை மாணிக்கஞ்செட்டி பிடித்தால் என்னவாகும்? பயிற்சி பெற்ற உபாத்தியாயர் போதிக்கும் வகுப்பை ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் நடத்தினால் எப்படி உருப்படும்? அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் நடத்தும் வழக்கை, அப்பாவு பண்டிதர் நடத்தமுடியுமா? உலகில் ஒவ்வொருவருக்கும் ஒரு புலமையுண்டு; அதை வளர்ப்பது சுதர்மம். அதைவளர்த்து மனித சமுதாயத்திற்குப் பயன்படுத்துவது சமதர்மம்.

நமதுமுன்னோரும் சமதர்மத்தைப் பயின்றவர்களே; தன்னுயிர்போல மன்னுயிரை மதிக்கும் கொள்கை

நம் அரிச்சுவடிகளிலும் காணும்.

இக்காலம் ரஷ்யாவை அபிநயித்துப் பேசும் சமதர்மத்தின் அடிப்படை வயிறுதான். எல்லாரும் பாடுபட்டு, விளைவைச் சமமாகப் பிரித்து உண்ணவேண்டும் என்பதுதான் ரஷ்யா காட்டிய உயர்ந்தகொள்கை. இதையே திருவள்ளுவர் போன்ற மஹான்கள் பாத்தூண் அல்லது பருத்துண்ணல் என்றனர். விருந்தோடுண்ணல் மருந்தினும் இனிதே என்பது நமது சிறு குழந்தைகளுக்கும் தெரியும். நல்ல பண்டத்தை நீயே சாப்பிடாதே; பிறருக்குத் தந்து சாப்பிடு என்று சுருதிகள் சொல்லுகின்றன—ஈந்துவத்தல் என்பதுதான் சிறந்த சமதர்மம். ஜாரை உருட்டித் தள்ளி லெனின் இரத்தக்கொடி நாட்டியது முதல் சரித்திரத்தைத் திருப்பினால் சோவியத் ரஷ்யா கொன்று குவித்தவர்களுக்குக் கணக்கில்லை. டிராட்ஸ்கி கொலையே போதும். பணக்காரர்களை நிர்மூலமாக்கியது ரஷ்யா. அங்கே கல்வியும் தொழிலும் பெருகியிருப்பது உண்மை. விளைவெல்லாம் குடியரசின் மூலம் ஜனங்களுக்குத் தேவையளவு பங்கு வைக்கப்படுவது உண்மை. இதனால் வறுமையில்லாமல் எல்லாரும் பிழைப்பதும் உண்மை. இன்று சோவியத் ரஷ்யா வயிறு நிரம்பியிருக்கிறது. ஆனால் வயிறுதானா வாழ்வு? உயிர், மனம், ஆத்மா, தர்மம்- இவற்றைப் புறக்கணிக்கமுடியுமா?

நமது பெரியார் வகுத்த சமதர்மம் ஆத்மலாபத்தையே அடிப்படையாகக்கொண்டது. அதுசெல்வரைக் கொல்லவில்லை; பொருளை நிரப்பச் சேர் (அன்னம் பஹுகுர்வீத); ஆனால் அறஞ்செய் (தர்மம் சர); ஈந்துதுய் (த்யக்தேன புஞ்ஜீத) என்கிறது.

உதாரணமாக ஓர் அரசன் வரி வசூலித்து அத்தனையும் பொதுஜன நன்மைக்கே பங்கு வைக்கிறான் இது, மேகங்கள் கடலைமுகந்து, தாமே வைத்துக் கொள்ளாமல், மழையாகப் பொழிவது போன்றது. அதே மாதிரி, தனவந்தருக்கு தானதருமங்கள் செய்யக் கட்டளையுள்ளது. ராஜா ஸர் அண்ணாமலை செட்டியார் நாலுகோடி சம்பாதித்தால், ஒன்றரைக்கோடி செலவிட்டு ஒரு சர்வகலாசாலை வைக்கிறார்; பல தருமங்களைச் செய்கிறார். அழகான மாளிகைகட்டுவதால், பலபேருக்குத் தொழில் தருகிறார். இதுதான் நமது நாட்டுச் சமதருமம். செல்வருக்கு ஈகை; ஏழைக்குத் தொழில் வேண்டும். பணம் பெட்டகத்தில் உறங்காமல் தொழிலாகிப் பலரை ஊட்ட வேண்டும். புதைத்து வைக்காதே; பூதம் கொண்டுபோதும் என்று நம்மவர் சொல்வதன் கருத்து இதுதான். பூட்டும் புதையலுமின்றிப் பணத்தைப் பொதுநலத்திற்குத் தருவதே நமது தர்மம்.

உதாரணமாக வள்ளல் டாக்டர் அழகப்பா, தமது செல்வத்தை ஆடைத் தொழிலாக்கி, ஆயிரக்கணக்கான ஏழைகளுக்குக் கஞ்சி வார்க்கிறார். தமது லாபத்தை நாட்டில் கல்வியும் தொழிலும் வளர அள்ளிவிடுகிறார். அதுதான் நமக்கேற்றதருமம். "பணக்காரரெல்லாம் ஒழியவேண்டும். அப்போதே, ஏழைகள் சுதந்தரமாவார்கள்" என்று பாடும் பாட்டு நமக்கு ஏற்றதன்று. ஏனெனில் நமது பாரதத் தர்மம் அறத்தை அடிப்படையாகக் கொண்டே பொருள் குவிக்கச் சொல்லுகிறது

அப்பொருளால் தானும் இன்புற்றுத்தனது சமுதாயமும் இன்புற்றுத் தன் ஆத்மசுகத்திற்கான தானதருமங்களும் செய்யக் கட்டளையிடுகிறது, நமது நாட்டில், ஒவ்வொரு இல்லறத்

தாருக்கும் பஞ்ச யக்ஞங்கள் உள்ளன. முன்னோர், விருந்தினர், உறவினர், தான், பொதுஜனம் ஆகியோருக்கு வரும்படியைப் பகுந்தளிக்க வேண்டும். காக்காய்க்கு ஒரு பிடி போடாமல் நாம் சாப்பிடுவதில்லை. பூததயையும், சர்வாத்மப் பிரேமையும், சமதரிசனமும், தாராளமான ஈகையும் நமது சமுதாய வாழ்வுடன் பின்னிக்கொண்டுள்ளன. குறள் கீதை இரண்டையும் பின்பற்றினால் நலமுறலாம். உலகமே இவ்விரண்டினையும் பின்பற்றினால் சுகமாக வாழலாம். ஆதலால் நமது புதுமைக் கவிகள் அறம் பொருள் இன்பம் வீடு, ஈந்துவித்தல் தியாகபோகம் இவற்றைக் கொண்ட சமதர்மப் பாடல்களையே பாடுக!

## நமது சமதர்மம்

தேனைச் சேர்க்கும் தேனீபோலத்
தியாகம் செய்வோமே.
வானமேகம் போல உலகில்
வளம் பொழிவோமே.

பாடுபட்டுத் தேடித் தேடிப்
பங்கு வைத் துண்போமே
நாடுசெழிக்க நல்ல தொழிலை
நாட்டி வளர்ப்போமே.

மன்னுயிரைத் தன்னுயிர் போல்
மதித்து வாழ்வோமே.
இன்னுயிர்க் கடமை தன்னை
இனிது செய்வோமே.

அறமும் பொருளும் அருளும் இன்பும்
அணிந்து வாழ்வோமே
பரமும் இகமும் பொலிய நன்மை
பழுக்க வாழ்வோமே.

-சுத்தானந்த பாரதி

ஸ்ரீமதி. எஸ். அம்புஜம்மாள்.

# விவாகச் சீர்திருத்தங்கள்

## 3. விசேஷ விவாகச் சட்டம்

ஆரிய பிரம்ம சமாஜங்கள் ஹிந்து மதத்தைச் சேர்ந்த உட் பிரிவுகளே. ஸநாதன ஹிந்துக் களின் அபிப்பிராயங்கள், காலப் போக்கிற்குச் சற்றும் இடம் கொடுக் காமல் ஒரே குறுகிய மனப்பான் மையைக் காட்டிவந்ததன் பயனுக உண்டாகிய சமூக வேறுபாடுகள் இவை. இந்தச் சமாஜங்களுக்கு மூல புருஷர்கள் முறையே தயானந்த சரஸ்வதி, ராஜாராம் மோஹன்ராய் என்ற பெரியோர்கள். இந்த இரண்டு ஸமாஜத்தார்களும் பெண் கள் முன்னேற்ற விஷயத்திலும், படிப்பு விஷயத்திலும், ஹிந்து விவாக விஷயத்திலும் முற்போக் கான அபிப்பிராயம்உடையவர்கள். ஆகையால் அவர்களுடைய ஆதர வில் கலப்பு-விவாகங்களும், விதவா விவாகங்களும் நடைபெற்றுவந் தன. கலப்பு-விவாகங்களைச் சட்டப் படி செல்ல வைப்பதற்காகவே, மேற்படி "விசேஷ விவாகச் சட் டம்" என்ற ரிஜிஸ்தர் விவாகம், கொண்டுவரப்பட்டது.

முதலில் இச் சட்டம் 1872-ம் வருஷம் அமுலுக்கு வந்தது. அதன் பின், பல வருஷங்களில், பல திருத் தங்கள் பெற்றுக் கடைசியாக 1937-ம் வருஷத்திய திருத்தத் துடன் இப்போதிருக்கும் உருவில் ஹிந்துலாவில் அமைக்கப்பட்டிருக் கிறது. முதலில் இந்தச் சட்டத்தின் படி, "நாங்கள் இந்துமதத்தைச் சேர்ந்தவர்கள் இல்லை" என்று சொல்லிக்கொள்பவர்களே ரிஜிஸ் தர்மூலம் விவாகம் செய்துகொள்ள முடியும். ஆனால் சொத்துரிமை விஷயத்திலோ, "இந்துக்கள் இல்லை' என்று சொல்லிக்கொண்டவர்களுக் கும், இந்துலாவின்படிதான் சொத்து வார்சு உண்டு என்று இருந்தது.

இப்பொழுது இந்தச் சட்டம் பின் வருமாறு இரு பகுதியாக இருக் கிறது. அதாவது, "ஹிந்து, கிறிஸ்தவ, யூத, மஹம்மதிய, பார்ஸி, பௌத்த, ஜைனர் முதலிய எந்த மதத்தையும் சேராத இருவர், இந்தச் சட்டத்தின் கீழ் விவாகம் செய்துகொள்ள முடியும்—என்பது ஒரு பகுதி,

ஹிந்து, சீக்கிய, பௌத்த, ஜைனர்கள் ஆகிய இந்த நாலு மதங்களைச் சேர்ந்த எவரேனும் இருவர் பரஸ்பரம், தங்களுக்குள் இந்தச் சட்டத்தின் கீழ் விவாகம் செய்துகொள்ளமுடியும்'—என்பது மற்றப் பகுதி.

### ரிஜிஸ்தர் விவாக நிபந்தனைகள்

1. இந்தச் சட்டப்படி விவாக சமயத்தில், ஏற்கெனவே ஒரு புருஷனே, மனைவியோ, உயிருடன் இருப்பது கூடாது. அப்பொழுது இந்த விவாகம் செல்லுபடியாகாது.

2. விவாகம் செய்துகொள்ள விரும்பும் புருஷனுக்கு 18-வயதும், பெண்ணுக்கு 14 வயதும் பூர்த்தி யாகியிருக்கவேண்டும்.

3. விவாகம் செய்து கொள்ள விரும்புகிறவர்களில் ஒருவருக்கோ, அல்லது இருவருக்குமோ 21-வயது பூர்த்தியாகியிராவிட்டால், அவர்கள் தகப்பனுர் அல்லது ரட்சகருடைய அனுமதி இந்த விவாகத்திற்கு

அவசியம்.

4. வதூவரர்கள் இருவரும் பரஸ்பரம் ரத்த ஸம்பந்தம் உள்ளவர்களாகவோ, நெருங்கிய பந்துக்களாகவோ இருப்பார்களே யானாலும், அல்லது உறவு விஷயமாகத் தத்தம் சொந்தச் சட்டப்படி (Personal Law) விவாகம் செய்துகொள்ளக் கூடாதவர்களாகவோ இருப்பார்களே யானாலும், அப்பொழுதும் விவாகம் செல்லுபடியாகாது.

நிபந்தனை விலக்கு

ஆனால் மேற்படி எந்தச் சொந்தச் சட்டமோ, பழக்க வழக்கமோ, அதாவது — கோத்ரம், ப்ரவரம், ஜாதிவிலக்கு இவை போன்றவை -நெருங்கிய ரத்தஸம்பந்தம், பந்துத்வம்' என்ற இந்த இரண்டு காரணங்களைக் கொண்டும், இந்த ரிஜிஸ்தார் விவாகத்தைத்தடைசெய்யமுடியாது.

மேலும் 'பந்துத்வம், ரத்தஸம்பந்தம்' விஷயத்தில், கீழ்க் கண்ட விதிவிலக்குத் தவிர அதாவது—வதூவரர், ஒருவர் மற்றவருக்கு நேர் மூதாதையாகிறார்; அல்லது, ஸகோதர ஸகோதரி ஸ்தானத்தில் இருக்கிறார்; அல்லது ஒருவர் மற்றவருக்குப் பாட்டனுக்குப் பாட்டனர் என்பதைக் காட்டிலும் நெருங்கிய உறவு உள்ளவராக இருக்கிறார்; அல்லது இருவரும் ஒரே மூதாதை உடையவராய் இருக்கின்றனர்—என்ற இந்தக் காரணங்களன்றி, சொந்தச் சட்டத்தையோ, (Personal law) பழக்க வழக்கத்தையோ, ஆதாரமாகக்கொண்ட, மற்ற எந்த உறவும் இந்த விவாகத்தைத் தடை செய்யக் காரணமாக இருக்க முடியாது.

ஏற்கெனவே விவாகமாகி, உயிருடன் உள்ள புருஷனையோ, மனைவியையோ உடையவர், இந்தச் சட்டப்படி விவாகம் செய்துகொண்டால்,—அவர்கள் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களானாலும் சரி,—அது 'க்ரிமினல்' குற்றமாகும்: விவாகமும் செல்லாது.

இந்த நிபந்தனைகளை மீறி எவரேனும் விவாகம் செய்துகொள்வதாக நோட்டீஸ் கொடுத்திருப்பாரேயானால், விவாகத்தைத் தடைசெய்ய விரும்புகிறவர்கள்,ரிஜிஸ்ட்ராருக்குப் பதினாலு நாளுக்குள் எதிர் நோட்டீஸ் தாக்கல் செய்யவேண்டும்.

## விவாக முறை.

இந்தச் சட்டப்படி ரிஜிஸ்தர் விவாகம் செய்துகொள்ள விரும்புகிறவர்களுள், எவரேனும் ஒருவர் தங்கள் ஜில்லாவில் உள்ள விவாக ரிஜிஸ்ட்ராருக்கு எழுத்து மூலம் நோட்டீஸ் கொடுத்துத்தங்கள் விருப்பத்தைத் தெரிவித்துக்கொள்ள வேண்டும்.

ரிஜிஸ்ட்ராருக்கு நோட்டீஸ் கொடுக்குமுன் வதூவரர்களில் ஒருவராவது அந்த ஜில்லாவில் குறைந்த பட்சம்பதினாலுநாள்களாவதுவசித்து வந்தவராக இருக்கவேண்டும்.

ரிஜிஸ்ட்ராருக்கு நோட்டீஸ் தாக்கல் செய்து பதினாலுநாள்கள் கழிந்த பிறகே, விவாகம் நடைபெறலாம். ஆனால் அதற்குள் ரிஜிஸ்ட்ரார் விவாகத்தடை நோட்டீஸ் பெற்றிருப்பாரேயானால், அன்றுமுதல் 14-நாள்க்குள் வரை விவாகத்தைத் தடை செய்துவைக்க ரிஜிஸ்ட்ராருக்கு அதிகாரம் உண்டு. அந்தத் தவணைக்குள் விவாகத்திற்கு எதிராக எவரேனும் கோர்ட்டில் கேஸ் தாக்கல் செய்யாமலிருந்தால்,விவாகத்தை நடத்தும்படி ரிஜிஸ்ட்ரார் அனுமதி கொடுக்கலாம்.

## விவாகச் சடங்கு.

ரிஜிஸ்ட்ரார் முன்பும், மூன்று சாக்ஷிகள் முன்பும் மேற்படி விவாகம் நடைபெறவேண்டும். ரிஜிஸ்ட்ரார் ஆபீஸிலோ, அல்லதுஅவர் வரக்

கூடிய சமீப இடத்திலோ விவாகம் நடைபெறலாம். விவாகம் நடைபெறுவதன் முன், சர்க்காரால் அச்சிடப்பட்ட பாரத்தைத் தம்பதிகளும் சாக்ஷிகளும் பூர்த்திசெய்து கையொப்பமிட்டுக் கொடுக்கவேண்டும், ரிஜிஸ்ட்ராரிடம்,

வதூவரர்கள் எவருக்கேனும் 21 வயது பூர்த்தியாகியிரா விட்டால், அவருடைய தகப்பனுருடையவோ, அல்லது ஸம்ரக்ஷகருடையவோ, கையொப்பமும் அவசியம். ரிஜிஸ்ட்ரார் ஆபீஸில் வதூவரர்களும்சாக்ஷிகளும் அச்சிட்டுள்ள பாரத்தில் கையொப்பமிடுவது, ரிஜிஸ்ட்ரார் முன் வதூவரர்கள் இருவரும் பரஸ்பரம் பார்த்து, "நான் (a) உன்னைச் (b) சட்டப்படி மனைவியாக—கணவனைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறேன்" என்றுசொல்வது—இவ்வளவுதான், இந்த விவாகத்திற்கான சடங்கு.

விரும்புகிறவர்கள் முன்னமேயோ, பின்போ அவரவர் மதக்கொள்கைப்படி, பழக்க வழக்கப்படி, வைதிக முறையொட்டிய விவாகச் சடங்குகளையும் நடத்தி வைத்துக் கொள்ளலாம். ஆனால் அது இந்த விவாகத்தை எந்த விதத்திலும் பாதிக்கமாட்டாது. ரிஜிஸ்ட்ரார் இந்த விவாக விஷயத்தை அங்குள்ள புஸ்தகத்தில் பதியவைத்துக்கொள்வார். எவரேனும் அந்தப் புஸ்தகத்தைப் பரிசோதிக்க விரும்பினாலும் பரிசோதித்துக்கொள்ளலாம். புஸ்தகம் திறந்தே வைக்கப்படும். ரிஜிஸ்ட்ரார் ஆபீஸில் இந்தச்சட்டத்தின்கீழ் நடக்கும் விவாகங்களுக்கு விவாக ரத்து உண்டு. 'இந்தியர் விவாக ரத்து'-என்ற சட்டப்படி இந்த விவாகம் ரத்து செய்யப்படலாம். இதை இந்துலா அனுமதிக்கிறது.

ஆனால் மற்ற விவாகங்களை இந்த ரத்துச் சட்டம் பாதிக்காது. ஏற்கெனவே நடந்துள்ள விவாகங்கள் செல்லத்தான் செய்யும்; அதாவது பழைய விவாகத்தை ரத்து செய்து விட்டு இந்தச் சட்டப்படி புதிய விவாகம் செய்து கொள்வது என்பது முடியாது.

இந்த விவாகச் சட்டப்படி விவாகம் செய்து கொண்டவர்களுடைய மக்கள் இதே சட்டப்படி விவாகம் செய்துகொண்டால் 'ரத்த சம்பந்தம் பந்துத்துவம்' இரண்டு விஷயத்திலும் பெற்றோருடைய சொந்தச் சட்டப்படியே நடக்கவேண்டும்.

அவிபக்த குடும்பத்தைச் சேர்ந்த ஹிந்து, சீக்கிய, பௌத்த, ஜைனர்கள் ஆகிய இந்த நாலு மதங்களைத் தழுவிய எவரேனும் இந்தச் சட்டத்தின்கீழ் விவாகம் செய்துகொண்டால், அவரை அந்தக் குடும்பத்திலிருந்து பிரிந்துபோனவராகவே வைத்துக்கொள்ள வேண்டும். ஆனால் சொத்துரிமை விஷயத்தில், 'ஜாதிப் பிரதிகூல விலக்குச்சட்டம்' என்ற சட்டப் பிரகாரம் அவர்களுக்குக் குடும்ப சொத்தில் பாத்யதை உண்டு.

ஆனால் இந்தச் சட்டப்படி விவாகம் செய்துகொண்டவர்களுக்கு, மத ஸம்பந்தமான உத்யோகமோ, தொழிலோ, மடாலய நிர்வாகமோ, தர்ம கைங்கரிய நிர்வாகமோ, வகிக்கும் உரிமை கிடையாது.

இந்தச் சட்டப்படி விவாகம் செய்து கொள்பவர்களுடைய சொத்துப் பாத்யதையும், அவர்களுடைய மக்களுடைய சொத்துப் பாத்யதையும் "இந்தியர் வாரிசு உரிமைச் சட்டம்" என்ற சட்டப் பிரகாரம் ஏற்படும்,

நாங்கள் (இந்துக்கள் இல்லை) என்று கூறிக்கொண்டு, இந்தச் சட்டத்தின்கீழ் விவாகம் செய்து கொள்ளும் மாஜி இந்துக்களின்

சொத்து விஷயத்திலோ, இந்து லாப்படிதான் சொத்துரிமை.

இந்தச் சட்டத்தின் கீழ் விவாகம் செய்துகொள்ளும் ஹிந்து, பௌத்த, ஜைன, சீக்கிய மதங்களைச் சேர்ந்த எவருக்கும் ஸ்வீகார உரிமை கிடையாது.

இந்தச் சட்டப்படி விவாகம் செய்துகொள்ளுபவர், ஹிந்து, பௌத்த, ஜைன, சீக்கிய மதங்களைச் சேர்ந்த எவராயினும் சரி, அவருடைய தகப்பனருக்கு வேறு புத்திரன் இல்லாவிட்டால், அவர் தம்முடைய சொந்தச் சட்டப்படி (Personal Law) தமக்கு இஷ்டமான ஒரு புத்திரனை (மதச் சடங்குகள், ஈமக்கடன் செய்வதற்காக) ஸ்வீகாரம் செய்துகொள்ள உரிமை உண்டு. சொத்திலோ உரிமை இருவருக்கும் உண்டு; (ஸ்வீகார புத்திரன், ஔரஸ புத்திரன்) இருவருக்குமே சம உரிமை

---

## புனல் விழா

### "குகப்ரியை"

சாயுங்காலம். சூரியன் மலைவாயில் விழும் தருணம். மேற்கென்னும் திரையிலே வித விதமான வர்ண சித்திரங்களைத் தீட்டித் தீட்டிக் கலைத்துக் கொண்டிருந்தாள் இயற்கையரசி. இந்த அழகிய காட்சியிலேயே ஈடு பட்டவளாய் மலர்ந்த கண்களுடன் அந்த அற்புதத்தைத் தானும் வரைபவள் போல் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தாள் அரசிளங்குமரி. அவள் மனம் எங்கெங்கே சுழன்று கொண்டிருந்ததோ? அந்தி மயங்க விசும்பிடைத் தோன்றும் ஆசைமதி மெல்லமெல்ல உதித்ததையும் அவள் கவனிப்பவளாகவே தோன்றவில்லை. தன்னையே உற்று நோக்கியவளாய் உட்கார்ந்திருக்கும் மாணவிக்கு எழுதி எழுதி அழித்துக்காட்டும் ஆசிரியையே போல, பல்வேறு வர்ணங்களை விடுத்து மெல்லிய கருநிறத்தைப் பூசத் தொடங்கினள் பிரகிருதிதேவி.

மேன்மாடத்தில் நிலா முற்றத்தில் உட்கார்ந்திருந்த அவள் திடுக்கிட்டாள் "அடாடா! இதற்குள் பொழுதுசாய்ந்து இருளும் வந்துவிட்டதா!" என்றுகேட்பவள்போலத் திரும்பினள். தன் பின்னே, சேர நாட்டு அரசிளங்குமரன் ஆட்டனத்தி நிற்பதைக் கண்டதும் அவள் முகம் நாணத்தால் சிவந்தது. அவன் முகத்திலும் ஒரு சிறு முறுவல், நாட்டியக் கலையிலே தேர்ந்த அவன் நின்ற நிலை கைதேர்ந்த ஒரு சிற்பியினுற் செதுக்கப்பெற்ற உயிரோவியம் போல் தோன்றிற்று அவள் கண்களுக்கு. சட்டென்று எழுந்தாள் அவள்.

"என்ன? ஆதி! நிஷ்டை கலைந்ததா?"

"அரசரைக் கண்டும்கூட நிஷ்டை கலையாவிட்டால்?

"கண்மூடி மௌனியாயிருப்பவருக்கு வருகை எப்படித் தெரியும்?"

"கண்களுக்குத் தெரியாது: ஆனல் இதயத்துக்குத் தெரியாதா?"

"எங்கே! இதயத்துக்குள் எப்படித் தெரியும்? எல்லோருக்குமே தெரியுமோ? கவியரசிகளுக்கு மட்டுமே தெரியுமோ?

"இந்தப் பரிகாசம் தானே கூடாது" என்று கெஞ்சிக் கேட்பது போல் அவனை ஏறிட்டுப் பார்த்தாள் அவள்.

கண்ணொடு கண் இணை நோக்கின்......

* * *

அவர்கள் மனம் ஆனந்த மிகுதியினால் நிரம்பியிருந்தது. அவர்கள் சிந்தனைகளும் பேச்சும், மறுநாள் நடைபெற விருந்த புனல் விழாவின் மீதே சுழன்றுகொண்டிருந்தன. சிறந்த கலா ரஸிகர்களான இந்த இளங்காதலர்கள், என்னென்ன பாடல்களைப் பாடவேணும், எந்தெந்தக் கூத்துக்கள், ஆற்றின் கரையில் திறந்த வெளியிலே, காற்று வீசும் அந்த இசை அரங்குக்கேற்றது, என்பதையெல்லாம் பற்றி நெடுநேரம் பேசி விவாதித்துக் கொண்டிருந்தனர்.

சந்திரன் வானவீதியிலே வெகு வேகமாக பவனி வந்துகொண்டிருந்தான். அவளது மலர்க்கரங்கள் அவன் மடிமீதிருந்தன. "கைவழி நயனம் செல்ல, அக்கண்வழி மனமும் செல்ல" மறுநாள் அவள் நடிக்கப்புகும் அந்தக் கூத்தின் சிற்சில பகுதிகளைக் கற்பனைக் கண்களினால் கண்டு மெய்மறந்திருந்தது அவன் மனம்.

* * *

கழார் நகரத்தின் காவிரிக்கரை. விஸ்தாரமான மணல்வெளி. மிகப் பெரிய கூட்டம். விதவிதமான நிறங்களில் உடையணிந்த ஆடவரும் மகளிரும் அகத்திலே மகிழ்ச்சி பொங்க அங்கங்கே சிறு சிறு வட்டமாய்க் கூடி இன்பகரமான சம்பாஷணைகளில் ஈடுபட்டிருந்தனர். சற்று நேரத்திற்கொரு முறை அவர்கள் கண்கள் யாரையோ எதிர் பார்ப்பதுபோல் சுழலும்; யாழும் குழலும் அங்கங்கே ஒலித்துக்கொண்டிருந்தன. மத்தளங்களின் முழக்கம், ஆற்றின் சலசலப்புடன் கலந்து ஒரு விசித்ரமான நாதத்தை உண்டு பண்ணிக்கொண்டிருந்தது. அழகிய இளம் பெண்கள் மேகலையும் சிலம்பும் ஒலிக்க அங்கு மிங்கும் உலவிக்கொண்டிருந்தனர். ஏதேதோ பாடல்களை மிகவும் மெல்லியதாய் அவர்கள் வாய் இசைத்துக்கொண்டிருந்தது.

சற்றுத் தொலைவில் "ஆதிமந்தியாருக்கு வெற்றி! இளங்கோ ஆட்டனத்தியாருக்கு வெற்றி!! சேர நாட்டு மன்னனுக்கு வெற்றி! கரிகால் திருமாவளவன் செல்விக்கு வெற்றி!" என்ற கோஷம் வானை அளாவிற்று. எல்லோரும் எழுந்தனர், தனது பரிவாரங்கள் சூழ, ஆட்டனத்தியும், ஆதிமந்தியும் தோன்றினர், வணக்கம் செலுத்துபவர்களுக்கு புன்முறுவலுடன் பிரதி வந்தனம் செய்து தான் நடிக்கவேண்டிய ஆடரங்கை அடைந்தான் அரசன். கூத்தும் தொடங்கிற்று.

மக்கள் ஒரு பெரும் வட்டமாகச் சூழ்ந்து உட்கார்ந்தனர். சபை முழுவதும் ஒரே அமைதி. அரசி தனது இனிய குரலாற் பாடத்தொடங்க, அகன்ற அந்தக் காவிரி நதிகூட அந்த இன்னிசையிலே ஈடுபட்டு அமைதியாகச் சென்றுகொண்டிருப்பது போலத் தோன்றிற்று.

* * *

அடாடா! இன்று புனல் விழாவன்றோ? புதுப் புனல் விழாவிற்குரிய வெள்ளப் பெருக்கோ வேறு அறிகுறியோ ஒன்றையுமே காணோமே? ஏனோ? நொப்பும் நுரையுமாய் அலைக்கைகளை வீசிக்கொண்டு இருகரையும் புரள ஓடும் பொன்னி இன்று ஏன் இவ்வளவு அடக்கமாகவும், அமைதியாகவும் ஓடுகிறாள்" என்று சிந்தித்தவனாய் ஆடிய படியே, கரையிலிருந்து தண்ணீரில் இறங்கினான் அவன்.

மேற்கிலிருந்து சென்னிறத்தோடு பொங்கிவரும் காவிரியின் அழகைப் பார்ப்பதிலேயே ஈடுபட்டு நின்ற

சோழன் மகள் தன் துணைவன் நீர் விளையாடப் புகுவதைக் கவனிக்க வில்லை. ஓரே ஒரு நிமிஷம். "ஹோ" வென்ற பேரிரைச்சல். கூடியிருந் தவர்கள் எல்லோரும் "ஓடு! ஓடு!! என்ற கூக்குரலுடன் மரங்களடர்ந்த மேட்டுப் பாங்கிலும், கரையை அடுத்த புதர்களிலும் ஏறிக்கொண்டனர். பெருகி வரும் அந்தக் காவிரியோ ஒன்றையுமே சட்டை செய்யாதவளாய் படுவேகத்துடன் தன் காதலனை கடலரசனை நாடிச் சென்று கொண்டிருந்தாள்.

கரை முழுவதும் ஒரே பரபரப்பு. மளமளவென்று தண்ணீர் ஏறிக் கொண்டே வருகிறது. "அவர் எங்கே? இவர் எங்கே? குழந்தைகள் எங்கே? பத்திரமாய்க் கரை சேருங்கள். ஏறு! ஓடு! மரத்தைப் பற்றிக்கொள்" என்றெல்லாம்கவலையும் ஆத்திரமும் பீதியும் கூடிய பல குரல்கள். ஆனால் பேதை ஆதிமந்திக்கு தன் கணவன் சுழலில் அகப்பட்டுக் கொண்டது போலவும், கைகளை உயர்த்தி உதவிக்குஅழைப்பது போலவும் தோன்றத் திடுக்கிட்டாள். அந்த வெள்ளத்தில் யார் குதித்து அவனைக் கரைசேர்க்க முடியும்? அவன் நீச்சிலேயும் வல்லவன்தான், ஆனால் என்ன?

வெள்ளமோ படுவேகம். ஆறோ காவிரி. மடுவும் சுழலும். கடலைச் சமீபித்த இடம். முதலையும் சுறுவும் மிகுதி. "ஐயோ!" என்ற கூக்குரல், வெள்ளத்தைக் காட்டிலும் வெகு வேகமாக வெறிகொண்டவள் போல ஓடத்தொடங்கினாள் அவள். சோழநாட்டு வீரர்களுள் சிலர் ஓடும் வெள்ளத்திலே குதித்து ஆட்டனத்தியைத் தேடத்தொடங்கினர்.

அவளை மேலும் ஓடாமற் தடுப்பதிலே முனைந்தனர் சிலர்.

இடியும் மின்னலுமாய் காரிருள் கவியத் தொடங்கிற்று. ஒன்றுமே தோன்றாதவளாய்த் திகைக்கலானாள் அவள்.

* * *

துன்பங்கள் தொடர்ந்துவரும் பொழுது இயற்கைக்கு மாறான விஷயங்களும் நடக்கக்கூடாதவைகளும், நடவாதவைகளும் சிந்தையில் இடம் பெறும். இது மனிதர் இயல்பு. கல்வியிலும், கேள்வியிலும் ஒழுக்கத்திலும் சிறந்த ஆதிமந்தி பிரிவாற்றாமை என்னும் பெருந் துயரால், நாளுக்குநாள் உருகலானாள். மாதங்கள் பல சென்றன. அவளது அழகிய பொன்மேனி, மெலிந்து கருத்தது. குழல்கள் சடையாயின. இந்த நிலையில் காவிரியும் ஒரு பெண்தானே? என் துணைவனது வீரத்தையும் கலைத்திறனையும் கண்டு ஆசைகொண்டு கவர்ந்து விட்டாளோ? என்று ஒரு சமயம் நினைப்பாள். மறுகணம் சீ! சீ!! அப்படியிராது! எங்கேயாவது கரைசேர்ந்து வீரர்கள் கூட்டத்தின் நடுநாயகமாய் விளங்குகிறாரோ? அல்லது நாட்டியக்கலையில் வல்லவராயிற்றே. எதாவதொரு நடனசாலையில் தங்கி என்னை மறந்துவிட்டாரோ? என்றெல்லாம் நெடுந் தூரம் செல்லும் அவள் சிந்தனைகள் கடைசியாகக் காவிரி கடலிற் கலக்குமிடம்வரை சென்று தேடுவது என்ற முடிவுக்கு வந்தவளாய் எழுந்தாள்.

* * * *

நீலக்கடலினின்றும் முளைத்தெழும் மணிவிளக்கேபோல் மெல்ல வந்துகொண்டிருந்தான். கதிரவன். கடலை அடுத்த கரை, கரை ஓரத்தில் ஒருசரிவில் சின்னஞ்சிறு குடிசை, அதன் வாயிற்படியருகில் அழகிய ஒரு இளைஞன் இந்தக் 'குடிசையில் இவன் வசிக்கத்

தக்கவனா? இவன் யார்?' என்ற கேள்வியே காண்போர் மனதில் முதலில் எழும். அவன் முகத்திலே சோகத்தின் சாயை. "அருணன் உதிப்பதும், அம்புயம் விண்டது" மான பல காட்சிகளும் காவிரியை அடுத்த மருத நிலத்திலே அவனும் அவளுமாய்க் கண்டு மகிழ்ந்த பல காட்சிகளும், ஒன்றன்பின் ஒன்றாய் நினைவிற்குவர, அவன் கண்களிலே கண்ணீர் துளித்தது. "இங்கிருந்து எத்தனை காதங்கள் செல்ல வேணுமோ? அவள், என் கண்மணி என்ன செய்கிறாளோ? உயிருடன் தானிருக்கிறாளோ! நான் இறந்து விட்டேனென்று காவிரியில் அடைக்கலம் புகுந்துவிட்டாளோ? இல்லாவிட்டால் தேடித் திரிகிறாளோ? அவள் கவிதையுள்ளம், என்னென்ன சோகக் கவிதைகளை இசைத்திருக்குமோ? ஆ! அவள் கவிதைகளின் அழகுதான் என்ன? என்று சிந்தித்தவனைக் காலைக் கடன்களை முடிக்கக் கடலை நெருங்கினான் "ஏன்? என்ன? இவ்வளவு தயக்கமென்ன?" என்று கேட்டவளாய்க் குடிசையினின்றும் வெளியே வந்தாள் ஒரு இளமங்கை.

"ஒன்றுமில்லை" என்று அவன் வாய் முணுமுணுத்தது. மனத்துள் பெரிய போராட்டம். ஆதிமந்தியை மீண்டும் காணப்பெறுவேனா? என்ற ஏக்கம் ஒருபுறம்: கடலினின்றும் காப்பாற்றிய இக் குறப்பெண்ணை என்ன செய்வது? உயிரினும் மேலாகக் கருதுகிறாளே. இவளது மெய்யன்புக்கு இடமளிப்பதா?...என்று பலவிதமான சிந்தனைகள். இந்த நிலையில் இன்னது செய்கிறோமென்றுஉணர்வே அற்றவனாய் தடதடவென்று அலைகளை நோக்கிச் சென்றான். ஐயோவென்றலறினாள் குறப்பெண். அதே சமயம் ஒரு பெரிய அலை அவனை உருட்டிக் கரை சேர்த்தது. அங்கேயே உட்கார்ந்துவிட்டான் அவன்.

எவ்வளவு நேரம் அப்படி உட்கார்ந்திருந்தானோ தெரியாது.

கடந்த பல மாதங்களாய் நடந்த சம்பவங்கள்; புனல் விழாவில் நேர்ந்த அந்தப் பேராபத்து எல்லாம் ஒன்றன் பின் ஒன்றாய் இறகு முளைத்து எதிரே வந்தன. இதன் நடுவில்---அற்புத உலகம். பொன்மயமான ஒளி, விசித்திரமான தேவ்கானம்காற்றிலே மிதந்துகொண்டிருந்ததுஅவன் செவிகளுள் வீழ்ந்தன.

மாலையும் கையுமாய் ஆதிமந்தி தன்னை வரவேற்கக் காத்திருப்பது போல் தோன்ற அவன் திடுக்கிட்டான். 'இதென்ன! கனவா? நினைவா? சுபசூசகமா? அல்லது அபசகுனமா?' என்று அவன் சிந்திப்பதற்குள், எங்கிருந்தோ "அத்தியோ! அத்தியோ! என்ற குரல் எங்கிருந்தோ கேட்டது. மெல்ல சமாளித்துக்கொண்டு எழுந்து நின்றான். "இது, உண்மையா? பிரமையா?" என்று செவிசாய்த்துக் கேட்கலானான்.

வரவரக் குரல் சமீபித்தது. வெறிபிடித்தவன்போல் நனைந்த வஸ்திரங்களுடன் அவிழ்ந்த உத்தரீயமும் சிகையும் காற்றிலே பறக்க, ஒரே ஓட்டமாக குரல் வந்த திசையை நோக்கித் தறிகெட்டு ஓடினான் அவன்.

பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ?

* * * *

ஆதிமந்தியாரது கவித்திறனையும் பிரிவாற்றாமையினால் அவர் பட்ட துயரையும் சங்கநூல்களில் அன்

(தொடர்ச்சி : 17-ம் பக்கம்)

# மனோராஜ்யம்

என்னென்ன செய்வானோ—என்குழந்தை
ஏதுக்குப் பிறந்தானோ?
சின்னஞ்சிறு உடலுக்குள்—உருக்கொள்ளும்
திறம்சொல்லத் தரமில்லை.

ஆனைகட்டிச் சேனைகட்டி—என்குழந்தை
அரசாளப் பிறந்தவனோ?
வானைமுட்டும் வீடுகட்டி—அதிலென்னை
வாழ்ந்திருக்கச் செய்பவனோ?

நாடாளும் கோல்நடுங்க—என்குழந்தை
நாடசைய நாவசைப்பான்.
தேடாத திரவியத்தை—எனக்காகத்
தேடிவைப்பான் என்குழந்தை.

காணாத ஞானமெல்லாம்—என்குழந்தை
கண்டுலகை நடத்திடுவான்.
கோணாத நீதிசெய்து—வானோரும்
குதுகலிக்கச் செய்திடுவான்.

கம்பனைப்போல் கவியரசாய்—என்குழந்தை
கவிவாணர்க் கமுதளிப்பான்.
அன்பிருக்கும் ஆலயமாய்த்—துன்பத்தை
அழித்து இன்பமருள்வான்.

ஆகாசப் படைக்கஞ்சும்—ஆருயிரின்
அச்சத்தைத் தொலைத்திடுவான்.
சாகாமல் வாழ்ந்திருக்க—மருந்துகண்டு
தந்திடுவான் என்குழந்தை.

இன்னுமென்ன செய்வானோ?—என்குழந்தை
என்னவிந்தை செய்வானோ?
எண்ண எண்ணத் திகைத்ததடி!—என்நெஞ்சம்
இன்பமய மானதடி!

பி. ஆர். ராஜசூடாமணி

ஸ்ரீ. உ. வே. சி கோ. பாஷ்யகார் ஸ்வாமி

## ஸ்ரீ பாடலாத்ரி நரஸிம்ஹர் அஷ்டச்லோகி

6. சிந்தயே ஸததம் சுபாஸ்பத பக்த சித்த விஹாரிணம்
மத்ஸ்ய கச்சப கோல வாமன பார்கவாத்ம விராஜிதம்
ராகவம் ஹலதாரிணம் பகவைரிணம் ஸுககாரணம்
சௌரிணம் ச்ரிதகல்கிருபமஜம் ந்ருஸிம்ம முருக்ரமம்

| | |
|---|---|
| சுபாஸ்பத பக்த சித்த விஹாரிணம் | சுபங்களின் இருப்பிடமான பக்தர்களின் (பாகவதர்களின்)மனதில் விளையாடுகிறவரும் - (வஸிப்பவரும்) |
| மத்ஸ்யகச்சப கோல வாமன பார்க்கவாத்ம விராஜிதம் | மீனாய் ஆமையாய், வராகமாய் குறளாய் (வாமனனாய்) பரசுராமராயுமுள்ள திருவுருவங்களால் விளங்குகிறவரும் |
| ராகவம் | —ஸ்ரீராமனையும் |
| ஹலதாரிணம் | —பலராமனையும் |
| பகவைரிணம் சௌரிணம் | பகாஸுரனுக்கு விரோதியான ஸ்ரீ க்ருஷ்ணனையும் |
| ச்ரித கல்கிருபம் | —கல்கி அவதாரம் செய்தவராயும் |
| அஜம் | —பிறப்பில்லாதவராயும் |
| உருக்ரமம் | —த்ரிவிக்ரமாவதாரம் செய்தவரும் |
| ஸுககாரணம் | —ஸுகங்களுக்குக் காரணமாயுமுள்ள |
| ந்ருஸிம்மம் | —ஸ்ரீ நரஸிம்மனை |
| ஸததம் சிந்தயே | —எப்போதும் தியானிக்கிறேன். |

பக்தர்களை ரக்ஷிக்கவும் துஷ்டர்களை நாசம் செய்யவும் தேவர் தசாவதாரம் செய்தாலும் உண்மையில் தேவர் பிறப்பிராதவர் என்று தெரிந்து நாங்கள் தேவரையே தியானிக்கிறோம் என்று கருத்து.

---

(15-ம் பக்கத்தொடர்ச்சி)
கங்கே காணலாம். ஆதிமந்தி கடலைக் கோபித்தாளென்றும், பத்மினிப் பெண்ணாகிய அவள் சாபத்திற்குப் பயந்து கடல் ஆட்டனத்தியைக் கொணர்ந்து கொடுத்தது என்றும் சரித்திரம் சொல்லும். இவருக்குப் பிற்காலத்தவைகளான பாடல்களில் (அகநானூறு, சிலப்பதிகாரம்) இவைகளில் பிரிவாற்றுமைபற்றி வருமிடங்களிலெல்லாம் ஆதிமந்தியாரைப்போல என்று குறித்திருப்பது ஒன்றே இவர் பெருமைக்குப் போதுமான சாட்சி.

இவரே தமது வரலாற்றை விளக்கும் பாடல் குறுந்தொகையிலுள்ளது.

---

ரூ 2—4 அனுப்பியவர்கள் பாக்கி 12-அணாவை உடனே அனுப்பி மீதியுள்ள மூன்று மாதப் பத்திரிகைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்

உங்களது சந்தா ஆண்டு முடிவுவரை இல்லாவிடில் சஞ்சிகை கிடைக்காதென்பதைக் கவனிக்கவும்

## இலக்கிய சேவை

## 1. கவி யோகி

கவியோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் அவர்களை அறியாத தமிழர் இல்லை. இவர் புகழ் வடநாட்டிலும் மேனாடுகளிலும் பரவியிருக்கிறது. இவர் அல்லும் பகலும் யோகநிஷ்டையிலிருந்தே தமிழருக்கும் மனித சமுதாயத்திற்கும் அரிய பெரிய தொண்டுகளைச் செய்திருக்கிறார். இவர் ஆயிரக்கணக்கான அரிய பாடல்களையும் பல வசன நூல்களையும் இயற்றியிருக்கிறார். இவரது பேனா செல்லாத இலக்கியத்துறையே இல்லை. செய்யுள், இசைப்பாடல். பக்தி கானங்கள், நாட்டுப் பாடல்கள், இயற்கை இன்பப் பாடல்கள், சமுதாய முன்னேற்றப் பாடல்கள், சர்வமத சமரசக் கீர்த்தனங்கள், குழந்தைப் பாடல்கள், தமிழ் மந்திரங்கள், இசை நாடகங்கள், நாடகக் காவியங்கள், வசன நாடகங்கள். தொடர் கதைகள், சிறுகதைகள், அறிவுரைக் கட்டுரைகள், கடித இலக்கியம், இலக்கணம், இரசாயன (ஸயன்ஸ்) நூல்கள் எல்லாம் சுத்தானந்தர் பேனாமுனையிலிருந்து ஏராளமாகப் பூத்துத் தமிழ் மணம் பரப்புகின்றன. இவரது ஆங்கில நூல்களுக்கும் நாட்டில் ஒரு செல்வாக்குண்டு. இவர் நூல்களின் சொல்லழகையும் பொருட்செறிவையும் வியக்காத புலவர் இல்லை.

இவர் தனிமையே இனிமையெனக் கொண்டு பெரும்பாலும் தியானமும் மோனமும் பூண்டு தாம் சாட்சாத்கரித்த சுத்தசக்தி இறைவனைப்பாடி அன்பு செய்வதிலேயே மகிழ்ச்சி கொண்டார். உலகையும் உலகோரையும் இவர் கூர்ந்து கவனித்துத் தமது அனுபவங்களையெல்லாம் பாமாலையாக்கி இறைவனுக்கே சூட்டிவந்தார்.

வேதாகம தர்மத்தை இவர் ஐயந்திரிபறக் கற்றறிந்து நிற்பதுடன் சைவம், வைஷ்ணவம், சாக்யம், கிறிஸ்துவம், இஸ்லாம், பௌத்தம், சமணம், சீக்கியம் முதலிய சமயங்களிலும் பயின்று பார்த்துத் தமக்கென ஒரு சுத்த சன்மார்க்கம் வகுத்து சமரஸ வழியில் நடக்கிறார்.

பாரத மஹான்கள் கண்ட எல்லா யோக மார்க்கங்களிலும் இவர் சித்தி பெற்றார்.

இவரைத் தமிழுலகிற்கு நன்றாக அறிமுகப்படுத்தியவர் வீரவிளக்கு வ. வெ. சு. ஐயரே! இருவரும் நீண்டகால நண்பர். சுத்தானந்தர் தமது பொருளையெல்லாம்தந்து, ஐயருடன் தமிழ்க் குருகுலப் பணியும், பால பாரதி இதழ்ப்பணியும் திருவுறச்செய்தார், அக்காலமே இவர் பதினாயிரம் பாடல்கள் கொண்ட "பாரத சக்தி" என்னும் மகாகாவியத்தைப் பாடி, ஐயருக்குத் தினம் படித்துக் காட்டிவந்தார். ஐயருக்குப் பிறகு, இவர் பால பாரதி, சமரச போதினி, தொழிற் கல்வி, பிரமசரியம், இயற்கை, தமிழ் ஸ்வராஜ்யா (தினசரி) முதலிய பத்திரிகைகளுக்கு ஆசிரியரா யிருந்து நாட்டுப்பணி புரிந்தார்.

தமிழ் உள்ளமட்டும், இனிய கவிகளை உண்மையான உள்ளத்துடன் சுவைப்பவர் உள்ளமட்டும் சுத்தானந்தர் பெயர் உலகில் நின்று நிலவும். இவர் வாக்குக்கள் சுருதி, யுக்தி அனுபவத்திற்குப் பொருந்தியிருக்கின்றன. இவர் நூல்களைக் கருத்துடன் வெளியிட்டு உதவும் அன்பு நிலயம் வாழ்க! சுத்தானந்தர் பெருமை ஓங்கிப் பரவுக!

# ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

*ஸ்ரீ எஸ். வி. ஆர். தாத்தாசாரியார்*

பாரதியாரது தந்தைவழி முன்னோர்கள் ஐதராபாத் நவாப் சேவையிலிருந்து 1748-ஆம் ஆண்டிற்குப் பிறகு சிலகாலம் மைசூர் திப்புசுல்தான் சேவையிலிருந்து, திண்டுக்கல்லுக்கு வந்து பிறகு பாண்டிநாட்டிற்கு வந்தனர். அவர்கள் வரும்போது குதிரைமீதுவந்ததால் அவர் வீட்டிற்குக் குதிரைக்காரர் வீடு எனப் பெயர் வந்தது. இவர்களுள் அழகய்யர் என்பவர் காசி சென்று திரும்புகையில் நருமதைக் கரையில் பஞ்சாட்சரி ஜெபித்த சமயம், ஒரு பெரியார் இவருக்கு சாம்பமூர்த்தி லிங்கம் தந்து போனார், அது இன்னும் இவர்கள் பூஜையில் இருந்து

வருகிறது.

பாரதியாரது தகப்பனார் பெயர் ஜடாதரர். கோடிக்கணக்கான பஞ் சாட்சரி ஜெபித்தவர். ஆஜானுபாகு; மாசற்ற சன்மார்க்கி. தாயார் காமாட்சியம்மையாரும் சிறந்த பக்தை; மந்திரசித்தி பெற்றவர்கள். இவர் தந்தையார் திருமலை நாயக்கர் காலத்தில், ஆந்திர தேசத்திலிருந்து மதுரைக்கு வந்தவர்கள். இத்தம்பதி களுக்கு நான்கு குழந்தைகள். மூத்த குமாரர் வேங்கடராமர். இரண்டா வது குமாரர் அரங்கசாமி. மூன்ரு வது குமாரத்தி அரங்கநாயகி. நான் காவது புத்திரரே உலகம் போற்றும் சுத்தானந்த பாரதியார்.

சுத்தானந்த பாரதியார் 11—5—1897-ல் பிறந்தார். இவரை ஒரு மஹான் "கல்வி கேள்விகளில் சிறந்து ஐம்புலனையும் அடக்கி யோகசித்தி பெற்று யோகமூர்த்தி யாக விளங்குவான்" என்று சொன்னார்.

பாரதியாரது தகப்பனார் இவர் பையற்பருவமா யிருக்கும்போது பல நீதிக் கதைகளைப் புகட்டினார். இவர் பிறவியிலேயே ஞானியாக விளங்கினார். கடவுளன்பு, தமிழன்பு, நாட்டன்பு இம்மூன்றிலும் பற்றுள் ளவர். தனிமையையே விரும்பினார். பள்ளிப் படிப்பை வெறுத்து உள் ளப் படிப்பையே விரும்பி கோயி யில் தனித்துத் தியானம் செய்வார். எல்லாருடைய நிர்ப்பந்தத்தால் ஆங் கிலம் கற்று அதில் புலமைபெற்ருர். ஏழாவது பிராயத்தில் வீட்டில்நடந்த ஒரு சம்பவத்தால் வாழ்க்கையை வெறுத்து மீனட்சி கோயில் வன்னி மரத்தடியில் யோகம் செய்தார். முன்னறிவால் இவருக்குக் கவித் துவம் வந்தது. அதனல் இவரது உள்ளப் பொய்கையில் கவியூற்றுக் கொப்பளித்து, காவியக் கங்கை யாகப் பெருகிற்று.

பாரதியார் ஒன்பதாம் வயதில் ஒரு ஞானிக்குச் சீடரானர். அவரிடம் திருமந்திரம் உபதேசம் செய்து கொண்டார். அது முதல் அவர் இவ ருக்கு சுத்தானந்தர் என்று திரு நாமம் சூட்டினர். இவர் ஜாதி மத நாடு நிற வேற்றுமையை வெறுத் தவர். கட்டாயத்தால் உபநயனம் செய்துகொண்டார். தமிழில் அபார மான அன்புடையவராதலால் சந் தியாவந்தனம் முதலியவற்றைத் தமி ழில் அகவலாக்கிச் செய்து வந்தார். நீதிபுகட்டும் கதைகள் பல தொடுத் தார். தமிழிலேயே பல காவியங்கள், நாடகங்கள், கவிகள் எழுதினர். அவற்றைக் கோயில் மூலஸ்தானத் தில் மானஸீகமாக அரங்கேற்றி, அதை உடனே கிழித்தெறிந்தார். பதினைந்தாவது வயதில் அறநூல் பாடி முடித்தார். இவரது தமிழா சிரியரின் உபதேசப்படி கம்பனைப் படித்தார்.

பாரதியார், 'சுத்தாத்மசக்தியே எத்தகைய நலத்திற்கும் சிறந்தது என்கிருர். பதினறுவது பிராயத்தில் தன் பூணூலை அறுத்தெறிந்து துறவு பூண்டார். பெரியார் வரலாறு என் னும் நூலில் உள்ள 'சாந்தன் துறவு' என்னும் நூலே இவரது வாழ்க்கை யின் கண்ணடி. மனம் ஈசனிடத்தில் இருப்பதே இவர் எண்ணம். கை பொதுநலப்பணி யாற்றவேண்டும் என்று சொல்லி வந்தார். தினம் ஐந்துமணி நேரம் பொதுநலப்பணி செய்த பிறகே உணவு உட்கொள் வார். பொதுவாக இவர் கடலையும் கனியுமே அருந்திவந்தார்.

நாட்டில் ஏழைகள் படும்பாட் டைப் பார்த்தால் நெஞ்சு பொறுக்கு தில்லை. இந்த ஏழைநாட்டில் பிச்சை எடுக்கும் துறவிகளே இருக்கக் கூடாது. துறவிகள் பொதுஜன

க்ஷேமத்திற்குப் பாடுபடவேண்டும். பொருளாதார சுயேச்சையே ஆத்ம சுயேச்சைக்கு அவசியம். பலருக்கு உபயோகமான தொழில்களைச் செய்தே நாம் நமது தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளவேண்டும்; என்பவைகளே இவரது உறுதி மொழிகள்.

பசுமலையில் உபாத்தியாயர் வேலைக்குப்படித்துவந்தார். கிறிஸ்து மத நூலை நன்கு படித்தறிந்தார், பைபிளில் உள்ள உபதேசங்களை சிறு நாடகங்களாகவும், அகவல்களாகவும், விருத்தங்களாகவும் தொகுத்தார். அதுவே "ஏசுநாதரின் சரிதை" என்னும் நூலாகும். கிறிஸ்துவ பாதிரிகளின் பேரில் அன்பு கொண்டார். அவர்களைப்போல் சன்மார்க்கத்திற்கும் கல்விக்கும் அரும் பாடுபட்டார்.

காட்டுப்புத்தூரில் உபாத்தியாயர் வேலை பார்த்துவிட்டு நெரூரில் உள்ள சதாசிவப்ரம்மேந்திரரின் சமாதியில் தியானம் செய்தார். அப்போது கீர்த்தனங்கள் பாடினார். சாரணப் பயிற்சிபெற்று சாரணப்படை தயாரித்தார். சாரணச் சிறுவர்களை உல்லாசப் பிரயாணங்களுக்கு அழைத் சென்றார். போகும்போது தேசபக்தி, சன்மார்க்கம் முதலியவற்றைப் புகட்டினார். கிராம ஜனங்களுக்கு நன்மதி கூறுவார். ஸ்ரீராம சமுத்திரத்தில் ஹரிஜன சேவை செய்தார். திருக்குலத்தாருக்கு பள்ளிகள் ஏற்படுத்தித் தாமே போதித்து, பின் ஒரு உபாத்தியாயரின்கீழ் விடுத்தார். கிராம ஜனங்கள் கள்ளுக்கடைக்குப் போகாதிருக்க அவர்களுடன் பஜனை செய்தார். பள்ளியில் மாணவர்களை வலம் வந்து "ஈசனே! மாணவர்களை வீரராக்குக" என்று பிரார்த்தித்த பின்பே உட்பிரவேசிப்பார். மாணவர்களுக்கு ஐந்து நிமிடம் நகைச்சுவை யூட்டியபின் பாடம் போதிப்பார். கைத்தொழிலைப்பற்றி நன்கு புகட்டி விளக்குவார்.

1920-ம் ஆண்டில் ஏற்பட்ட ஒத்துழையாமை கிலாபத் இயக்கத்தில் ஈடுபட்டார். அப்பொழுது இவர் ஒரு மசூதியில் சீராப்புராணம் வாசித்தார். குரானை அகவல்களும் விருத்தங்களுமாகச் செய்தார். காந்தியைத் தரிசித்து மாணவர்களுடன் அவருக்கு தம் கையால் தயாரித்த கதர் மாலைகளுடன் பணமும் காணிக்கையாகக் கொடுத்தார்.

மீண்டும் நெரூரில் சதாசிவப்ரம்மேந்திரரின் சமாதியில் தியானத்தில் ஆழ்ந்தார். அவர் வசித்த இடங்களைத் தரிசித்து கொல்லிமலையில் யோகங்கொண்டார். 'கம்பநிலயம்' என்னும் பத்திரிகையை நடத்திவந்த ஸ்ரீ வ. வே. சு. ஐயர் அவர்களுக்கு நாடகம் கவிதைகள் முதலியன எழுதி உதவினார். அதில் பாரத சக்தி வெகு அழகானது.

தேவகோட்டையில் உபாத்தியாயராக யிருந்து கதர்த் தொண்டு செய்தார். ஆறு மணி நேரம் யோகப் பயிற்சியும் நான்கு மணி நேரம் ஓய்வும் எடுத்துக்கொள்வார். மீதிப் பொழுதை பொதுநலப்பணி யாற்றிக் கழிப்பார்.

இவரது கவிதைகளை உலகிற்குக் காட்டிய பாப்பிலி துரை இவரைக் 'கிறிஸ்துவைப்போல் வாழ்கிறீர்' என்றார். பொருளாதார சுதந்தரமே கட்டற்ற சமுதாயத்தின் முதற்படி என்பது இவரது கொள்கை. தன் பணத்தைப் பொதுநலத்திற்கே செலவிட்டார். மீதிப் பணத்தையும் ஸ்ரீ அரவிந்தார்ப்பணம் செய்துவிட்டு, அன்று முதல் பணத்தைக் கையினால் தொடுவதே யில்லை. மாணவர்களை கன்னியாகுமரி, திருச்செந்தூர்,

ஆழ்வார்திருநகரி, திருவனந்தபுரம், கொல்லம் முதலான இடங்களுக்கு அழைத்துச் சென்று நடைப்பள்ளிக் கூடங்களை ஏற்படுத்தினர். "பால பாரதி" யில் பெரும் பங்குகொண்டு ஐயர் அவர்களுக்கு வலக்கரம் போன்று உதவினர். ஐயருக்குப்பின் பாலபாரதியின் ஆசிரியராக யிருந்து தொண்டாற்றினர்.

தஞ்சையில் சமரஸ போதினியின் ஆசிரியராகச் சிலகாலம் இருந்தார். அடிமை, மடமை, வறுமை இம்மூன்றும் நம் நாட்டை உண்ணும் பேய்கள். கிராமம் தான் நாட்டின் உயிர் நிலை. நாடு நலம்பெற கல்வி, பஞ்சாயத்து, குடிசைத்தொழில், சுகாதார வாழ்வு இவை அவசியம் என்பது இவரது கொள்கை. இவரது கிராம வேலைகள் இவர் எழுதிய "திருநூல் அல்லது தூயவாழ்வு" என்னும் நூலில் உள்ளன. இவர் ஒய். எம். ஸி. ஏ. யில் நடந்த கிராம சேவை மகாநாட்டில் தலைமை வகித்தார். இவர் பாரதநாடு ஆறும் காடும் மலையும் ஊரும் நிறைந்த பூகோளப்பிரிவின்று ; ஆத்மசக்தியின் திருக்கோயில்; உலகின் முக்திவிண்; உலகம் கோயில்; உள்ளம் சந்நிதானம். பரமாத்மா ஒவ்வொருவர் உள்ளத்தும் உள்ளார். ஆதலால் தன்னைப்போல் பிறரையும் காணவேண்டும். ஆத்மஞானமே விடுதலைக்கும் ஒற்றுமைக்கும், நாடமைதிக்கும் ஓரே வழி என்கிறர்.

கௌதமநிலயம் ஏற்படுத்தித் தொழிற் கல்வி என்ற பத்திரிகையும் நடத்தினர். அதன்மூலம் கைத்தொழிலும் சாஸ்திரஞானமும் பெருகச் செய்தார். சிலகாலம் பாலையூர் சக்தி நிலயத்தின் தலைவரானர், காஞ்சீவரத்தில் வைஷ்ணவ தருமத்தை அனுஷ்டித்து இயற்கை என்னும் பத்திரிகையை நடத்தினர். ஜைனமத தத்துவத்தை ஜினனந்தம் என்னும் காவியமாக எழுதினர். பின் ஸ்வராஜ்யா பத்திரிகையின் ஆசிரியரானர். சாதுவாஸ்வானியின் இளைஞர் சங்கத்தில் சேர்ந்து இயற்கை மகாநாடு நடத்தினர். தூத்துக்குடியில் ஒத்துழையாமை இயக்கத்தைப் பற்றிப் பேசினர்.

பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளைத் தியானத்தில் கண்டார். திருவண்ணுமலையில் குகைவாசம் செய்தார். அரவிந்தரைத் தரிசித்தார். அவரிடம் அபாரபக்தி இவருக்கு உண்டு. அவரது திருவடிநிழலில் இன்றும் இருந்துவருகிறர். பாரத சக்தியே இவரது யோகதரிசனம்.

எல்லா வுயிர்க்கும் இறைவன் ஒருவன்
எல்லா வுடலு மிறைவன் ஆலயமே
நான் காண் மனிதன் நானதில்லை.

என்பனவற்றை அனுபவசித்தி பெற்ற சர்வாத்ம சமரஸியான இப்பெரியார் நீண்டகாலம் செய்யும் தவம், மனிதசமுதாயம் எல்லாவற்றிற்கும் பயனகும்படி இறைவன் அருள்வானக! இவரைப்போல் என்றும் எல்லா மனிதர்களும் 'உலகெல்லாம் கோயிலாகி உடலெல்லாம் மேனியாகி' என்று அன்புக்கடவுளை உள்ளும் புறமும் நேசிப்பீர்களாக !

---


## நந்தவனம்—வஸந்தருது மலர்

முழுதும் செலவழிந்துவிட்டதால் அனுப்பமுடியாமைக்கு வருந்துகிறேம். **கிரீஷ்மருது மலர்** வேண்டுவோர் உடனே ரூ. 1—11—0 அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும். தாமதித்தால் கிடைக்காது.

# தீண்டாதே, தொடாதே!

காப்டன். என். சேஷாத்ரிநாதன் M.B., B.S., D.T.M.,

'தொடாதே, தீண்டாதே' என்ற ஜாதி பேதத்தைக் காட்டும் சப்தம் காதில் கேட்கக் கூடாதென்று தீர்மானம் கொண்ட நமது தலைவர்கள் ஊக்கத்துடன் தீண்டாமையை ஒழிக்க முயலுகிறார்கள். இது நாட்டுக்கு நலமளிக்கக்கூடிய ஒரு முயற்சி.

மேல் ஜாதியார் "எங்களுடைய உயர்தர ஒழுக்கங்களுக்குக் கேடு வந்துவிடும்; எங்களைத் தொடாதேயுங்கள், எங்களருகில் வராதேயுங்கள்." என்று சொல்லமுடியாமல், கீழ் ஜாதி என்று சொல்லப்படும் ஜனங்களுடன், சுத்தமான ஒழுக்கங்களைக் கைக்கொண்டு ஜாதி பேதங்களை ஒழிக்கமுயலுகிறார்கள்.

ஆனால், "தீண்டாதே,தொடாதே" என்ற எச்சரிக்கை சில சந்தர்ப்பங்களில் அவசியமாயிருக்கிறது. நமது ஆசார ஒழுக்கங்கள் அனுமானத்தினால் ஏற்பட்டிருக்கின்றன. இவைகளைப் பாரம்பரியமாகக் கைவிடாமல் நடத்திவர வேண்டிய வசதிகள் ஏற்படுத்தியிருக்கிறோம். நமது ஆசார ஒழுக்கங்கள் அநேகமாய் விஞ்ஞானப் பயிற்சிக்கு ஒத்திருப்பதாக நாம் இப்போது உணருகிறோம். ஸ்நானம் செய்வதிலும், வஸ்திரங்களைத் தோய்த்து உலர்த்தி உடுத்திக்கொள்வதிலும், உணவு பதார்த்தங்களைத் தயாரித்துப் பாகம் செய்வதிலும், நமக்கு நோய்கள் பரவாதபடி நமது ஆசாரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்று நாம் உணருகிறோம்.

நோய்களுக்குக் காரணம் பெரும்பாலும் அணு ஜீவன்களே. அணு ஜீவன்கள் நமக்குத் தீங்கு செய்யாமலிருக்க வேண்டுமானால், நமது பழக்க வழக்கங்களை ஒருவாறு நாம் ஒழுங்குக்குக் கொண்டுவர வேண்டும். ஜாதி ஆசாரங்களநேகம் இதே நோக்கத்தையுடையவை.

"தொடாதே!" என்ற எச்சரிக்கையைச் சற்று கவனிப்போம். உதாரணமாக ஆப்பரேஷன் செய்யும்போது, அனுஷ்டிக்கவேண்டிய ஆசாரங்களைஎடுத்துக்கொள்வோம்.

முன் காலத்தில் ஆப்பரேஷன் என்றால் நோயாளிகளுக்கு அளவில்லாத பயம் உண்டாகும். சஸ்திர வைத்தியர்கள் கத்திப் பிரயோகத்தில் தைரியமுள்ளவர்களாயிருக்கலாம். இரத்தம் சிந்தாமல் ஆப்பரேஷன் செய்யக் கூடும். ஆனால் ஆப்பரேஷன் செய்த இரண்டு நாட்களில் ஜன்னி தோஷம் பிடிப்பது சர்வ சாதாரணம். ஜன்னி குறைந்த பின் ஆப்பரேஷன் செய்த இடத்திலெல்லாம் சீழ்பிடிப்பது ஸகஜம். பின்பு புண் ஆறுவதற்கு பல மாதங்களாகும், இப்படி நடந்ததெல்லாம் 1800-ம் நூற்றாண்டுக்கு முன்பாக. 1800-ம் நூற்றாண்டின் மத்தியில் லிஸ்டர் (Lister) என்ற வைத்தியர் தோன்றினார். இதற்குள் அணு ஜீவ சாஸ்திரம் பிரபலமடைந்து விட்டது. சீழ் பிடிப்பதற்கும், விஷஜ்வரம் வருவதற்கும் காரணம் சில அணுஜீவன்கள்தான் என்று வெளிப்பட்டது. அணுஜீவன்கள் கைகளின் வழியாகவோ, ஆயுதங்கள் மூலமாகவோ ஆப்பரேஷன் செய்த இடத்தில் புகுந்துவிடும். அங்கு சிதறியிருக்கும் இரத்த ரசங்களைப்

புசித்துப் பெருகி வளர்ந்து, சீழ் பிடிப்பதற்கும் ஜன்னி தோஷம் நேரிடுவதற்கும் காரணமாகின்றன. இந்த விஷயமும் லிஸ்டர் காலத்தில் வெளிப்பட்டது. லிஸ்டர் இதை எல்லாம் நன்றாய் தெளிவாக்கினர். இப்படி சம்பவிக்கும் தோஷங்களை நீக்க உபாயங்களைத் தேடினர். ஆப்பரேஷன் செய்வதற்கு முன்பாகவே ஆயுதங்களையெல்லாம் நீரில் கொதிக்கவைத்து, சுற்றியிருக்கும் வாயுவில் மிதக்கும் அணு ஜீவன்களை எல்லாம் ஆப்பரேஷன் செய்யும் ரணத்தில் விழாதபடி, விசேஷ முறைகளால் தடுத்து, இன்னும் பல வழிகளில் சீழ் பிடிப்பதையும் ஜன்னி நேரிடுவதையும் குறைத்து விட்டார் லிஸ்டர்பிரபு(Lord lister).

இப்போது ஆப்பரேஷன் அறை எப்படி வைக்கப்பட்டிருக்கிறதென்று பார்ப்போம், வெகு மேன்மையடைந்திருக்கிறது. அருகில் போவதற்கே யோசனையாயிருக்கிறது. அசுத்தம் நமக்குள்ளே வந்துவிடுமோ என்றபயம் உண்டாகிறது. அவ்வளவு துப்புரவாயிருக்கிறது. தும்பு தூசி ஓரிடமும் கிடையாது. சுவர்களும் தரையும் வழ வழப்பாய் கண்ணாடிபோலிருக்கிறது. ஒருவிதமான அசுத்தமும் தங்க முடியாதென்று தோன்றுகிறது. உள்ளே ஆப்பரேஷன் செய்யப்போகிறாப்போலிருக்கிறது. ஸர்ஜன் உள்ளே போயிருக்கிறார்; அஸிஸ்டன்டும் இருக்கிறார்; நாமும் உள்ளே செல்லலாம், ஆவியில் சுத்தம்-செய்த ஆடைகளை தரித்துக் கொள்வோம். நமக்கென்று ஒரு பெஞ்சு வைத்திருக்கிறார்கள். ஸர்ஜனும் அஸிஸ்டண்டும் கைகளை நன்றாக சோப்பும் வெந்நீரும் கொண்டு கழுவுகிறார்கள். பள பளவென்று தேய்த்துள்ள குழாயை தரையிலிருக்கும் மிதிபடியை மிதித்துத் திறந்துகொள்ளலாம். கையால் தொடவேண்டியதில்லை, கைகளை லோஷனில் அழுத்திச் சுத்தம் செய்துக்கொள்ளுகிறார்கள். பின்பு ஆவியில் சுத்தம் செய்த ரப்பர் க்லவ்சுகளை தரித்துக்கொள்ளுகிறார்கள்.

இதற்குள் ஆப்பரேஷன் ரூமில் வாயுவை அல்டிராவயலெட் ஒளி கொண்டு சுத்தம் செய்தாய் விட்டதென்று தெரிய வருகிறது. உதவிக்கிருக்கும் நரஸ்களும் கைகளுக்கு சுத்தமான ரப்பர் கிலவ்சுகள் தரித்திருக்கிறார்கள், ஸர்ஜனும், அஸிஸ்டண்டுகளும், நரசுகளும், வாயையும் மூக்கையும் ஆவியில் சுத்தம்செய்து துணிகளால் மூடிக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சுத்தமான துணிகளை வைத்திருக்கும் பெட்டிகளைத் திறப்பதும், அவற்றிலிருந்து துணிகளை எடுப்பதும் விசேஷமான காட்சியாகும். முன்பாகவே கைகளை சுத்தம் செய்துக் கொண்டு தலைமுதல் கால்வரையில் சுத்தமான ஆடைகளைத் தரித்தபின் நர்சுகள் சுத்தமான இடுக்கிகளால் பெட்டிகளைத் திறந்து துணிகளை எடுப்பார்கள்.

ஆப்பரேஷனுக்கு வரும் நோயாளிக்கு உடலில் ஆப்பரேஷன் செய்யவேண்டிய இடத்தை மருந்துகள் போட்டு முன்பாகவே சுத்தம் செய்து பரிசுத்தமான துணிகளைப் போட்டுக்கட்டியிருக்கிறார்கள். திறப்பது ஸர்ஜன் ஒருவர்தான்-அல்ட்ராவயலட் ஒளிகொண்டு ஆப்பரேஷன் செய்யவேண்டிய ஸ்தானத்தை சுத்தம்-செய்யத் தயாராயிருக்கிறார்கள்.

நோயாளிக்கு மயக்கம் கொடுக்கப்பட்டு தள்ளுகட்டிலின்மீது கொண்டு வருகிறார்கள். ஸர்ஜன் ஆப்பரேஷன் செய்யும் பாகத்தைத் திறக்கிறார். கைகளால் யாரும் அடுத்து வந்து தொடாமல் கவனித்-

துக் கொள்கிறார். அஸிஸ்டண்டுகளும், நர்சுகளும் யாருமே அனாவசியமாய் வருவதில்லை. "தீண்டாதே, தொடாதே" என்ற, எச்சரிக்கை அவசியமாய் இங்கு ஆதரிக்க வேண்டியிருக்கிறது.

'தீண்டல்' என்ற ஆசாரத்தை நாம் அனுசரிக்க வேண்டியிருக்கிறது. இன்னும்சிலசந்தர்ப்பங்களில் பள்ளிக்கூடங்களிலும், கிளாசுகளிலும் பிள்ளைகளுக்கு பலவிததொத்து நோய்கள் பரவாதபடி தடுக்க இந்த ஆசாரம் ஒரு முக்கிய வழியாகும். ஆனால் ஆசரிப்பது வெகு சிரமமானது. பிள்ளைகள் கொஞ்சம் நெருக்கமாய்த்தான் இருக்கிறார்கள். ஒருவருக்கொருவர் தொட்டுக்கொள்வது சகஜம். சிரங்குகள், அம்மை இவையெல்லாம் பள்ளிக்கூடங்களில் விரைவாகவே பரவக்கூடும். நாசித்துவாரத்திலிருந்து நீர் துளிகளாகக் காற்றில் பரவிக்கொண்டேயிருக்கும். இந்தத் துளிகள்வழியாய் அணுஜீவன்கள் நோயில்லாத குழந்தைகளின் நாசித் துவாரங்களில் புகுந்து சின்னம்மை, முதலிய தொத்து நோய்களைப் பரவச் செய்கின்றன. தீண்டாமை என்ற ஆசாரத்தை முக்கியமாய் அனுசரிக்க வேண்டும். இது நடத்தக் கூடுமா என்று கேட்டால், பள்ளிக்கூடத்து அதிகாரிகளும் ஆசியர்களும், தாய் தந்தையரும் ஒத்துழைத்தால் இந்த ஆசாரத்தை நடைபெறச் செய்யலாம்.

பிரசவம் நடந்த வீட்டில் தீண்டல் என்றும், பிரசவித்த ஸ்திரீயைப் பத்து நாள் வரை யாரும் பார்க்கக் கூடாதென்றும்,ஒரு வழக்கம் நமது நாட்டில் உண்டு. நல்ல யோசனையுடன் நமது பெரியோர்கள் ஏற்படுத்தியிருக்கும் ஆசாரம் இது. பிரசவம் சாதாரணமாய் நடந்த போதிலும், பிரசவித்த தாயின் உறுப்புக்கள் புண்பட்டிருக்கும். இந்தச் சந்தர்ப்பத்தில் பிரசவ அறைக்குள் அனாவசியமாக ஜனங்கள் பிரவேசித்தால் பிரசவித்த தாய்க்கு தோஷங்கள் ஏற்படக்கூடும். வருபவர்கள் மூக்கைச் சிந்திவிடலாம். நாசித் துவாரத்திலிருந்து தோஷ குணமுள்ள அணுஜீவன்கள் வெளியில் பரவித் தாய்க்கு ஜன்னி தோஷம் சம்பவிக்கக் காரணமாகும். தொண்டையிலிருந்தும் இருமும் போது அணுஜீவன்கள் சுற்றியிருக்கும் வாயுவில் பரவி மேற்சொல்லிய பிரகாரமே ஜன்னிக்குக் காரணமாகும். சிரங்குபிடித்தவர்கள் வந்து, சிரங்கிலிருந்து அணு ஜீவன்களைப் பரவச் செய்வார்கள். காலடியில் ஒட்டிக்கொண்டு பல அணுஜீவன்கள் ப்ரசவ அறைக்குள்ளே பிரவேசிக்கும். ஆகவே, அனாவசியமான ஜனங்கள் பத்து நாட்களுக்காவது பிரசவ அறைக்குள் வரக் கூடாதென்று கட்டுப்பாடு செய்திருக்கிறார்கள் என்றேசொல்லலாம். ஆனால் இப்போது ஆசரிப்பது வேறுவிதமாயிருக்கிறது.


பிரசவ அறையை ஆப்பரேஷன் செய்யும் அறையைப்போல துப்புரவாய் வைக்கவேண்டும். அங்கு சுவர்களையும், தரையையும் ஜன்னல் கதவு, முதலியனவற்றையும் சுத்தம் செய்து வைக்கவேண்டும். பிரசவ அறைக்குள் யாதொரு அசுத்தமும் வராதபடி தரையை லோஷன் கொண்டு துடைத்து வைக்கவேண்டும். பிரசவம்பார்க்கவரும்மருத்துவ ஸ்திரீ சுத்தமான வஸ்திரம் தரித்துக் கொள்ளவேண்டும். உடம்பில் சிரங்கு இருக்கக்கூடாது. தொண்டையிலும், நாசித் துவாரங்களிலும் ஒருவிதமான நோய்களுமிருக்கக் கூடாது. ஸ்நானம் செய்தபின் பிரசவம் பார்த்தால்உத்தமம். கைகளை

நன்றாக லோஷன்களில் கழுவிய பின் பிரசவம் பார்க்கவேண்டும்.

தீண்டல், எச்சில் என்ற ஆசாரங்களை நாம் அலக்ஷியம் செய்து கைவிடலாகாது. அனுமானத்தினால் செய்த இந்தப் பழக்கங்களுக்குக் காரணங்கள் பல.

விஞ்ஞானம் வளரும்போது இவையெல்லாம் வெளிப்படுகின்றன. அப்போது சில ஆசாரங்களை மாற்றிக் கொள்ளலாம். ரயில் பிரயாணம் மோட்டார் பிரயாணம் எல்லாம் வெகு சகஜமாய் விட்டன. பலவித ஜனங்கள் வண்டிகளில் நெருக்கமாய்ப் பிரயாணம் செய்யும்போது, 'தொத்து நோய்களால் பிடிக்கப்பட்டவர்களிடமிருந்து நோயில்லாதவர்களுக்கு நோய்பரவக்கூடும். ஆகவே, நாம்பிரயாணம் முடிந்தபின் அல்லது மத்தியில் சௌகரியம் கிடைத்தால் ஸ்நானம் செய்துக் கொண்டு சுத்தமான வஸ்திரங்களை தரித்துக்கொள்வது உத்தமம். நமது வஸ்திரங்களை பெட்டிகளில் ரெயிலழுக்குப் பரவாதபடி பத்திரம் செய்து வைத்துக்கொள்ளவும் வேண்டும்.

அனுஷ்டானங்கள், தேகப் பயிர்ச்சி, மிதமான உணவு இவற்றை ஆதாரமாக்கி வாழ்வோமாகில் உலகமே இன்ப மயமாகும்.



183093

இந்தக் கடவுள் பலே பேர்வழியாயிருக்கிறார்! வாமனாவதாரம் எடுத்தவரே உலகளந்தாராகவும் விளங்கினார், இந்த இரண்டு அம்சங்களின் அடையாளமாகத்தான் முதலில் உன்னையும், பிறகு உன் பிள்ளையையும் சிருஷ்டித்தார் போலும்! என்று ஆச்சரியப்படுகிறார் எஜமானர்.




## 9. எதிர்பாராத சம்பவம்

“தங்கம் சரியான பதத்தையடைந்திருக்கும் நிலையில்தான் அதை நமக்குவேண்டிய ரூபத்திற்கு அமைத்துக்கொள்ள வேண்டும். இத்தகைய நுட்ப நிலையில்தான் இருக்கிறது தற்போது நம் பாஸ்கரனின் உள்ளம்; அதைச்சரியானபடி உலகம் விரும்பும் பாதையில் செலுத்திவிடவேண்டும். உத்தம உள்ளம் படைத்த உத்தமனே இப்பணியில் பெரும் பங்கு எடுத்துக்கொள்ள வேண்டியவன். உள்ளத்தைப் போலவே அவன் யுக்தியிலும் உயர்ந்தவனாதலால் இந்த வேவு யாத்திரையின்போது கண்டிப்பாக பாஸ்கரனின் அந்தரங்கக் கோட்டையில் பொதிந்து கிடக்கும் உண்மைகளையும் வேவு பார்த்துவிடுவான் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு!” என்று ஸ்ரீவத்ஸர் மைத்ரேயியிடமும் குணசேகரனிடமும் தன் உள்ளத்தைத் திறந்து காட்டும்போது அவ்விருவர் உள்ளங்களும் எங்ஙனம் பூரித்திருக்கும்!

“உத்தமன் வெற்றி பெற்றுவிடுவான்! பாஸ்கரன் இசைந்துவிடுவான்!” என்று பூரித்தது மைத்ரேயியின் தாயுள்ளம்.

“நமது ராஜ சேவையில் இன்னும் ஒரு படிக்கட்டு முன்னேற வேண்டும்: அதற்கு உத்தமன் வெற்றி பெறுவதுதான் அஸ்திவாரம்” என்றுகருதியது குணசேகரனின் தந்தையுள்ளம்.

மங்களபுரியின் மூன்று திலகங்களும் ஒரே விஷயத்தைக் குறித்து இவ்வாறாக உள்ளக் கிளர்ச்சியடைந்திருந்த அதே சமயத்தில் உத்தமனின் உள்ளமோ “பாதை புலப்பட்டுவிட்டது; இனி மாதைத்தான் கண்டுபிடிக்க வேண்டும்! என் முயற்சி பலிக்கின்றதா பார்ப்போம்!” என்று கரை புரண்டோடிக் கொண்டிருந்தது.

* * * * *

அரண்மனையிலுள்ள ராஜபோகங்களை விட்டு, தூதுவனைப் போல் அலைந்து திரிந்து வேவு பார்ப்பதென்பது எவ்வளவு சிரமமான காரியம்? வேவு யாத்திரைகள் அரசனுக்குச் சரீர சிரமமளித்தனவே தவிர மனத்திற்குப் பரம திருப்தியையே கொடுத்தன. எந்த மூலை முடுக்குகளில் பார்த்தாலும் ஜனங்கள் குறைகளின்றி சுக வாழ்க்கை நடத்திவருகிறார்கள் என்று தெரிய வக்

தால் செங்கோல் செலுத்தும் வேந்தனின் உள்ளம் எப்படித் தான் பூரித்து மலராது!

நிறைந்த இதயமும் மலர்ந்த முகமும் இயற்கையின் இரட்டைப் பிறவி போலும்! ஒன்றையடுத்தே மற்றொன்று பின்தொடர்கிறது. ராம லக்ஷ்மணர்களைப்போல் இணைபிரியாது யாத்திரை செய்யும் பாஸ்கரனின் நிறைந்த இதயமும், உத்தமனின் மலர்ந்த முகமும் அவர்களைத் தாங்கிச்சென்ற குதிரைகளுக்குக் கூட விளங்கிவிட்டனவோ என்னவோ! இல்லாவிடில் அவை ஆறு நாட்களாக அங்குமிங்குமாக அல்லாடித் திரிந்திருந்தும் சலிப்படையாமல் மிகக் குதூகலத்துடன் காணப்படுவானேன்?

* * * * *

நந்தவனத்தின் அழகியதோற்றமும், நறுமணமும், குளிர்ந்த தென்றலும் பாஸ்கரனை மிகவும் வசீகரித்ததால் சற்றுநேரம் அங்கு தங்கி இளைப்பாறிச்செல்லத் தீர்மானித்தான். திடீரென்று



உத்தமன் முகத்தில் ஒரு புதியபிரகாசம் ஏற்பட்டதற்குக் காரணமில்லாமலில்லையே; ஆனால் அதை பாஸ்கரன் கவனிக்கவில்லை. குதிரைகளை மரத்தடியில் கட்டிவிட்டு மழமழவென்றுள்ள பசும்புல் தரைமீது சயனித்துக் கொண்டான் பாஸ்கரன். இருவருமாக வேவு யாத்திரையில் கண்ட உண்மைகளைப்பற்றி ஏதேதோ பேசிக்கொண்டிருக்கையில் காற்றலைகளுடன் கலந்துவந்த சங்கித ஒலி இவர்களைப் பரவசப்படுத்தியது. "இப்போது வீசும் காற்றின் குளிர்ச்சிக்கே இந்த சங்கிதம்தான் காரணமோ!" என்று பிரமித்தான் பாஸ்கரன். மேலும் மேலும் அந்தக் கானவாரிதியில் மூழ்கித் திளைந்து களிவெறிகொண்ட பாஸ்கரன் அந்த இன்ப நாதம் எழும் திசையைநோக்கி நடக்கலானான்.

உத்தமன் முகத்தில் புதிய பிரகாசம் ஏற்பட்டதென்று முன் தெரிவித்தோமல்லவா? அது இப்போது இன்னும் பன்மடங்கு ஜ்வலிக்கலாயிற்று. காரணம்? மங்களபுரி எல்லைக்கும் அந்தரபுரி எல்லைக்கும் நடுவே உள்ள இந்த பொது நந்தவனத்திற்கு பாஸ்கரனை அழைத்துவரவேண்டுமென்பதே உத்தமனின் எண்ணம். இதற்கு முன் ஒரு முறை (சமீபத்தில்) உத்தமன் மட்டும் இங்கு இன்னும் சிலரோடு வந்தபோது, அழகே உருக்கொண்ட ஒரு யுவதி கானமழை பொழிந்துகொண்டிருப்பதைப் பருகியிருக்கிறான்; பாஸ்கரனையும் அந்த ஆனந்தத்தை அடையும்படிச் செய்தால்!—ஒருவேளை அவள் தக்க ஜோடியாயிருந்தால்!—எல்லாம் எண்ணியபடியே நடந்தால்!—என்றெல்லாம் எண்ணமிட்டுக் கொண்டேயிருந்தான். "ஆயிரம் கல் விட்டெறிந்தால் ஒரு பழமாவது விழாதா மரத்திலிருந்து?" என்பது போலவே இந்த யோசனையும்! நாம் செல்லும் சமயம் அவள் அங்கு வருகிறாள் என்று என்ன நிச்சயம்? அவள் யாரோ? அவள் அந்தஸ்து என்னவோ? எது எப்படி நடக்குமோ! எதற்கும் ஒரு முறை பாஸ்கரனை அங்கு அழைத்துச் செல்லவேண்டும். பகவான் விட்டவழியே ஆகட்டும்!" என்ற தீர்மானத்துடன்தான் இந்த முறை வேவு யாத்திரைக்குப் புறப்பட்டான்.

பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோலத் தோன்றிற்று அரசனின் சங்கிதப் பித்தைக் கண்டதும். "என்ன! பாட்டுக்குமட்டும் அடிமையா? அல்லது அந்தப் பாடகிக்குக்கூட அடிமையாகிவிட்டீர்களா?', என்று தைரியமாகக் கேட்டான் உத்தமன்.

"உண்மையில் இது தேவகானம் போன்றல்லவா வசீகரிக்கின்றது! கொடிய சர்ப்பம்கூட சங்கிதத்தின் வசிய சக்திக்குக் கட்டுப்பட்டு நிற்கிறதென்றால், நான் இந்த கானம்ருதத்தைப் பருகி மயங்கி நிற்பதில் ஆச்சரியமென்ன?....ஆனால், நீ சொல்வதுபோல் ஒன்றுமில்லை!"

"ஒன்றுமில்லையா? என்னிடம் என் இந்தப் பசப்பு? ராமர் ஸீதையைக் கண்டதும் காதல் கொண்டார்! நீ இந்த கன்னிகையின் இன்னிசையைக் கேட்டதும் காதல் கொண்டிருக்கிறாய்!... போ! இன்னும் அந்த திக்கிலேயே சற்று போனால் அந்த சுந்தர பிம்பத்தையும் நேரில் காணலாம். அப்போது அவள் உன்னைப் பார்க்க நேர்ந்தால் கண்டதும் காதல் கொள்வாள், சீதை ராமனைப் பார்த்ததுமே கொண்டதுபோல்!"

இந்தப் பரிகாச வார்த்தைகளையெல்லாம் நிதானமாகக் கேட்டுப் பதில் சொல்லும் தோரணையிலில்லை பாஸ்கரன்! உண்மையில் அவன் அந்த இசைராணியின் அடிமையாகி விட்டான்! "கானம்ருதம் செவிக்கும் மனதுக்கும்மாத்திரம் ரம்யம் என்பது போதாமல் காதல் வலையைக்கூட வீசக்கூடியதா!" என்று பாஸ்கரனே பிரமித்தான். அவன் கால்கள் முன்னே சென்று கொண்டேயிருந்தன; அவன் கண்கள் ஏதோ ஒரு அபூர்வ சிருஷ்டியைத் தேடியவண்ணமிருந்தன; அவனது நடத்தையே உத்தமனுக்கு வியப்பையும் மகிழ்ச்சியையும் அளித்தன.

"சங்கீதத்தின் நிகரற்ற ஆகர்ஷண சக்தியின் எல்லையை இன்றே உணர்ந்த பாஸ்கரன், அழகின் சிகரத்தையும் கண்டு வியக்கப்போகிறான்!" என்று உத்தமன் ஆனந்தக்கூத்தாடினான். பாஸ்கரனை இவன் கண்களில் படாது மறைப்பதற்கெனவே சில செடிகளும் மரங்களும் அங்கு வளர்ந்திருந்தன போலும்!

செவிகளுக்கு கானம்ருதத்தை ஊட்டிய மங்கை, நேத்திரங்களுக்கும் இணையிலா எழிலமுதை ஊட்டினால், பரவசமுற்றுத் தம்பித்து நிற்காது என்னசெய்வான் பாஸ்கரன்? சகுந்தலையைக் கண்டு மயங்கிநின்ற துஷ்யந்தனைப்போலவே, ராஜ்யாதிபதியான பாஸ்கரன் அந்த அழகியின் ஆதிபத்யத்திற்கு அடிமையாகி நின்றான்! அவன் கண்களின் அழகுப்பசி தீரவேயில்லை; இமை கொட்டாது அந்த சௌந்தர்ய பிம்பத்தின் எழிலைப் புசித்த வண்ணமே நின்றன. அவன் செவிகளில் அவளது சங்கீதஒலி தவிர வேறெந்த சப்தமும் விழவேயில்லை. அவன் உள்ளத்தில் அவளைப்பற்றினது தவிர வேறு சிந்தனையே எழவில்லை. அழகைக்கண்டு மெய்ம்மறந்து நிற்கும் காதலன் சிலைபோன்று அசைவற்று நிற்பதை—வைத்த கண் வாங்காது மயங்கிக் கிடப்பதை—அவள் கண்களும் கவனித்துவிட்டன!

மிரண்ட மானைப்போலத் துள்ளியெழுந்த அவள், சங்கீதத்தை நிறுத்திவிட்டு, கண்களால் ஆயிரம் வார்த்தைகளை அளந்துவிட்டு, ஒரு புன்முறுவலுடன் தன் தோழிகளுடன் ஓடலானாள். பரஸ்பரம் அவர்களிடையே பூத்த புன்முறுவலும், கண்கள்பேசிய பாஷையும், திடீரென அவள் மறைந்துவிட்டதும்

பாஸ்கரனுக்குச் சொல்லத்திறமற்ற ஆச்சர்யத்தையும், ஆனந்தத்தையும், உடனே ஏமாற்றத்தையும் அளித்தன. மறுக்ஷணமே உலக நினைவு வரவே, உத்தமனைத் தேடிவந்தான்.

உத்தமனிடம் என்ன பேசுவதென்றே தெரியவில்லை. "ஊரைவிட்டுப் புறப்பட்டு ஒரு வாரமாகப்போகிறது. உடனே திரும்பவேண்டியதுதான்" என்று சொல்லிக் கிளம்பினான். பாஸ்கரன் உள்ளத்தில் கொந்தளிக்கும் அலைகள் அவனுக்குக் கலவரத்தை உண்டுபண்ணி மௌனத்தை நிலவச்செய்திருப்பது உத்தமன் அறிந்ததே; மெல்ல விசாரித்தறிந்து கொள்ளலாம் என்ற எண்ணத்தில் அவனும் ஒன்றும் கேட்கவில்லை.

* * * * *

"அரசே! அதோ நம் அரண்மனையிலிருந்து அதிவேகமாக வெளியேறும் ஆளைப்பார்த்தீர்களா? யாரோ தூதன்போல் காணப்படுகிறான். எந்த சமஸ்தானத்திலிருந்தோ? என்ன செய்தி கொண்டுவந்தானோ? தெரியவில்லையே!"

"விஷயம் என்னவோ! குருதேவரைக் கேட்டால் தெரிய வருகிறது...உண்மை நிலைமை தெரியும்வரை கலவரம்தான்!"

* * * * *

சீக்கிரமே அரண்மனையை அடைந்தார்கள். பாஸ்கரன் எப்போது வெளியில் சென்று வந்தாலும் ஸ்ரீவத்ஸரை நமஸ்கரித்துவிட்டு விசேஷங்கள் ஏதேனும் உண்டா என்பதை விசாரித்து அறிந்துகொண்டுதான் தனது அறைக்குச் செல்வான். அவ்வாறே அன்றும் ஸ்ரீவத்ஸர் இருக்குமிடத்திற்குச் செல்கையில் அங்கு நடந்துகொண்டிருந்த சம்பாஷணை அவனை அப்படியே தூக்கிவாரிப் போட்டது. மறைய நின்று மேலும் கேட்டான். ரத்தக்கொதிப்பு எடுத்துக்கொண்டது. கையைப் பிசைகிறான்! பல்லைக்கடிக்கிறான்! கத்தியை உருகுகிறான்! ஆனால் பொறுமையை இழக்கவில்லை. முற்றிலும் கேட்டுவிட்டுத்தான் உள்ளே பிரவேசிக்க வேண்டுமென்று வெளியிலேயே நின்றான்.

நந்தவனத்தில் நடந்த எதிர்பாராத சம்பவத்தைவிட இந்த சம்பவம்—கனவிலும் எதிர்பாராதது—அவனை சித்ரவதை செய்தது. "இப்படியா சமாசாரம்!...விஷயம் விளங்கிவிட்டது! முடிவும் தெரிந்ததுதான்!" என்று தனக்குள் கர்ஜித்துக் கொண்டான்: ஒரு க்ஷத்திரியனின் ரத்தம்கொதித்தால் யுத்தகளத்தில் ரத்தவெள்ளம் ஓடவேண்டியதுதான்! இதுவே உலக இயற்கை தர்மம்.

---

இந்த நவீனம்
தனிப்புத்தகமாக வெளிவருகிறது.
கிளேஸ்ட் பதிப்பு. ரூ. 1.

பின்பக்கம் பார்க்கவும்

# உதய சூரியன்

ஒவ்வொரு இதழிலும் இந்த நவீனத்திற்கு நான்கே பக்கங்கள் அளித்து வருவது நேயர்களுக்குப் போதவில்லை : 8 பக்கங்களாவது அச்சிடலாகாதா என்றுகேட்டு,தங்கள் ஆவலை வெளியிடுகின்றனர். தற்போது நிறுவப்பட்டுள்ள திட்டப்படி இது சாத்தியமில்லை. இப்போது வெளியிடுவதுபோல 4 பக்கம் வீதமே வெளியிட்டு வந்தால் டிஸம்பர் இதழில் இக்கதை முடிவடையாது. சென்ற ஜனவரியில் ஆரம்பித்த கதையை அடுத்த ஆண்டிலும் தொடர்வது உசிதமாகத்தோன்றவில்லை. இதையெல்லாம் உத்தேசித்து, வாசகர்களையும் சீக்கிரமே திருப்தி செய்யும் பொருட்டு, இந்த நவீனத்தைத் தனிப்புத்தகமாக வெளியிடுகிறோம். இவ்விதழின் தொடர்ச்சியை முழு புத்தகத்தில் படிக்கவும்.

1. நந்தவனத்தில் கண்ட நாரீமணி யார் ?
2. தூதன் எங்கிருந்து வந்தான் ? என்ன செய்தியுடன் ?
3. ஸ்ரீவத்ஸர் பேசிக்கொண்டிருந்த அந்தரங்க விஷயம் யாது ?
4. ரத்தக்கொதிப்பு ரத்தவெள்ளத்தில்தான் முடிகிறதா ? அல்லது?..
5. பாஸ்கரனின் காதல் விஷயம் என்னவாகிறது ?
6. மங்களபுரி-அந்தரபுரி-ஸிம்மபுரி-ஆனந்தபுரி-அமரபுரி-...?
7. எதிர்பார்த்ததும், எதிர்பாராததும்...?

இதுவரை வெளியாகியுள்ள 16 படங்கள் தவிர பல புதிய படங்களுடனும், கவர்ச்சி மிகுந்த இருவர்ண மேலட்டைப் படத்துடனும் வெளிவருகிறது. (கிளேஸ்பேப்பர், ஒயிட்போர்ட் ராப்பர்.) விலை ரூ. 1 - தான்.

# கிரீஷ்ம ருதுமலர்

கிரீஷ்ம ருது மலரின் மேலட்டைப் படமே இவ்விதழை (வேறு வர்ணங்களில்) அலங்கரிக்கின்றது. கிரீஷ்ம ருதுவில் மலர்ந்த மகோன்னத மலர் ஸ்ரீ பூங்கோதை சூடிக் கொடுத்தாள்தான் ; திருத்துழாய் வனத்தைச் சிறப்பித்த அவளது அவதாரக் காட்சியே நந்தவனத்தின் கிரீஷ்ம ருதுமலரின் மகுடச்சித்திரமாகத் திகழ்கிறது. பெண்மையின் பெருமைக்குச் சிகரமாக விளங்கவே இப்புவியில் ஆண்டாள் அவதரித்ததைத் தாங்கி வெளிவருவதே பெண்களின் ப்ரத்யேக வெளியீடாகிய நந்தவனத்திற்கு ஏற்றதாகும். வஸந்த ருதுமலரைப் போலவே சிறந்த முறையில் உயர்ந்த அம்சங்களுடன் இந்த மலரும் அமைந்திருக்கிறது. 25 ஸ்த்ரீ எழுத்தாளர்களின் அருமையான தமிழ் மலர்கள். பல அழகிய படங்கள். மிகவும் உயர்தரமான 555 ரக கிளேஸ் பேப்பர்.

விலை 1—8 தான். 1—11 உடனே அனுப்பி ரிஜிஸ்டர் போஸ்ட்மூலம் பெற்றுக்கொள்ளவும். ரூ. 7—8—0 அனுப்புகிறவர்களுக்கு கிரீஷ்ம ருது மலரும், இனி வெளியாகப்போகும் 4 ருது மலர்களும் ரிஜிஸ்டர்போஸ்டில் அனுப்பப்படும்.

வஸந்த ருதுமலர் முற்றும் செலவாகிவிட்டபடியால் தயவுசெய்து 6 மலர்களுக்காக 9—0—0 என்று அனுப்பாமலிருக்கும்படிக் கேட்டுக் கொள்கிறோம். 7—8—0 அனுப்பி மீதி 5 மலர்களையும் பெற ஏற்பாடு செய்யுங்கள்.

# எது உயர்ந்தது?

## கல்வி ஞானமா?— அனுபவ ஞானமா?

### 1

ஸ்ரீமதி. ஆர். புண்ணியவதி.

இப்பொருளை உற்று நோக்குழி, இது ஒரு பட்டி மண்டபத்தில் அறிஞர் பலர் கூடி, தர்க்கிக்கக் கூடிய தொன்றாகும் எனின் மிகையாகா. கல்விஞானமும் இன்றியமையாதது. அனுபவ ஞானமும் அகத்தியம் வேண்டும். ஆயின் இவ்விரண்டில், எது தலையாயது என்பதை ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கம்.

இவ் வையகத்தின்கண் உள்ள எல்லா துறைகளையும் ஆராய்ந்தால் அனுபவ ஞானம் எத்தனை அகத்தியம் என்பது உள்ளங் கை நெல்லிக் கனிபோல் காணப்படுகிறது. மருத்துவ தொழில் பயிலும் வைத்தியர்களுக்கும், மருத்துவதாதிகள் முதலியவர்களுக்கும் கல்விஞானம் மட்டும் போதாது. அனுபவ ஞானமே அன்னாருக்கு அகத்தியம் வேண்டுமென்பதைக் கருதியே, மருத்துவ சம்பந்தமானவைகளைச் செய்துப் பழக பல ஆண்டுகள் அவர்களுக்கு நிர்ணயிக்கப்படுகிறது. அனுபவ ஞானமே அவர்களுக்கு வலதுகை போன்றது. உபாத்தினி தொழில் பயிலுபவர்களுக்கும், மாணவிகளுக்கும் பயிற்றுவிக்கும் மார்க்கத்தை கல்வி ஞானத்தால் மட்டும் அடைய இயலாது. இதுபற்றியே, அவர்களுக்கு அனுபவ ஞானத்தை அடைய சந்தர்ப்பங்கள் கொடுக்கப்படுகின்றன. அன்னாரது வாழ்க்கையில் வெற்றிமாலை புனைய உதவி நல்குவது அனுபவ ஞானமே. நாநலம் என்னும் சீரிய நாவின் வன்மையால், கேட்போரை வசிகரிக்கும் தன்மை வாய்ந்த சிறந்த சொற்பொழிவாளர்களுக்கும் கல்வி ஞானம் மட்டும் அத்தகைய மாட்சியுள்ள மகுடத்தை அணியச் செய்ய உதவ முடியாது. அனுபவஞானமே கல்வி ஞானத்தைக் காட்டிலும் அதிகமாய் இத்துறையிலுள்ளவர்களுக்கு உதவும். இதன்உண்மையை "சித்திரமும் கைப் பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்" என்ற வாக்கு தோன்றியுள்ளது. உயரிய அனுபவ ஞானத்தால்தான் சித்திரக்காரர்களும், ஓவியக்காரர்களும் உன்னத நிலையை அடைகின்றனர். அனுபவ ஞானமே நம் கண்ணைக் கவரும் தாஜ்மஹாலைத் தோற்றுவித்துளது. ஐம்புலன்களையும் ஒருங்கே ஈர்க்கும் அஜாந்தா குகையையும் இயற்றுவித்தது. நடிகர்களுக்கும் பாடகர்களுக்கும் பக்க துணையாய், ஜீவநாடியாய், உயிர்க் கருவியாய் மிளிர்வது அனுபவ ஞானமே. உலகின்கண் உள்ள சிறியது முதல் பெரிய தொழில்கள் வரை உதவுவது அனுபவ ஞானமே.

கருத்தைக்கவரும் கவிகளை இயற்றும் கவிஞர் உலகத்திலும், அனுபவ ஞானமே அதிக நன்மைபயக்கிறது. கல்விஞானமும் கவிஞர்க்கு வேண்டுவதே. அத்துடன் அனுபவஞானமே அவர்களுக்கு அதிக நன்மை நல்கும். குழந்தைகளது பிரிவு, மனைவியின் சாவு, வாழ்க்கையின் இன்னல்கள்,

முதலியவற்றால் சோகக் கடலில் ஆழ்ந்து அடைந்த அனுபவஞானமே தாகூரை, உலகம் போற்றும் "கீதாஞ்சலி"யை இயற்றத் தூண்டியது. ஆங்கிலேய கவி மன்னர் ஷேக்ஸ்பியர் தன் அனுபவ ஞானத்தின் பயனாகவே நிகரிலா பல நாடக பகுதிகளையும், அரும் பாக்களையும் யாத்தனர். இயற்கை அன்னையின் இனியப் புதல்வர் வில்லியம் ஒர்ட்ஸ்வர்த் இயற்கையின் இனிமையை நுகர்ந்தபின், தன் அனுபவ ஞானத்தின் வாயிலாக இயற்கையின் இனிமையை கவிகளாக இயற்றினார். தன் வாழ்க்கை படலத்தில் அனுபவித்த வசைபுராணங்களும், சொல்லம்புகள்நிறைந்த யுத்த காண்டங்களின் அனுபவ ஞானமே, மில்டனை " சுவர்க்க நீக்கம் " என்னும் அரும் பெருங்காப்பியத்தை இயற்றப் பணித்தது.

கரும்பின் ருசி கழுதைக்குத்தெரியாது. அதனை உண்டார்க்கே தெரியும். அருந்தமிழ்த் தாயின் பெருந்தவப் புதல்வர். " நாமார்க்கும் குடியல்லோம் " என்ற வீர உணர்ச்சியை வளரச்செய்தவள்ளல், "வீர சுந்ததிரம் வேண்டி நின்றார் பின்னர் வேறொன்றும் கொள்வாரோ; விட்டு விடுதலையாகி இந்த சிட்டுக்குவியைப் போல் நிற்கவேண்டாமா " என்ற சுதந்தரதாகத்தை எழுப்பிய சுப்ரமணிய பாரதியார், நம் அருந்தமிழின் இனிமையை அனுபவத்தில் கண்டார். முறையே ஆங்கிலம், ஆரியம், தமிழ் பயின்றிருந்தாலும் அனுபவ ஞானத்தில் பெரும் உண்மையைக் கண்டார். " யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம் " என்றும், "யாமறிந்தபுலவரிலேகம்பனைப் போல், வள்ளுவனைப்போல், இளங்கோவைபோல் பூமி தனில் யாங்கனுமே கண்டதில்லை. வெறும் புகழ்ச்சியில்லை உண்மை, எனவும் " சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே " என்றும் " நெஞ்சை யள்ளும் சிலப்பதிகாரமென்றோர் மணி ஆரம்படைத்த தமிழ்நாடு " என்றும் போற்றுகிறார். அனுபவ ஞானத்தால் தமிழின் நேயத்தைக் கண்டு இங்கு அமரர் சிறப்பு கண்டார்.

பக்திமார்க்க விஷயத்திலும் அனுபவ ஞானமே அளவற்ற நன்மை நல்கும். அலகிலா விளையாட்டுடைய அண்ணலும் பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலபரிவுகொண்ட இறைவனைவணங்கும் இன்பத்தில்திளைத்த இராமலிங்க சுவாமிகள் "கோடையிலே இளைப்பாற்றி கொள்ளவகை கிடைத்த குளிர் தருவே; தருநிழலே; நிழல்கனிந்த கனியே " எனப்பாடுகிறார். எத்துணை பட்டதாரியாகஇருந்தாலும் அனுபவ ஞானமே நமக்குப் பக்தி மார்க்கத்தைக் கிட்டுவிக்கும். இறைவன்மாட்டு தளர்விலா நம்பிக்கையும் உண்மை பக்தியும், சோர்விலா சிந்தையும் அனுபவ ஞானத்தால் மட்டுமே பெறலாம்.

" கற்றறி வாலுனை நான்
கண்டவன்போல் கூத்தாடில்
குற்றமென்றன் நெஞ்சே
கொதிக்கும் பராபரமே "

என்கிறார் தாயுமானவர். சமணமதத்தினின்று, சைவ மாதம் மாறிய அப்பர் தன் அனுபவ ஞானத்தால் "நாமார்க்கும் குடியல்லோம்" என்றும் வானந் துளங்கிலென் மண் கம்பமாகிலென் ; ஊனமொன்றிலா ஒருவனுக்கு ஆட்பட்ட உத்தமர்க்கு" என்ற வீரப்பாடல்களை இசைத்தார். அன்பே சிவம் என்கிறது இந்து மதம். அன்பே ஆண்டவன் என்கிறது கிறிஸ்தவ மதம். அன்புள்ள சிந்தையராயிருங்கள் என்கிறது இஸ்லாமிய மதம். அன்

புடையார் அகத்தாமரையில் இறைவன் குடிகொண்டுள்ளான் என்கிறார் சீக்கியமத குருநானக். இவைகளை அனுபவ ஞானத்தின் மூலமே உண்மையென உணரலாம்.

பொதுவாக நம் வாழ்க்கையில் நலனுற கல்வி ஞானம் வேண்டும். ஆயின் இத்துறையிலும் அனுபவ ஞானமே தலைசிறந்தது. இதய அன்பராம் காந்தியின் உத்தம மனைவி, அவரது சத்திய சோதனையில் ஒரு அங்கம், உன்னத தேச சேவகி, சிறந்த அன்னை. ஆம். கஸ்தூரிபாய் காந்தி அவர்கள் யாதொரு பள்ளிக்கூடமும் சென்று கல்வி ஞானமடைந்ததில்லை. தேசியப் போராட்டம், துன்ப வாழ்வு, சிறைச்சாலை, என்ற பெரியபள்ளிக்கூடங்களிலே கற்ற அனுபவ ஞானம்தான் அவரது வாழ்க்கையைச் சோபிதமாக்கியது. புனிதமாக்கியது. வாழ்க்கையில் ஒவ்வொருகணமும்போர்புரிபவனே உண்மை மனிதன் என்பதைஅனுபவத்திலேதான் காணலாம்.வாழ்க்கைப் போரில் வெற்றியடைந்து வாகைமாலை சூட அனுபவ ஞானந்தான் மூலகாரணம். வாழ்க்கை படகு, கடும் புயல்காற்று, இடி, மின்னல், சுழல்களில் சிக்கியுழலுங்கால், கல்வி ஞானம் படகுகள் தள்ளும் துடுப்புகள் போன்றிருந்திடினும், மாலுமிபோல் திகழ்வது அனுபவ ஞானமே. நம் மனத்திலுள்ள இன்ப நிலவை ஒளிரச் செய்வதும், துன்ப இருளை அகற்றுவதும் நம் அனுபவ ஞானமே.

அகண்டவிளக்குமுதல் மின்சார விளக்குவரையில் வீட்டில் அநேக விளக்குகள் உள. ஆனால் சாரளத்தினின்று மெல்ல, மெல்ல உள்ளே வரும் நிலவின் ஆனந்தம் இவ்விளக்குகளின் ஒளியில் இருப்பதில்லை. நிலவைநிகர்த்ததே அனுபவ ஞானம். "கலைகளுக்கெல்லாம் தாயகம் அல்லது உறைவிடம் அனுபவமே" என்றும், "அனுபவ ஞானமற்ற கல்வியைவிட, கல்வி ஞானமற்ற அனுபவ ஞானமேமேல்" என்று கருத்துக்களமைந்த ஆங்கிலப் பழமொழிகளை உற்று நோக்குழி, அனுபவ ஞானமே கல்வி ஞானத்தைவிட உயர்ந்ததென தெற்றெனப் புலப்படுகிறது

அனுபவ ஞானமே ஒப்பிலா குரு. விலைமதிக்கவொண்ணாத நிதி, பொக்கிஷம். நம் வாழ்க்கையின் வழிகாட்டியும் அஃதே.

## 2

**ஸ்ரீமதி. பாத்திமா பீபி**

கற்றதனால் ஏற்படும் தெளிந்த அறிவு கல்வி ஞானம். கற்றவைகளை அனுஷ்டித்து அதன் பலாபலன்களை அனுபவித்து பிறகு அடையும் ஒரு அசைக்கமுடியாத நம்பிக்கைத்தான் அனுபவ ஞானம். தான் கற்ற நூலளவேயாகுமாம் நுண்ணறிவு என்பதற்கொப்ப கல்வியின் அளவுக்கு தகுந்தாற்போல் அறிவு இருக்கும். தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்கற்றனைத்தூறும் அறிவு. அனுபவ ஞானம் ஒருவன் தன்னுடைய செயலாற்றும் தன்மைக்கும் அளவுக்கும் தக்கபடி அடையலாம். கல்வி ஞானம் என்னும் விதையை செயல்என்னும் நிலத்தில் விதைத்து வளர்த்தால் அது அனுபவ ஞானம் என்னும் கனியைத் தரும். இந்த விருக்ஷம் ப்ரம்மாண்டமாய் படர்ந்து வளரக்கூடிய தன்மை உடையது. இந்த விருக்ஷத்தின் குளிர்ந்தநிழலில் உலகமே சுகம் பெறலாம். கனிகளை பறித்துஉண்டு பசியாற்றிக்கொள்ளலாம். பறிக்க பறிக்க அதிகமாய்

காய்க்கும் தன்மையுள்ளது. இந்த விருக்ஷம் நம் தெய்வப்புலமை திருவள்ளுவ நாயனார் கற்ககசடறகற்க கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக என்றியம்பி கல்விஞானம் அனுபவஞானம் இரண்டையும் இணைத்து தன்னுடைய இந்த சிறிய வாக்கியத்தில் அடக்கிவிட்டார். குறள் ஒரு சமுத்திரம்போன்றுள்ளது ஒருவன் தன்னுடைய அறிவுக்கும் ஆற்றலுக்கும் தக்கபடி இந்த சமுத்திரத்தில் நீந்தலாம். பழுது இல்லாமல் கல்வியை கற்கவேண்டும் என்று கூறியதுடன் நிறுத்தவில்லை. கற்றபின் நிற்க அதற்கு தக என்று கூறினார். ஏன்? இங்குதான் அனுபவத்தை கல்வியோடு பிரிக்கமுடியாமல் இணைத்துவைத்தார். கற்றபின் என்பது, கல்வி பூராவும் கற்றபின் என்பது அர்த்தமல்ல =கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு=மனிதனுடைய ஆயுளைப் போல் அவ்வளவு குறுகியது அல்ல கல்விக்கடல். ஆகையால் கற்றபின் என்பதற்கு ஒரு விஷயத்தை கற்ற உடனே என்பதுதான் சரியான வ்யாக்யானம். இப்படி பார்த்தால் கற்கும்போதே கற்றவைகளை அனுஷ்டிக்கும்படி நாயனார் போதிக்கிறார். இந்த சிறிய வாக்கியத்தில் கல்வி கற்பவனுக்கு ஓர் நிபந்தனையை நாயனார் வைத்திருக்கிறார். அதாவது கல்வியை அனுஷ்டிக்க வேண்டும் என்பதே. நியாயம்தான். செயலற்ற கல்வி அர்த்தமற்றது. அவ்வித கல்வியை ஏட்டு சுரைக்காய் கறிக்கு உதவாது என்ற பழமொழிக்கு உதாரணமாய் வைத்தலே நன்று. கொச்சையாகச் சொல்லின் அனுஷ்டிக்காமல் வெறுமனே கற்றவர்களை குங்குமப்பூ சுமந்த கழுதைகள் என்று கூறலாம் இது கொஞ்சம் கடுமையான வார்த்தைதான். ஆனால் உண்மையை அடிப்படையில் கொண்டுள்ளது. கல்வி கற்றோர்க்கும் மற்றோர்க்கும் நன்மைகொடுக்கக்கூடியது என்பதில் சந்தேகமே இல்லை. ஆனால் எப்பொழுது? அது அனுஷ்டானத்தில் வரும்பொழுது. அப்படிக்கில்லாத கல்வியை பசியைத் தணிக்காத ஆகாரம்; வியாதியைப் போக்காத மருந்து; யாருக்கும் ப்ரயோஜனப்படாத செல்வம் இவைகளுடன் ஒப்பிடலாம். நாயனார் இந்த இரண்டு வித ஞானங்களையும் ஏககாலத்தில் அடையவேண்டும் என்னும்கருத்தை தன்னுடைய குறளில் ஸ்பஷ்டமாய் வெளியிட்டிருக்கிறார்.=கண்ணுடையரென்பர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையவர் கல்லாதவர் என்னும் நாயனார் உடைய குறளை சிலர் கல்லாதவர்களை இழிவுபடுத்திக் கூறுவதற்குமட்டும் உபயோகிப்பது சரியில்லை. இதில் கற்றோருடைய கடமையை நாயனார் எவ்வளவு நியாயமாய் அறிவுறுத்துகிறார் என்பதை கவனிப்பதில்லை. கல்லாத குருடர்களுக்கு வழிகாட்ட கற்றவர்கள் கடமைபட்டிருக்கிறார்கள். குருடனுக்கு வழிகாட்டாத கண்ணுள்ளவன் கண்ணினால் ப்ரயோஜனமில்லை. அவனும் குருடனே. அவ்வளவுமட்டுமல்ல குருடர்கள் கருணைக்கும் இரக்கத்துக்கும் பாத்திரமானவர்கள் என்பதை அன்பே உருவாகிய நாயனார் மறைமுகமாய் கூறுகிறார். தாமின்புறுவதுலகின் புறக்கண்டு காமுறுவர் கற்றறிந்தார். நாயனார் கூறும் கல்வி அனுபவத்துக்கும் அனுஷ்டானத்துக்கும் ஒத்தது. கல்வி கற்பதோடு கடமை தீர்ந்துபோவதில்லை அதனால் தானும் நன்மை அடைய வேண்டும். அப்பொழுதுதான் பூர்த்தியாகும். இப்படி செய்ய

அனுபவஞானம் தேவை. அனுபவ ஞானமில்லாத கல்வி பயன் தராது. இதைத்தான் நாயனார் உலகத்தோடு ஒழுகல் பல கற்றும் கல்லான் அறிவிலாதான் என்று கூறியுள்ளார். கல்விஞானம் அனுபவஞானம் இரண்டும் பிரிக்கமுடியாதவைகளாய் அமைந்திருக்கின்றன. மனிதனை ஒரு மின்சார விளக்குக்கு ஒப்பிடலாம். மின்சார விளக்கு இருவித சக்தியில் ப்ரகாசிக்கிறது. ஒன்று நெகடிவ் மற்றொன்று பாசிடிவ். விளக்கு ப்ரகாசித்து இருளைப் போக்கவேண்டின் இந்த இரண்டு சக்திகளும் அவசியம். ஒன்று இல்லையேல் மற்றொன்று சக்தியற்று போய்விடும். மனிதன் ப்ரகாசித்து தனக்குள்ளும் மக்களின் உள்ளங்களுக்கும் நிறைந்து கிடக்கும் இருளைப்போக்கி நன்மைஅடையவும் நன்மைபயக்கவும் வேண்டின் இருவித ஞானங்களும் தேவை. எது பெரிது என்பதற்கிடமில்லை.

—oo✕oo—

## சகோதரிகளுக்கு

நமது கட்டுரைப் போட்டி விஷயமாக சகோதரிகள் காட்டும் ஆர்வம் என்னைப் பரவசப்படுத்துகிறது. மறைந்துகிடக்கும் மாணிக்கங்களைத் தேடிபிடிக்கும் சந்தர்ப்பத்தை அளிக்கிறதல்லவா இந்த அம்சம்?

பல சகோதரிகள் அருமையாக எழுதியிருக்கிறார்கள். பரிசுக்குரியதெனக் கருதப்பட்ட இருகட்டுரைகளைப் பிரசுரித்திருக்கிறேன். ஸ்ரீமதிகள் ஆர். பி. செண்பகம், கி. ஜெயலக்ஷ்மி, சிவ. வள்ளியம்மை முதலானோர் எழுதிய கட்டுரைகள் அடுத்தபடியாகக் குறிப்பிடத் தக்கவை. "சபாஷ்!" என்ற முறையில் ஷை ஐவரும், "தேவலையே!" என்ற முறையில் பலரும் எழுதியிருக்கிறார்கள்.

அடுத்தக் கட்டுரைப் போட்டிக்கு "பணத்தினால் பெற முடியாதவை எவை?" என்ற விஷயம் அளிக்கப்பட்டிருக்கிறது. 20உக்குள் எழுதி அனுப்பவும்.

ஆசிரியை.

ஸ்த்ரீகளுக்கென்றே நந்தவனத்தைச் சிருஷ்டித்துள்ள எனக்கு சகோதரிகளின் ஒத்துழைப்பும் உற்சாகமும் திருப்திகரமாகவே இருக்கின்றன. தாரண வருடத்தில் வெளியிடும் 6 ருது மலர்களிலும் பல புதிய எழுத்தாளிகளை வாசகர்களுக்கு அறிமுகப் படுத்தும் நல்ல சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. "நமது தமிழ் நாட்டில் 150 சிறந்த ஸ்த்ரீ எழுத்தாளிகள் இல்லையா?" என்ற கேள்வியை உங்களிடம் கேட்கிறேன். "ஏனில்லாமல்? இதோ என்னுடைய மலர்: நந்தவனத்தை அலங்கரியுங்கள்!" என்று உங்களில் பலர் உடனே பதில் சொல்வீர்களல்லவா? எழுதியும் அனுப்பிவிடுவீர்களென்ற நம்பிக்கையும் உண்டு. நான் விரும்புவதும் அதுவேதான்!

வை. மு. கோ.

## 7

குல விளக்காய், உதாரணப் பெண்மணியாய் உலகோர் மெச்சும் வகையில் ஸரஸா நடப்பதையும் அவள் வயதில் சிறியவளாயினும் புத்தியில் யுக்தியில் பெருந்தன்மையில் குடும்ப நிர்வாகத்தில் மகா கெட்டிக்காரியாய் மிகவும் கொண்டாடத் தக்க முறையில் குடும்பம் நடத்துவதையும் கண்டு எல்லோரும் கொண்டாடுகிறார்களேயன்றி அவளைக் கட்டிய கணவனுக்குமட்டும் அவளிடம் தனி மதிப்போ, மகிமையோ ஒன்றுமே உண்டாகவில்லை.

சதா, 'சிள்ளு! சிள்ளு' என்று சீறி விழுவதும் கண்டதற்கெல்லாம் கண்டிப்பதும் எலியும் பூனையும் போல் சண்டை போடுவதும்தான் குடும்ப ராஜ்யாதிகாரம் வகிப்பது என்று எண்ணினான்போலும். அந்தரங்கமான அன்பு செலுத்தவேண்டிய இடத்தில் இத்தகைய பயங்கரப் புரட்சியானால் கேவலம் ஒரு மிருகத்திற்கும் கீழாக எண்ணியுள்ள அகிலாவிடத்தில் அண்ணன் எப்படி நடப்பானென்பதைக் கூறவேண்டுமா! சிம்மத்தைக் கண்ட மானின் கதியே அகிலாவின் கதியாகியது.

திடீரென்று ஊரிலுண்டாகிய காலரா நோயினால் அகிலாவின் தாயும் தகப்பனும் ஒருவரையொருவர் பின்பற்றி மறைந்த பிறகு அகிலாவின் வாழ்வு நடைப்பிணத்திற்குச் சமானமாகியது. இத்தனை அபாக்ய அந்தகாரத்தின் மத்தியில் அவளுடைய மன்னி ஒரு தனிச்சுடராய், தனி விளக்காய் ப்ரகாசிக்காதிருந்தால் அகிலா தற்கொலையே புரிந்துகொண்டிருப்பாள்.

தாயும் தந்தையும் இறந்தவுடனே இனி தான் எப்படி வாழப்போகிறோம், உலகில் உயிருடனிருப்பதற்குத் தனக்கு யோக்யதை உண்டா! என்று எண்ணிய அகிலா, மன்னியின் பரிபூர்ண அன்பின் ஆதரவால் அவ்வெண்ணங்களை அடியோடு மறந்து, இதற்கு முன்பிருந்த அழுகையும் துக்கமும்கூடச் சிறிதுமாறி சதா சிரிப்பும் விளையாட்டும் பாட்டும் கதையுமாக மன்னியுடன் பொழுது போக்க வாரம்பித்தாள்.

இந்த அபூர்வ மாறுதலுக்குக் காரணம் ஸரஸாதான் என்பதைக் கூறவேண்டுமா! ஸரஸாவினுடைய தகப்பனாரும் மகா ஆசார சீலர், வேதாந்தி என்றாலும் கேவலம் கண்ணை மூடிக்கொண்டு கிணற்றில் விழுபவரில்லை. உலகத்தோடொத்து வாழ் என்பதற்கிணங்க தம் வரையில் வைதீகம் ஸநாதனம் இவைகளை அனுஷ்டிப்பவரேயன்றி பிறர் விஷயத்திற்குப் போவதும், வீண் சண்டையை விலைக்கு வாங்குவதும் பிறரைக் கண்டித்து வம்புபேசித் தூஷிப்பதும் அவரிடம் கிடையாது.

“என்னிஷ்டம் நான் ஆசாரமாயிருக்கிறேன். உனக்குப் பிடிக்கவில்லை என்றால் உன்னிஷ்டம்போலிருப்பதுதானே!” என்று சொல்வாரேயன்றி அவர்களைச் சினந்துகொள்ளமாட்டார். அகிலாவின் தகப்பனாரைப்போல் கண்மூடித்தனமாகப் பேசமாட்டார்.

தன் பெண்ணுக்கு சங்கீதம் கற்பித்ததோடு பள்ளிக்கூடத்திற்கும் அனுப்பிச் சிறிது படிக்கவைத்தார். ஒரு சமயம் சம்ஸ்க்ருத பாடசாலையில் நடந்த வருஷக் கொண்டாட்டத்திற்கு தன் குமாரத்தி ஸரஸாவை சம்ஸ்க்ருத ச்லோகம் பாடச் செய்துப் பரிசும் பெறும்படிச் செய்திருக்கிறார். இச்செய்கையை ஆதரித்தவரும் இருந்தார்கள். தூஷித்தவர்களும் இருந்தார்கள். இதுதான் உலகம் தோன்றிய நாள் முதல் மக்க

ளிடையே சகஜமாக வளர்ந்துவரும் அசைக்கமுடியாத அம்சமாயிற்றே!

ஸாமிநாதனுக்கு ஆங்கிலப்படிப்பு கூடாதென்று நிறுத்தியதுபோல், ஸரஸாவின் தகப்பனர் செய்யாமல் தன் மகளைக் காலத்திற்கு ஏற்ப நாகரீகப் படிப்பும் படிக்கச்செய்யப் பின்னடையவில்லை. சகல அம்சங்களிலும் கால தேசத்தின் நியதியறிந்து நடப்பதில் அவர் கைதேர்ந்தவர். ஆனல் ஏழைதான் பாவம்! நிறைய செல்வமிருந்தால் புத்தி எப்படி ஆகியிருக்குமோ! யார் கண்டது? ஸரஸா இயற்கையிலேயே நல்ல அழகி. கூடுமானவரையில் சுத்தமாயும் அபஸ்வரமில்லாமலும் பாடுவாள். அவர்களைச் சேர்ந்த பந்துக்கள் வீட்டுக் கல்யாணங்களில் ஸரஸாதான் கச்சேரி செய்யும் பெரிய வித்வாம்ஸினிபோல் தைரியமாக வந்தவரையில் பாடித் தள்ளிவிடுவாள். அதையே எல்லோரும் ப்ரமாதமாகக் கொண்டாடுவார்கள்.


அதே சங்கீதம் ஸரஸாவிடம் இன்னும் ப்ரகாசிப்பதால் அகிலாவின் பொழுது போக்கிற்காகவும் அவளுடைய துயரங்களைமறப்பதற்காகவும் ஸரஸா தனக்குத் தெரிந்த பாட்டுக்களைச் சொல்லிக்கொடுத்துவந்தாள். அகிலாவுக்கு முதலில் சங்கீதம் கற்கச் சற்று அச்சமாயிருந்தது; எனினும் அவளுக்கு இயற்கையாயுள்ள சங்கீத ஆசையின் வேகத்தில் கற்றுக்கொண்டு நாளடைவில் ஸரஸாவைவிட அழகாகவே பாடவாரம்பித்துவிட்டாள். வீட்டில் இவர்களைத் தவிர வேறு யாருமே இல்லாததால் ஸாமிநாதன் இல்லாத வேளைகளில் இருவரும் சேர்ந்து ப்ரமாதமாகப் பாடித் தமக்குத்தாமே மகிழ்வார்கள். இந்த விஷயமே ஸாமிநாதனுக்குத் தெரியாது.

நாட்கள் பற்பல சென்று மறைந்தன. நாத்தியும் மதனியும்போல் இல்லாது சொந்த அக்காதங்கைபோலிருப்பதைக் கண்டு அக்கம் பக்கம் உள்ளவர்கள் வியந்ததோடு ஸரஸாவின் தாய் வீட்டினர் சிலர் சந்தோஷப்பட்டார்கள். சிலர் 'பயித்தியம் போல் அந்த வாழாவெட்டியிடம் அடிமையைப்போல் ஸலாம் போடுகிறதே அசடு' என்று தாராள மனப்பான்மையுடன் விமர்சனமும் செய்தார்கள்.

பின்னும் சிலர் "ஐயோ ராமா! இந்த அஸமஞ்சம் பெரிய பாடகியாகி எந்த சபையில் வந்து பாடி சன்மானம் பெறப் போகிறளோ ஆரத்தி எடுக்கவும் யோக்யதையற்ற வாழாவெட்டியாகத் தன்னை நினைக்காமல் இதுவும் கூத்தடிக்கின்றது. அந்த பெண்ணும் இதற்கு இடம் கொடுத்து பாட்டைக் கற்றுக் கொடுக்கிறதே!"... என்று மிகவும் இளப்பமாகப் பேசினர்கள். ஸரஸாவின் மனத்தைக் கலைத்துக் கலகம் செய்யவும் சிலர் தலைப்பட்டார்கள்.

மகா உத்தம குணமுடைய ஸரஸாவின் செவிகளில் இந்த அல்ப வார்த்தைகளுக்கு இடம் கிடைக்காது போய்விட்டது. ஏற்கெனவே ஸரஸாவை ஒரு காரியமும் செய்ய விடாது சகலத்தையும் அகிலாவே செய்து மகிழ்வாள். ஸரஸா கர்ப்பவதியாகி இருப்பதை அறிந்த அகிலா அளவிட்டுக் கூறமுடியாத சந்தோஷத்துடன் விதவிதமாக புஷ்பங்களைத் தைத்தும் கட்டிவைத்தும் தினம் அலங்காரம் செய்வதோடு அவள் இச்சித்த தின்பண்டங்களைச் செய்துகொடுத்து வெகு வெகு ப்ரீதியுடன் நடந்து வருவதைக் கண்ட ஸரஸாவே வியந்தாள்.

தன் தாயார் வீட்டிலிருந்தால்கூட இத்தனை வைபோகம் தனக்கு



நடக்காதென்பதை அவளது இதயம் உணராமலில்லை. எத்தனைக்கெத்தனை சந்தோஷப்படுகிறாளோ, அத்தனைக்கத்தனை கவலையும் விசனமும் ஊடே வதைத்தன.

நல்லபடி பெற்றுப் பிழைத்து தாயும் குழந்தையும் க்ஷேமமாக வர வேண்டும் என்பதொன்று, அவள் பிறந்த வீட்டிற்குப் போயிருக்கையில், தான் எப்படித் தனிமையிலிருப்பது? அண்ணன் ஒரு தூர்வாஸா வாயிற்றே! என்றது ஒன்று. எப்படியாவது ஸரஸாவும் குழந்தையும் க்ஷேமமாக வந்தால்போதும் என்று ப்ரார்த்தனை செய்தாள்.

ஸரஸாவுக்கும் அகிலாவை விட்டுப் போக மனது வரவில்லையெனினும் தான் இச்சமயம் சில மாதங்கள் பிரிந்துதானே ஆகவேண்டும் என்ன செய்வது? கணவனிடம் அகிலாவை அனாவசியமாகத் திட்டவும் கோபிக்கவும் செய்யாமல் கனிகரத்துடன் கவனித்துக்கொள்ளும்படிக் கூறினாள்.

பக்கத்து வீட்டில் புதிதாகக் குடி வந்துள்ளவர்களை முதலில் இவர்களுக்குத் தெரியாதெனினும் ஒரு தினம் அவர்களாக சில காய் கரி

களை எடுத்துக்கொண்டு வந்து ஸரஸாவிடம் கொடுத்து "இது எங்கள் தோட்டத்தில் காய்த்தது. நிறைய இருப்பதால் வீணாகப் போவதை யாருக்காவது கொடுக்கலாமென்று தோன்றியது. எங்களுக்கும் அக்கம் பக்கத்தில் யாரும் தெரியவில்லை முதலில் யாராவது வந்தால் தானே தெரியும்; ஆகையால் நீயேகொண்டு கொடுத்துவிட்டுவா! என்று அம்மா சொன்னாள்; அதனால் வந்தேன்" என்று ஒரு அழகிய நங்கை (சுமார் 17—18 வயது மதிக்கக் கூடிய யுவதி) கூறிக்கொண்டு வந்தாள்.

சுருசுருப்புடனும் கபடமற்ற பார்வையுடனும் கம்பீரமாக விளங்கும் அச்சிறுமியை முதல் முதல் பார்த்தவுடனேயே அகிலாவுக்கும் ஸரஸாவுக்கும் மிகவும் பிடித்தது, ஒருவிதமான கர்வமுமின்றி வெகு ஸகஜமாகப் பேசுவதைக் கண்டு மிகவும் சந்தோஷத்தால் உள்ளம் பூரித்து அகிலா அப்படியேநிற்கிறாளே யன்றி அவளுடன் பேசி உபசரிக்க பயந்து நடுங்கினாள். அதற்கும் வாழா வெட்டி என்கிற பயங்கரச் சொல் வந்து தாக்கிவிடுமோ! யார் என்ன சொல்வார்களோ என்கிறபயத்தால் தேகம் குன்றித்தடுமாறி விட்டாள். ஸரஸா வெகு புத்திசாலித் தனமாக வந்தவளை உபசரித்துப் பேசிப் பின் மஞ்சள் குங்குமம் கொடுத்தனுப்பினாள்,

இதே சிறிய சந்திப்பினால்நாளடைவில் ஸரஸா அடிக்கடி அவர்கள் வீட்டிற்குச் செல்லவும் அந்தப் பெண்ணின் தாயார் கர்ப்பவதியாகிய ஸரஸாவுக்கு விதவிதமாகப் பக்ஷணங்கள் செய்து கொடுப்பதும் விருந்துச் சாப்பாடு நிலாச் சாப்பாடு முதலியன வைப்பதுமாக மிக மிக அன்யோன்ய பாவத்துடன் பழக்க மேற்பட்டது.

முதல் நாள் வந்த பெண்ணாகிய அமராபாயிக்கு ஸரஸாவிடமிருந்து ஸம்ஸ்கிருதம் கற்றுக்கொள்ள ஆசை யாதலால் அவள் அதைக் கற்றுக்கொண்டு ஸரஸாவுக்கு தையல் வேலை, பூபோடும் பலவிதமான வேலைகள் முதலியவற்றைக் கற்றுக்கொடுத்தாள்.

விதவிதமாகத் தையல் வேலைகளும் பொம்பு வேலைகளும் ஸரஸாவைவிட அகிலாவுக்கு வெகு சீக்கிரம் வந்துவிட்டதால் அமராபாயிக்கு மிகவும் பற்றுதலுண்டாகி அகிலாவின்மீது ஒரு தனி ஆசை உதித்தது.

அகிலாவுக்கு ஒரு நல்ல பொழுது போக்குக்கு வேலையும், பேச்சுத் துணைக்கு நல்ல சிநேகிதையும் கிடைத்துவிட்டதைப்பற்றி ஸரஸா பரம சந்தோஷமடைந்தாள். தன் தாய் வீடுசென்றிருக்கையில் அகிலாவின் பொழுது நன்றாகக் கழியும் என்றே ஸரஸா அமராபாயின் சிநேகத்தை மிகவும் விரும்பி அகிலாவுடன் பழக்கிவிட்டாள்.

விசனத்தையே மறந்து அகிலா புதிய குஷியாயும் சந்தோஷமாயும் அவள் வரையில் சற்று ஆனந்தமாயுமிருப்பதால் உடம்பு முன்போலில்லாமல் சற்று தேறி மேனியிட்டிருந்தது கண்டு ஸரஸாவின் மனம் மகிழ்ந்தது. என்றென்றும் இப்படியே இருக்கும்படியான ஒரு புதிய நிலையைக் காட்டும்படி கபடமற்ற அவள் மனது சதா ப்ரார்த்தனை செய்தது.

## 8

அமராபாயின் சிநேகத்தை அகிலா ஒரு பொக்கிஷமாக எண்ணினாள், முதலில் அமராபாய் கல்யாணமாகியவள் என்றும் தாயார் வீட்டிற்கு வந்திருப்பவள் என்றும் அகிலா எண்ணியிருந்தாள். ஆனால் பழகிய

யின் விசாரித்ததில் கல்யாணமே இன்னும் ஆகவில்லை என்றும் மகாராணி கலாசாலையில் B. A. வகுப்பில் படிக்கிறுள் என்றும் அமராபாயின் மூத்த சகோதரி இன்னும் விவாகமாகாது B. A. பாஸ் செய்துவிட்டு வெளியூரில் உபாத்தியாயினியாயிருக்கிறுள் என்றும் அறிந்ததும் அவளுடைய ஆச்சரியம் கரைபுரண்ட வெள்ளமெனப் பெருகியது.

உலகமென்ருல் ஏதோ சாஸ்திரத்திற்குக் கட்டுப்பட்டு 5 வயதிலும் 3 வயதிலும் கல்யாணமென்கிற சடங்கைச் செய்து பால் மணம் மாருத பாலகியை வாழ்நாள் முழுதும் சிறையிலடைப்பதற்கொப்ப பாழ்படுத்திப் பார்ப்பதுதான் என்று அகிலா இதுகாறும் நினைத்திருந்தாள். தன்னைப் போலவே வெகு பாலியத்தில்தான் உலகத்தில் உள்ள சகல பெண்களுக்கும் கல்யாணமாகிவிடும். தன்னைப்போல் துரதிருஷ்டம் பிடித்த பிண்டம் உலகத்தில் தன்னைத் தவிர இருக்காது. மற்றவர்கள் ஏதோ மனமொத்து இன்பமாக வாழ்க்கை நடத்துவார்கள்.......

என்றெல்லாம் எண்ணியிருந்த அவளுக்கு அமராபாயின் சினேகம் கிடைத்த பிறகுதான் வயதுசென்ற பெண்களுக்கும் விவாகமாகாமலிருக்கும் ஆச்சரியத்தை அவளால் பொறுக்கவே முடியவில்லை. அவர்களும் தன்னைப்போன்ற உயர்ந்த ஜாதிக்காரர்கள்தானே! அவர்களுக்குமட்டும் ஜாதியும் சம்பிரதாயமும் சாஸ்திரமும்கிடையாதா? எதற்காக எனக்குமட்டும் அத்தனை சிறு வயதில் இந்த பயங்கர விவாகத்தைச்செய்து சோதனைக்குள்ளாக்க வேண்டும். சாஸ்திரமும் தருமமும் எல்லோருக்கும் ஒன்று தானே!" என்ற எண்ணம் அவள் மனத்தில் பலமாகஎழுந்து போராடத் தொடங்கியது. இந்தப் போராட்டத்தையாரிடம் தெரிவிக்க முடியும்? யாரிடம் தெரிவித்தால்தான் இதற்குப் பரிகாரமான பதிலும் ஆதரவும் கிடைக்கும்? பாழாகிவிட்ட தன் வாழ்க்கையின் அந்தகாரத்தை யாரால்தான் நிவர்த்திசெய்து பிரகாசத்தை உண்டாக்கமுடியும்? அழிந்தது அழிந்தது தானே!

இத்தனை பரந்த உலகத்தில் கோடிக் கணக்காகப் பிறந்துள்ள மக்களில் பகவானின் கண்ணுக்கு நான் ஒருத்திதான் தெரிந்தேனு! சுகமும் சந்தோஷமும் நிறைந்து வெகு மேன்மையாக இருக்கவேண்டிய வயதில் இப்படித் திரும்பினுல் வாழாவெட்டி, அப்படித்திரும்பினுல் விதவைக் கோலம்......ஐயையோ! இந்த பயங்கரத்தையும் அநியாயத்தையும் தாங்குவதற்காக ஒரு பிறப்பை பகவான் உண்டாக்கி வேடிக்கை பார்க்கிறுர்....உம்.... பகவான் மீது என்ன குற்றம்? செய்த பாவத்தை அனுபவிக்காமலிருக்க முடியுமா! செய்த பாதகத்தின் பரிபவ சோதனை போதாமல் இன்னமும் பாவத்தைக் கட்டிக் கொள்ள வேண்டுமா! என்று தனக்குத் தானே மனத்தைத் தேற்றிக் கொண்டாலும் நாகரீக உலகத்தின் புதிய புதியத் தன்மைகளைக் காண அவளது வெதும்பும் இதயம் சாந்தியடையவில்லை.

அமராபாயிடம் சிநேகம் வளரும் முறையில் அகிலாவின் உலக விவகார ஞானமும் வளரத்தொடங்கியது. அமராபாயின் சிநேகிதிகள் சிலர் கல்யாணமானவர்கள், ஆகாதவர்கள் எல்லோரும் வெகு குஷாலாக படிப்பதும், உத்யோகம் வகிப்பதும், குழந்தை குட்டிகளையும் பெற்றுக்கொண்டு சந்தோஷமாயிருப்பதும், சில பெண்கள் சீமை முதலிய

வெளி நாடுகளுக்கும் போய்வந்திருப்பதும் அறிந்ததும் கூறத்திறமற்ற வியப்படைந்து அத்தகையவர்களை இமை இசைக்காமல் பார்த்துத் தனக்குள் பூரிப்பாள்.

அவர்களை சமூகத்தில் சேர்த்துக்கொண்டு நல்ல மரியாதைமட்டுடன் உன்னத ஸ்திதியில் தான் நடத்துகிறார்கள். முற்றிலும் கர்னாடகமாய் ஆசாரப் பிச்சுவாயிருப்பவர்களையும் உலகம் ஒன்றும் தனிப் பதவியில் வைத்துத் தனி கவுரவத்தைச் செலுத்தக் காணவில்லை. கால் வயிறு கஞ்சிக்காக தினம் பத்து மைல் நடக்கும் தன் அண்ணனின் வைதீகத்தினால் அவனுக்குப் புதிய பதவியொன்றும் வந்து முளைத்துவிடவில்லை. எதற்காகத் தன் தகப்பனார் அவ்வாறு செய்யவேண்டுமென்று சதா மனது குழம்பித்தவிப்பாள்.

திரிந்துபோன பாலை இனி நல்ல பாலாக்க எண்ணி முயற்சித்தால் அது ஆகுமா! அந்த திரிந்த பாலையும் மூடத்தனமாகக் குப்பையில் கொட்டாமல் நல்ல நவநாகரீகப் பெயரை வைத்து ஒரு பக்ஷணமாகச் செய்து பந்தியில் பரிமாறும்படிச் செய்ய யுக்தி தேடுவது தானே முக்கியம். அதுபோல் இனி என்பழங்கதையை எண்ணி எண்ணி எதற்காகச் சாக வேண்டும்'' என்ற யோசனையும் அகிலாவுக்கு உண்டாகும்.

அறிவு வளர்ச்சிக்கும் உலக ஞானம் விருத்தியாவதற்கும் மன உத்ஸாகத்துடன் பொழுது கழிவதற்கும் உயர்ந்த நவீனங்கள் இருக்கின்றனவென்றுகூட அகிலாவுக்குத்தெரியாது. அமராபாய் தானகக் கொண்டு கொடுக்கும் சில அற்புதமான புத்தகங்களைப் படித்த பிறகு அவளது கொந்தளிக்கும் உள்ளக் கிளர்ச்சியும் போராட்டங்களும் பின்னும் அதிகரித்தன. இந்த பாழும் ஜென்மமெடுத்ததற்குப் பலன் பரோபகாரம் செய்து இன்பமாகக் காலத்தைக்கடத்தும் உயரிய மார்க்கங்களாகிய டாக்டர், நர்ஸ், உபாத்தியாயினி முதலிய தொழில்கள் எதையாவது கற்று ஏன் தொண்டாற்றி இஜ்ஜன்மத்தைக் கரை சேரும்படிச் செய்யக்கூடாது? கதைகளில் எத்தனை பெண்மணிகள் எத்தனை உயர்ந்த ஸேவைகளைச் செய்து பயனடைந்திருக்கிறார்கள்! அம்மாதிரி நாமும் ஏன் செய்யக் கூடாது?

மேற்படியான தீவிர எண்ணங்கள் அதிமும்முரமாக அவள் இதய வானத்தில் சூரியனைப்போல் உதயமாயின. அந்த உதய சூரியனைக் கண்டதும் மனத்தாமரை கம்பீரமாகமலர்ந்துஅந்த சோபையின்ஒளி மலர்ந்த இதழ்போல் அவள் முகத்தில் விகசிதமுற்று ஒரு தனி அத்புத ஜோதியை உண்டாக்கியது.

அப்போதுதான் அங்குவந்த அமராபாய் அகிலாவின் கற்பனையுலக சஞ்சாரத்தைக் கலைக்காமல் சில வினாடிகள் பார்த்துக்கொண்டிருந்தபின் "என்ன அகிலா! பலமான யோசனை போலிருக்கிறதே! எதைப்பற்றிய யோசனையோ! ஏதாவது நாவல் நீவல்... சிறுகதை... கட்டுரை.... காவியம்.... முதலியவைகளைப் புனைக்க யோசனையா! அன்றி அண்ணனுக்குக் குழந்தை பிறந்தால் எப்படிச் சீராட்டுவது? என்ன பெயரிடுவது? என்ன விதமாக வளர்ப்பது? கர்நாடகமான வழியா! புது நாடகமான முறையா! என்பது பற்றிய யோசனையா?'' என்று சிரித்தவாறு கேட்டாள்.

இதைக்கேட்ட அகிலா, கனவு உலகத்திலிருந்து கலைந்து மீண்டும் கவலையுலகில் தடாரென்று தள்ளப் பட்டவளாய் விழித்துக்கொண்டு,

'ஓ! அமரா!...வாம்மா! உட்காரு... உம்...ஏதோ பயித்தியக்காரி என்று என்னைப் பரிகஸிக்கிறாய் போலும், நீ சொல்லிய எந்த விஷயத்தைக் குறித்து யோசனை செய்வதற்கும் நான் யோக்யதையற்றவள் என்பதை மறந்து பேசுகிறாயா?

அமரா இடைமறுத்து "கோபிக்காதே அகிலா! நீ சொல்லும் விஷயத்தை நான் நம்பவேமாட்டேன். யோக்யதையாவது அயோக்யதையாவது. அபூர்வமான ஒரு நூதன சக்தி மனிதர்கள் தம்முள் அடங்கிக் கிடப்பதை சற்றும் அறிவதே இல்லை. அதோடு விளக்கிற்கு தூண்டுகோல் எத்தனை அவசியமோ, அத்தனை அக்கரையுடன் உள்ளமூழ்ந்திக் கிடக்கும் பலவிதமான சக்திகளையும் நல்ல மார்க்கத்தில் மக்களுக்கு உபயோகமாகும் வகையில் பயன்படுத்த ஊக்கமளித்து உத்ஸாகமூட்டித் தட்டிக் கொடுப்பதற்குச் சரியான ஆட்களுமில்லை. யாராவது அம்மாதிரி செய்பவர்கள் இருந்தால் இடையில் உண்டாகும் விக்கினத்தைக் கூறமுடியாது. அவைகளையும் ஜெயித்து மேலோங்க வந்தால் அத்துறையில் போட்டியும் அவதூறுகளும் பொறாமைப் பேய்களின் நிர்த்தூளித் தாண்டவத்தின் பயங்கரமும் ஒன்றுகூடி முன்னுக்கு வரக் கிளம்பும்சக்தியும் பின்னுக்கு இழுத்தடித்துக் குன்றிவிடுகிறது.

அந்த பயங்கரங்களையெல்லாம் அலக்ஷியம் செய்யாமல் வெகு தைரியத்துடன் தைரியலக்ஷ்மியின் துணைகொண்டு முன்னால் வைத்த காலைப் பின்னால் வாங்காமல் சகல இடுக்கண்களையும் ஜெயித்துக் கொண்டு இதய சுத்தமான அன்புடனும் சத்மார்க்க நெறியுடனும் நமது பணியைச்செய்து பகவானுக்குப் பொதுவாக் அர்ப்பணம் செய்தால் அதன் பலாபலனை அவன் அறிந்து நடத்துகிறான்.

உலகத்தில் எந்தத் துறையிலும் விருத்திக்கு வந்திருக்கும் ப்ரபலஸ்தர்களை 'வாய்-இலேசில்' முன்னணிக்கு வந்துவிட்டதாக நினைக்கிறாயா! ஊஹூம்... அதுதான் இல்லை. எத்தனையோ கஷ்டங்களையும் ஆபத்துக்களையும் ஜெயித்துக் கொண்டுதான் முன்னுக்கு வந்து ப்ரகாசிக்கிறார்கள்.

ஏன்! கண் முன்னால் பார்க்கிறோமே! ஒரு மகாத்மாவின் சரிதம் ஒன்று போதாதா! உலகம் போற்றும் உத்தமராகக் கொண்டாடும் அவர் அனுபவித்த கஷ்டங்கள் கூற முடியுமா! நீயும் எந்த துறையிலாவது மகத்தான வெற்றியுடன் முன்னேற முடியாது என்று நினைக்கிறாயா? சேச்சே!...அப்படி நான் நினைக்கவே இல்லை. நமக்குள் அடங்கியுள்ள சக்தியை நாமே நமது முயற்சியால் தூண்டிவிட்டுக் கொள்ளத்தான் வேண்டும்.

உதாரணமாகப் பாரு. என் மூத்த சகோதரி இந்திராவுக்குச் சித்திரக்கலை என்றால் அபாரமான ஆசை. அதன் எல்லையை அளவிட்டே கூற முடியாது. அந்த ஆசையை விருத்திசெய்யாது அவளையும் எங்களைப்போலவே படிக்கத்தான் வேண்டும் என்று முதலில் என் தகப்பனார் அவளை இதே 'லயனில்' போட்டார். அவள் மனது இதில் சற்றும் நாடாததால் படிப்புக்குப் படிப்பும் இல்லை; சித்திரக்கலையும் இல்லாது மோசமாகிவிட்டதைப் பிறகறிந்து அவளை அவள் விருப்பப்படியேசித்திரக்கலை போதிக்கும் பள்ளிக்கூடத்தில் படிக்கவைத்தார். இப்போது அவள் ஒரு பத்திரிகை ஆபீஸில் சித்திரம் எழுதும் வேலையில் மாதம் 150-ரூபாய் சம்பளத்திலிருக்

கிறாள். அவள் ஆசையை விருத்தி செய்யாதிருந்தால் இந்த நிலைமைக்கு வரமுடியுமா?

இந்த அபூர்வமான விஷயங்களைக் கேட்டு அகிலாவின் உள்ளம் மின் னும் ஆச்சரியத்தால் நிரம்பியது. "பத்திரிகை ஆபீஸில் பெண்மணி சித்திரம் எழுதுவதா! ஆகா! கேட்க எவ்வளவு இனிமையாயிருக் கிறது. நாமும் ஒரு ஜன்மம் எடுத் தோமே எதற்கு எடுத்தோம்?" என்ற எண்ணம் பளிச்சென்று தோன்றியதும் மலர்ந்திருந்த முகம் குவிந்தது. மெல்ல சமாளித்துக் கொண்டு, ஆச்சரியத்துடன் "அந்த புண்யவதிக்கு விவாகமாகியிருக் கிறதா?" என்று கேட்டாள்.

அமரா:—ஓ! இரண்டு குழந்தை கள் கூடப் பிறந்திருக்கின்றன. அவள் புருஷரும் மகாரஸிகர். குண சாலி. அதே பத்திரிகை ஆபீஸில் அவர் மானேஜராயிருக்கிறார், அவ ருக்கு 250-ரூபாய் சம்பளம். அவ ரும் என் அக்காவும் மிகவும் மன மொத்த தம்பதிகளாய் பூவும் மண மும்போல் வாழ்க்கை நடத்து கிறார்கள். ஏன்? ஏதோ மகத்தான வியப்புடன் விழிக்கிறாயே! இருவரும் ஆபீஸுக்குப் போய்விட்டால் குழந் தைகளின் கதி...என்றுதானே நினைக்கிறாய்...ஆம்! சகஜமான நினைப்புதானே! என் அக்காவின் மாமியார் மிகவும் நல்லவள். மகா மேதாவி. அவள் வீட்டிலிருந்தபடியே பலவிதமான கட்டுரைகள், கதை கள், நாவல்கள், நாடகங்கள், ஹாஸ்ய வினோதங்கள், முதலிய பற் பல விஷயங்களை எழுதி அனேக பத்திரிகைகளுக்கு அனுப்பி புகழ் பெற்று வருகிறார்கள். மாமியார் கதைகளுக்கு மருமகளே படம் எழுதுவது எத்தனை பொருத்தமா யிருக்கிறது பாரு. அந்தம்மாளே தம் பேரன் பேத்திகளை கவனித்துக் கொள்கிறார்கள். அந்தம்மாளின் கணவர் உத்யோகத்திலிருக்கிறார். குடும்பமே கல்விக்களஞ்சியமானது என்றால் மிகையாகாது. நேற்று உன்னிடம் ஒரு கதைப்புத்தகம் கொடுத்தேனே அதைப் படித்தா யா! அதை அந்தம்மாள் எழுதி னார்கள்...

அகி:—என்ன! அந்தம்மாளா எழுதினார்கள்! அடாடா! வெகு வெகு ஸ்வாரஸ்யமாயிருக்கிறதே.

அமரா: — ஆம். அதனால்தான் உனக்குக் கொடுத்தேன். பணத் திமிரும் அதிகார சட்டமும் தன் கையிலிருக்கிறது என்கிற கர்வத் தால் புருஷர்கள் மனைவியை என்ன வேண்டுமானாலும் கொடுமையாக நடத்தலாம். மனைவி ஒரு அடிமையி லும் அடிமையாகக் கிடக்கவேண்டி யதுதானா கதி... அவளுக்கும் ஆத்ம சுதந்திரமும் சுகமும் சந்தோஷமும் வேண்டாமா? இதைத்தான் அக் கதை நன்றாகக் காட்டுகிறது. கதை மிகவும் ரஸமாயும் அம்மாதிரி இருக் கும் மூடர்களுக்கோர் சவுக்கடியாயு மிருப்பதால்தான் அக்கதையை எங்கள் கலாசாலையின் தலைவி பொறுக்கி எடுத்திருக்கிறார்கள். அதை நாங்கள் எங்கள் கலாசாலை யின் வருஷாந்திரக் கொண்டாட்டத் தன்று நாடகமாக நடிக்கப் போகி றோம். அன்று கட்டாயம் உன்னையும் ஸரஸாவையும் அழைத்துக்கொண்டு போகிறேன். வருகிறீர்களா?

உலகமே அறியாது பல வருடங்க ளாகக் கூண்டுக்குள் அடைபட்டுக் கிடக்கும் கைதியைப்போல் இதுபரி யந்தம் காலந்தள்ளிய அகிலாவுக்கு இந்த விசித்திர விஷயங்களைக் கேட் கக் கேட்க இன்னதென்று விவரிக்க வியலாத உவகை உண்டாகியது. "என்ன அதிசயம்! நாடகமா?

நீங்கள் நடிப்பதா?... என்னை அசடு என்று ஏமாற்றுகிருயா!'' என்ருள்.

அமரா:—என்ன அகிலா குழந்தையைப்போல் பேசுகிருயே! நீ இந்த உலகத்தில் பிறந்தும் உலக விவகாரமே தெரியாதிருக்கிருயே! பள்ளிக்கூடமோ, சபாவோ எதையுமே நீ பார்த்ததில்லை பாவம்! அதனுல்தான் உன்னைக் கூப்பிடுகிறேன். அந்தக் கதையில் வரும் கதாநாயகி 'பார்ட்டு' நான் போடப்போகிறேன். உன் அண்ணன் ஆனுலும் கட்டுப்பெட்டி என்பதும் எனக்குத் தெரியும். ஸாரஸாவிடமும் சொல்லியிருக்கிறேன். எப்படியாவது உத்திரவு கேட்டுக்கொண்டு வாருங்கள். நாடகம் தவிர நல்ல முதல்தரமான சங்கீதக் கச்சேரி, கும்மி, கோலாட்டம், தமாஷ் முதலிய ஏதேதோ நடக்கப் போகின்றன. அதற்கு ஆனந்தபுரி ராணிதான் தலைமை வகிக்கப்போகிருர்கள்.

அகிலா! உன் தலையெழுத்துதான் விபரீதத்திலும் விபரீதமாக அமைந்துவிட்டது. எனினும் கண்ணுக்குக் கூடவா கரிப்பு. அதற்குமா பஞ்சம்! ஏதோ நல்லவிஷயங்களைப்படித்தும், பார்த்தும், கேட்டும் ஏன் அனுபவிக்கக் கூடாது? அதற்குமா தண்டனை? அதைக் கூடவா ஆசாரம் அடித்து விரட்டும். அகிலா! நான் அவசரமாக ஒத்திகைக்குப் போகிறேன். அன்று நீங்கள் எப்படியும் கட்டாயம் வரவேண்டுமென்று உன்னிடம் சொல்வதற்காகவே வந்தேன். நான் போய்வருகிறேன். மன்னி வந்தால் சொல்லு'' என்று கூறிவிட்டுச் சென்ருள்.

அசைக்கமுடியாத கல்லைக்கூட அசைத்துவிட்டால் ஆட்டம் கொடுத்துவிடுவது இயல்பு. ஏற்கெனவே கொந்தளித்துக் கொண்டிருக்கும் மனத்தில் இந்த ஆசை வார்த்தைகளின் காற்று வேகமாக வீசத்தொடங்கி அலைபாய வாரம்பித்தது. "நாடகம், கும்மி!... கோலாட்டம், நவநவமான கேளிக்கைகள்... ராணியின் தரிசனம், அபூர்வ சங்கீதம், அடாடா! எத்தனை ஆனந்த விருந்தின் அத்புத மணங்கள். என் சொந்த அனுபவத்தில் நான் மகத்தான பாபத்தைச் செய்துவிட்டேன். எனினும் கண்ணுல் பார்ப்பதற்குக் கூடவா பஞ்சம்? அந்த இன்பக் கேளிக்கைகளை எப்படியாவது பார்த்துத்தான் தீரவேண்டும். மன்னி வந்ததும் அவளிடம் தெரிவித்து இதற்கோர் வழி செய்யவேண்டும்'' என்று உறுதி செய்துகொண்டாள்.

மகா முறட்டு குணமுடைய தன் அண்ணன் இதற்கு ஒரு போதும் இடந்தரவே மாட்டானே! என்று நினைக்கும்போது அவளது மனத்தில் கட்டியுள்ள ஆசைக் கோட்டைகள் அப்படியே இடிந்துவிட்டன போன்ற வேதனை உண்டாகியது.

## 9

"அக்கா! நான் சொல்வதைக் கேளுங்கள். நான் வீட்டிலிருந்து பார்த்துக் கொள்கிறேன். உங்கள் தமயனுக்கு ஏதாவதொரு சாக்கு போக்குகள் சொல்லி சமாதானம் செய்கிறேன். நீங்கள் போனது வந்ததே தெரியாமல் அமராபாயுடன் போய் அந்த ஆனந்தக் காட்சியை கண்ணாரக் கண்டு களித்துவிட்டு வாருங்கள். இருவரும் போவதென்ருல் அது இந்த ஜென்மத்தில் நடக்கும் காரியமில்லை. நான் ஊருக்குப் போய்விட்டால் பிறகு உங்களுக்கு எதுவுமே முடியாது. வீண் பிடிவாதம் செய்யவேண்டாம். நீங்கள் போய்வாருங்கள்'' என்று ஸாரஸா அகிலாவைத் தேற்றிக் கிளப்ப முயன்ருள்.

அகிலாவுக்கு அது சற்றும் மனச் சமாதானமாகத் தோன்றவில்லை. தன்னைவிடச் சிறுமியும் கர்ப்பவதியாயும் உள்ள ஸரஸாவை விட்டுத்தான் போவது என்றால் அது எப்படி முடியும்!... "மன்னி! வீணாக ஏன் நீ ச்ரமப் படவேண்டும். அண்ணாவுக்குக் கோபம் வந்தால் தலைகால் தெரியாமல் போய் விடும். யோக்யதையற்ற கட்டைக்கு ஆசைப்படுவதற்கு இடம் ஏது? இந்த விஷயத்திலேயே நாம் ப்ரவேசிக்கவேண்டாம். விட்டுவிடு" என்று தீர்மானமாகக் கூறிவிட்டாள்.

ஆனால் மனம் மட்டும் அவளையறியாது அலைமோதிக்கொண்டிருந்தது. எந்த விஷயத்திலும் எந்தப் பொருள்மீதும் ஆசைக்கு இடங்கொடுக்காதிருந்துவிட்டால்கூட சில சமயம் எப்படியோ அந்த ஆசையின் சபலம் இலேசாக மனத்துள் புகுந்து சிறுகச் சிறுக அதன் வழியே இழுத்துவிடுவதுதான் உலகத்தில் அதிகமாகக் காண்கிறோம். வைராக்யம் அபாரமாகப் பொங்குகிறவர்களைக்கூட சிலசமயம் இந்த பிசாசு கட்டிப் பிடித்து ஆட்டும்போது, உலகம் இன்னதென்றே அறியாது பிறவிக்குருடுபோல் வாழ்க்கைக் குருடாக இருக்கும் அகிலாவின் மனது குழம்பித் தவிப்பது வியப்பா?

விழா நடக்கும் நாளும் நெருங்கிவிட்டது; உண்மையில் தன்னை சிறையில் வைத்திருப்பதாகவே அகிலா எண்ணி மனம் புழுங்கினாளேயன்றி வீட்டிலிருப்பதாகத் தோன்றவில்லை. ஸரஸாவின் ஆசையும் கரை கடந்தது. அவளும் இம்மாதிரியான கேளிக்கைகளைக் கண்டதே இல்லையாதலால் இதற்கு என்னவிதமான உபாயத்தைச் செய்யலாம் என்கிற யோசனையே வலுத்தது.

இவர்களின் எண்ணத்திற்கு ஈசன் உதவி புரிவதுபோல் திடீரென்று ஒரு செய்தி இவர்களுக்கு எட்டியது. அதாவது லக்ஷ்மீ நகரத்தில் ஒரு சம்ஸ்கிருத சபாவில் ஆண்டுவிழா நடக்கப்போவதாயும் அதில் சம்ஸ்கிருதத்திலேயே பேசுவதற்காக தன்னைப் பொருக்கி எடுத்திருப்பதாயும் அவன் உடனே ஊருக்குப் போகும்படி அவனது பாடசாலையில் உத்திரவு பிறந்திருப்பதாயும் மாலை வண்டிக்குப் புறப்படுவதற்குள் சமயல் தயாராக்கவும் ப்ரயாணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்துவைக்கும்படியும் ஒரு ஆள் வசம் சாமிநாதன் சொல்லியனுப்பினான்.

இதைக் கேட்டதும் ஸரஸா தான் முதலில் குதித்தவாறு அகிலாவிடம் ஓடிவந்து "அக்கா! அக்கா! நம் மீது பகவானுக்குக் கருணை பிறந்துவிட்டது. உங்கண்ணா இன்று மாலை எங்கேயோ வெளியூருக்குப் போகிறாராம். நாளை மாலைதான் அங்கும் அவருடைய உபன்யாஸமாம். நாளைதான் இங்கும் வருஷக் கொண்டாட்டம். அவருக்குத் தெரியாமல் நாம் போய் பார்த்துவிட்டுவரலாம்" என்று சிறு குழந்தையைப்போல் பறக்கப் பறக்கக் கூறினாள்.

அகிலாவுக்கும் முதலில் ப்ரமாதமான சந்தோஷமே உண்டாகியதெனினும் தெரியாமல் செய்யும் இந்த ரகஸியம் வெளியாகிவிட்டால் என்ன செய்வது? அது பெருங்குற்றமாகவன்றோ முடியும்! "மன்னி! ஏன், அவனை நேராகவே ஒரு பேச்சு கேட்டுவிட்டால் என்ன!" என்றாள்.

ஸரஸா:—ஐயையோ! வேண்டவே வேண்டாம்! அக்கா! அவருக்குத் தெரியாமல் நாம் சற்று நேரமாவது பார்த்துவிட்டு வருவதில் ஒன்

றும் முழுகிப்போய்விடாது. அமரா பாய் காரிலேயே நம்மை அழைத்துப் போவதாகச் சொல்லியிருக்கிருள். நீங்கள் அவரை எதுவும் கேட்காமல் பேசாமலிருங்கள். அவர் வந்து ஊருக்குப் போகட்டும். பிறகு பேசலாம் — என்று கூறிவிட்டு துணி மணிகளை எடுத்துவைக்கச் சென்ருள்.

ஒருபுறம் கலக்கம்; ஒருபுறம் சந்தோஷம் இரண்டும் பாதிக்க அகிலா மற்ற காரியங்களைச் செய்தாள். ஸாமிநாதனும் வந்தான். அவனுக்கான சகல காரியங்களையும் இரு பெண்மணிகளும் மௌனமாகவே செய்து முடித்தார்கள். ஸாமிநாதன் தற்கால நாகரீகத்தின்படி மனைவியை பெயரிட்டோ! அல்லது காதல் மொழிகளாலோ அழைப்பது வழக்கமில்லை. "ஏய்!...தே—காதுகேக்கலே... இங்குவா..." என்கிற பழய சம்பிரதாயப் பரிபாஷையில் தான் அழைப்பது வழக்கம்.

ஸரஸாவும் பிறர் எதிரில் தடபுடலாக நின்று பேசுவது வழக்கம் கிடையாது. ஏய்! இங்குவா! என்று அருமையாக அழைத்து "நான் இன்று போய் அனேகமாக நாளை மறுநாள் காலையில் வந்துவிடுவேன். இந்த இரண்டு நாட்களுக்கு உங்களுக்குத் துணைக்காக எங்க அத்தைப் பாட்டியை கையோடு அழைத்துவர ஆளனுப்பியிருக்கிறேன். அவள் இப்போதே வந்துவிடுவாள். அவளிடம் மரியாதையாகவும் அன்பாகவும் நடந்துகொள்ளுங்கள். அவள் அசாத்யமான ஆசாரக்காரியாதலால் ஏதாவது அசட்டுப் பிசட்டுத்தனம் செய்துவிடப் போகிறீர்கள். பிறகு கிழவி தலை முறைக்கும் ஏச்சுக்காட்டித் தூற்றுவதை விடவேமாட்டாள். ஜாக்ரதை! என்று இவன் சொல்லிக்கொண்டிருக்கும்போதே சுமார் அரை டஜன் பசங்கள் இரண்டு பெரிய பெண்கள் சகிதம் பர்வதாகாரமான ஒரு கிழப்ரக்ருதி வெகு அட்டகாஸத்துடன் "டேய்! ஸாமிநாதா! அந்த வண்டிக்காரனுக்கு 14 அண காசைக் கொடுத்தனுப்புடாப்பா! என்று கூறிக்கொண்டே வந்தாள்.

இந்த பரிவாரத்தைக் கண்ட ஸாமிநாதனையே தூக்கிப்போட்டது என்ருல் அந்த அபலைகளின் கதியைக்கூறவேண்டுமா? ப்ரம்மாண்டமான மனக்கோட்டை கட்டியிருந்ததெல்லாம் ஒரு நொடியில் இடிந்து பொடி சாம்பலாகிவிட்டது. துரதிருஷ்ட தேவதை தன்னைவிடாது தொடர்ந்து எமலோகத்திற்குக் கூட வந்து ஆட்சிபுரியும் என்று தான் அகிலா திட்டமாக எண்ணிஞள்.

ஸாமிநாதன் முகத்தைச் சுளித்தவாறே 14 அணுவைத் தலைவிதியே என்று கொடுத்துவிட்டு. "அத்தை பாட்டீ! எனக்கு வண்டிக்கு நேரமாகிவிட்டது. நான் போய் வருகிறேன்" என்று கூறியவாறு கிளம்பினன்.

கிழவி:—ஏண்டாப்பா! உனக்கு வேலைகள் இருந்தால் அவைகளை முற்றிலும் முடித்துக்கொண்டு வா அவசரப்படாமல் வா! ஏண்டாப்பா! கைச்செலவுக்கு ஏதாவது கொடுத்துவிட்டுப்போயேன். பசங்கள் என்னைவிட்டு அரை நாழிகைக்கூட தனியாக இருக்கமாட்டார்கள். அவர்களும் கூட வரவேண்டுமென்று அழுததால் அழைத்துக்கொண்டு வந்தேன்...என்று தானே பாடத்தை ஒப்பித்தாள்.

ஸாமிநாதனுக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வருகிறது. கையிலோ கால்காசு கிடையாது. வீட்டிலுள்ள சாமான்களோ மிகக் குறைவு என்பது அவனுக்குத்தெரியும். வந்துள்ள

ஆத்மாக்களோ முக்கால் டஜன். என்ன செய்வான் பாவம்! வந்துள்ள பசங்களோ வீட்டுப்படி ஏறியது தான் தாமதம். சமையல் அறை முதல் சாக்கடை வரையில் ஒரு விநாடிக்குள் சுற்றிப் பார்த்துக் குடைந்தாகிவிட்டது.

"மாமி! பசிக்கிறதே. திங்கரத்துக்கு ஒன்றுமில்லையா! பக்ஷணம் ஏதாவது கொடேன்...பாட்டீ! பசி...பசி...பசிக்கிறது பாட்டீ!...ஏதாவது கொடுக்கச் சொல்லு பாட்டீ!" என்று சில பசங்கள் ராகமாலிகை பல்லவி பாடவாரம்பித்தன. இந்த அபூர்வ ப்ரக்ருதிகளை வைத்துக்கொண்டு இரண்டு நாளைக்கு... ஏன்...எத்தனை நாளைக்கு 'கேம்பு' போடுவார்களோ!...அது வரையில் எப்படி சமாளிப்பது? என்கிற பயம் எடுத்துக்கொண்டது. பெரிய தவலை உலை வைத்துச் சமைக்கவாரம்பித்தாள். அரிசியைப் பார்த்தால் ஒரு வேளைக்குத்தான் காணும் என்பதையறிந்ததும் திக்கென்று தூக்கிவாரிப் போட்டது.

அகிலாவின் முகத்தை ஸரஸா பார்க்கிறாள். அவள் முகத்தை அகிலா பார்க்கிறாள். இதற்குள் கிழவி உள்ளே வந்து "ஏண்டி பசங்களா! வெத்தல் வடாம் முதலியவைகள் இருக்கிறதா! உம்... வேதம் இருந்தபோது அவைகள் தவலை தவலையாய் வத்தாத ஸமுத்திரம்போலிருக்கும். சிறுசுகள். நீங்கள் எப்படி குடித்தனம் பண்ணுகிறீர்களோ! என்று கூறியவாறு தானே வெத்தல் வடாம் உள்ள பாத்திரங்களைத் திறந்து பார்த்தாள்.

உடனே எண்ணெய் ஜாடியைத் திறந்து இருந்த எண்ணெயைக் கொட்டி வெத்தல்கள் வடாம் முதலியவைகளை தாராளமாக வறுத்து ஒரு கூடை நிறைய எடுத்து பசி பசி என்று பறக்கும் ஆத்மாக்களின் வயிற்றை நிரப்பி வாய் ஊறலை அடக்கினாள்.

ஏழை குடும்பத்தில் இந்த வெத்தல்கள் குறைந்தது ஒரு மாதத்திற்காவது வரும். அவைகளை ஒரே நிமிஷத்தில் தீர்த்துவிட்டதோடு நிற்காமல் நாலு படி அரிசியை ஊரப் போடுடியம்மா! நிமிஷம் வெத்தல் செய்துவிடலாம் என்று ஒரு கட்டளையும் பிறப்பித்தபோதுதான், ஸரஸாவைவிட அகிலாவுக்குத்தான் அதிர்ச்சி அதிகமாயிற்று. இவைகள் பசங்களா பூதங்களா? என்று கூட நினைத்தாள்.

கிழவி அள்ளி அள்ளிக் கொடுத்து விட்டு "ஐயோ! பாவம்! குழந்தைகளுக்கு அகோரமான பசியானதால் இந்த வெத்தலையும் வடாத்தையும் தின்கிறார்கள். வீட்டில் நெய்யைவைத்துப் பொரித்து வேண்டி வேண்டிக் கொடுத்தாலும் ஒன்றுவது சாப்பிடாது" என்று பீத்தல் பெருமை யடித்துக்கொண்ட வண்டவாளத்தை வெட்ட வெளியாக்கி விடுவதுபோல் "ஊம்...வீட்டில் நீ வெத்தல் ஒரு நாள்கூட கொடுத்ததே இல்லையே...கொடுத்தால் சாப்பிடமாட்டோமோ...வெத்தலே தான் வீட்டில் இல்லையே?...என்று ஒரே முகமாய் பசங்கள் கூறியதைக் கேட்டு அகிலாவும் ஸரஸாவும் களுக்கென்று சிரித்துவிட்டார்கள். இதைக் கண்டு கிழவியின் முகத்தில் அசடு தட்டியது.

## 10

நாளை எப்படி இத்தனைபேர்களுக்கும்பதில் சொல்வது? என்றுமிகவும் விசாரப்பட்டுக் கொண்டிருக்கையில் அமராபாய் வந்தாள். கிழவியைக் கிளப்புவதற்கு என்ன உபாயம் செய்யலாம் என்று ஸரஸாவும் அமராவும் யோசித்தார்கள். அமராபாய்

ஒரு யுக்தியைச் செய்துகொண்டு தான் வந்தாள்.

அமராபாய் ஸரஸாவை நோக்கி "ஸரஸா! உனக்கு விஷயம் தெரியுமா! இந்தப் பேட்டையில் காலரா நிரம்பவும் அதிகமாயிருக்கிறதாம். எல்லோரும் கட்டாயமாக ஊசி குத்திகொள்ளவேண்டுமாம். ஹெல்த் தாபீஸர் எங்க மாமாதான். ஆகையால் அவர் சொன்னார். பக்கத்துத் தெருவில் இன்று பத்துபேருக்கு ஒரே சமயத்தில் கண்டிருக்கிறதாம். அது மிகவும் அபாயமாயிருக்கிறதென்று மாமா சொல்லுகிறார். நீங்களெல்லாம் ஜாக்ரதையாக இருங்கள் கண்ட பண்டத்தையும் தின்னாதே. உன் வீட்டில் சற்றுமுன் எண்ணெகாயும் வாஸனை வந்ததுகண்டு என் மாமா பயந்துவிட்டார். ஒன்றுமே தின்னாமல் ஜாக்ரதையாயிருங்கள். எங்கப்பாகூட எங்களை எல்லாம் ஊருக்குப் போயிருக்கும்படி வற்புறுத்துகிறார். காலேஜ் படிக்கிறவர்களைத் தவிர மற்றவர்கள் போய் விடுவதென்று தீர்மானித்து விட்டோம். உன்னைக்கூட சீக்கிரம் வந்து அழைத்துப் போகும்படி உங்கப்பாவுக்குக் கடிதம் எழுதிவிடு என்று உன்னிடம் சொல்லிவிட்டு வரும்படி அப்பாதான் அனுப்பினார்.. நான் வருகிறேன்... என்று வெகு பக்குவமாக் கூறினாள்.

உண்மையில் அங்கு சுற்று வட்டாரங்களில் அம்மை... காலரா!... முதலியன இருப்பதும் ஊசி குத்திக் கொள்ளும்படியாக பத்திரிகையில் போட்டதும் கிழவிக்கு காதில் பட்டிருப்பதால் கிழவியின் வயிற்றைக் கலக்கிவிட்டது. கூடவிருந்த குழந்தைகள் நடுங்கிவிட்டார்கள். பாட்டீ! இப்போதே நம்ம ஊருக்குப் போய் விடலாம் வா! எனக்கு பயமாயிருக்கிறது என்று பெரிய பெண்கள் ஆரம்பித்தார்கள். காலமோ அகாலம். தனியாக அத்தனை தூரம் செல்வதற்கு மிகவும் பயந்துவிட்டார்கள். கிழவியின் திண்டாட்டத்தைக்கண்டு அகிலாவுக்கும் ஸரஸாவுக்கும் சிரிப்பு சிரிப்பாய் வருகிறது.

ஸரஸா பெரிய தவலையாக உலை வைத்ததைப் பார்த்த கிழவி. அடயம்மா! இத்தனை பெரிய தவலை வேண்டாம். இதை எடுத்துவிட்டு கொஞ்சமாக வடித்து வெறும் மோர் சா; ம் போடும்மா! போரும். உலகம் படுகிறபாட்டில். காலம் கெட்டுக் கிடக்கிற கடையில் அவாவா பசங்களை அவாவா பெத்தவர்களிடம் விட்டுவிட்டால் போதும். என்னமோ! ரெண்டுநாளைக்கு லீவாயிற்றே! தமாஷாக இருக்கட்டுமே என்று அழைத்து வந்துவிட்டேன். நல்லபடி கொண்டு சேர்த்துவிட்டால் போதும்! என்று திகிலுடன் கூறினாள்.

கிலியைவிட எமன் வேறு என்ன வேண்டும்? கொஞ்சமாக வடித்த சாதங்கூட செலவாகவில்லை. இரவு முற்றும் கிழவி கண்ணை மூடவே இல்லை. குழந்தைகளும் சிலது தூங்காது தவித்தன. இரவு கண்விழித்த அஜீர்ணமும் பயமும் சேர்ந்து கிழவியை ஒரு கலக்கே கலக்கிவிடும்படி ஒருதரம் வயிற்றுப்போக்கு உண்டாகிவிட்டது.

பொழுது விடியப்போகிறதா என்று காத்திருந்து "இன்னிக்கு சற்றுபக்கத்தாத்து அம்மாவை துணை வரச்சொல்லு. நான் போகிறேன்." என்று பெரிய தர்மசங்கடசல் போட்டுக் கொண்டே கிழவி தனது பரிவாரங்களுடன் கிளம்பி போயே போய் விட்டாள்!

அமராபாய் சிரித்த சிரிப்பின் பேரொலி கிழவியின் கிலியைப் பிளந்துகொண்டு எப்படி காது



கேட்கும். மூவரும் கடகடவென்று சிரித்தார்கள். அடாடா! ஒரு தொல்லை ஒழிந்தது. நீங்களிருவரும் என்னுடன் கூடவே வந்துவிடுங்கள். எங்கள் காலேஜ் உபாத்தியாயினிகளையும், மாணவிகளில் சிலரையும் காட்டுகிறேன். வெளி நாட்டமே அறியாதிருக்கும் நீங்கள் ஒரு நாளைக்காவது பாருங்கள் என்று கூறிச் சென்றாள்.

சிறுமிகளிருவருக்கும் ஒருபுரம் சந்தோஷம் அலைமோதிய போதிலும் திரும்பவும் கிழவிவந்துவிடுவாளோ! ஸாமிநாதனே வந்துவிடுவானோ! என்கிற பயமும் கூடவே தோன்றி வதைக்கிறது. எது எப்படியாயினும் போய்வருவதே சரி என்று முடிவு கட்டிக்கொண்டார்கள். பொழுதும் ஏறிக்கொண்டே இருக்கிறது.

அடாடா! ப்ரம்மாண்டமான அந்தக் கலாசாலையின் கட்டிடத்தைப் பார்க்கும் போதே சிறுமிகளையறியாது ப்ரமிப்பும் பூரிப்பும் உண்டாகியது. அமராபாய் கட்டடம்பூராவும்தானே அழைத்துச்சென்று காட்டினாள். வானையளாவும் கட்டிடம் என்பதை புத்தகத்தில் படித்திருக்கிறாளேயன்றி உள்புகுந்து பார்த்ததில்லை.

கலாசாலையிலேயே ஒரு பக்கம் சாப்பாட்டு விடுதியும் மாணவிகள் தங்கும் இடமும் அமைந்திருந்த அதிசயத்தைக் கண்டதும் அகிலா ஆச்சரியக் கடலில் மூழ்கிவிட்டாள். விசாரம் வேதனையற்று ஒவ்வொரு மாணவியும் வெகு உத்ஸாகத்துடன் கும்மாளமடித்துக்கொண்டிருப்பதையும் பார்த்து பட்டிக்காட்டான் பட்டணம் பார்ப்பதுபோல் பார்த்தவாறு நின்றாள்.

ஒவ்வொரு உபாத்தியாயினியும் அமராவைப் பார்த்து அன்புடன் விசாரித்து இவர்கள் யாரு... என்று கேட்டார்கள். அமராபாய் இவர்



களைப் பற்றிய வரலாற்றைக் கூறிப் பின், "சதா வீட்டுடன் அடைத்துக் கிடந்து பாழாகிருர்கள்பாவம். இந்த உலக ரீதியைக் கண்ணுல் முதலில் பார்க்கட்டும். பிறகு மெல்ல படிப்பில் இழுத்து விடலாம். அவள் காலால் அவள் நடக்கும்படிச் செய்துவிடலாம். என்கிற எண்ணத்துடன் அழைத்துவந்தேன்.

இவளுக்கு எந்த வகையிலும் பிழைக்கும் மார்க்கமே கிடையாது. இக்காலத்தில் அண்ணனையும் தம்பியையும் நம்பினல் சின்னஞ் சிறுமியின் வாழ்நாள் முற்றும் கழிவதெங்ஙனம். கையிலோ, வாயிலோ, வித்தை இல்லாவிட்டால் என்ன உபயோகம் என்று இவளைப் பொருத்தவரையில் யாருமே எண்ணவில்லை. [illegible]க்கூடிய மனிதர்களும் இல்லை.

இவளுக்காக ஐயோ பாவம்! என்று சொல்லுவதற்கு யாராவதொருவர் இருக்கிறீர்கள் என்றால் அது இந்தச் சின்னப் பெண்தான். அண்ணனைவிட அவன் மனைவியே தேவலை. மகா மூர்க்கம் பிடித்தவன் அவன். உலக விவகாரமே அறியாத மனிதன். இவளைப் பார்க்கும்போதெல்லாம் என் தாயாரும் தகப்பனரும் கண்ணீர் விடுகிருர்கள். எப்படியாவது இந்த விழாவுக்கு அழைத்து வருவதற்கு நானும் என் தாயாரும் பட்டபாடு கொஞ்ச நஞ்சமில்லை.

அவள் மனத்திற்கே ஒரு ஆசை உண்டானல் பிறகு எப்படியாவது கைதூக்கி விடலாம் என்கிற யோசனையினல் அழைத்துவந்தேன். ஏதாவது வார்த்தைபராக்கில் நீங்கள் சற்று புத்தி சொல்லுங்கள்" என்று ஆங்கிலத்திலேயே கடகடவென பொரிந்துக் கொட்டினள்.

அந்த உபாத்தியாயினி அகிலாவை மிகவும்பச்சாத்தாபத்துடன் பார்த்து ஒரு பெரு மூச்சுவிட்டவாறு, "உன் சரிதையைக் கேட்டு மிகவும் வருந்துகிறேன். இத்தனை சிறிய வயதில் ஏதாவதொரு வித்தையைக் கற்ருல் வருமேயன்றி கிழவியான பிறகு வித்தையும்வராது. மதிப்பும் கிடைக்காது. உன் அண்ணனிடம் நீ தைரியமாகக் கேட்டு நீயேன் வீட்டிலேயே படிக்கக் கூடாது?... இம்மாதிரி காலத்தை வீணுக்கலாமா!

அம்மணீ! உனக்குக் கோபம் வந்தாலும் வரட்டும். என் அனுபவத்தில் கண்டதை நான் சொல்லாமலிருக்க முடியவில்லை. எனக்குப் பெற்ருேர்கள் இல்லை. அண்ணனின் பாதுகாப்பே கதி என்றுதான் இருந்தேன். ஆதியில் நல்லதங்காள் சரிதையை உலகம் கூறக் கேட்டதுண்டு. என் விஷயத்தில் நேருக்கு நேராகவே அனுபவித்துவிட்டேன். நல்லத்தங்காளுக்கு அண்ணனவது சற்று அனுகூலமாயிருந்தான். எனக்கு அதுவுமில்லை.

முட்டாள் தனமாக நல்லத்தங்காளைப்போல் நான் கிணற்றில் விழுந்து சாகமனமின்றி என் குழந்தைகளுடன் பிச்சைக்காரியாய் வெளி ஏறினேன். ஊம்...வீண் கதை எதற்கு! என்கல்வியும் அனுபவமுமேஎன்னை இன்று உலகம் மதிக்கும் நிலைமையில் வைத்துப் பசிக்காமல் சாதம் போடுகிறது. நானும் எத்தனையோ கட்டு திட்டங்களுக்குத் தான் உள்பட்டேன். பெற்றவர்கள், அல்லது கணவன் இவ்விரண்டுதுணையுமற்றவர்களுக்குத் தன் கைதான் தனக்குதவி. தன் வித்தைதான் தனக்கு ரக்ஷகன் என்பதை அனுபவ பூர்வமாகவே அறிந்துகொண்டேன்" என்று கூறும்போது அவர்களை யாரோ கூப்பிட்டதால் அந்தம்மாள் போய்விட்டாள்.

* * * *

# தாஸி
# அபரஞ்சி

சென்னை
**ஸாகர், கிரௌன்**
இரு தியேட்டர்களிலும்..
மற்றும்
மதுரை......... நியூஸினிமா
பெங்களூர்........... ஸுப்பர்
திருச்சி........... வெலிங்டன்
சேலம்.......... நியூ ஸினிமா
திருநெல்வேலி.......... பாலஸ்
தஞ்சாவூர்................ டவர்
புதுச்சேரி..... .....கமர்ஷியல்

ஆகிய இடங்களில்
வெற்றியுடன் நடைபெறுகிறது.

# ஜெமினி
...தயாரிப்பு.......



டைரக்ஷன்
பி.என்.ராவ்



PRINTED & PUBLISHED BY V. M. PARTHASARATHY
AT "JAGANMOHINI" PRESS, STATION ROAD, SINGAPERUMALKOIL.

ஜகன்மோகினி

Jagan Mohini — Regd. No. M 2210

## உண்மையான யுத்த முயற்சி தான் அது !...



"நர்ஸிங்" ஒவ்வொரு பெண்மணியும் பெருமை கொள்ளக்கூடிய தொழில்; அதுவும் யுத்தகாலத்தில் அது மிகவும் உன்னதமான தொண்டு என்றே கூறலாம். நமது வீரர்களில் நோய் வாய்ப்பட்டோ அல்லது காயமடைந்தோ இருப்பவர்களுக்கு எவ்வளவு முக்கியமானது இந்த நர்ஸிங் சேவை!

யுத்தத்திற்கு முன் இருந்த நர்ஸிங் சேவைக்கும், யுத்தகாலத்திலுள்ள நர்ஸிங் சேவைக்குமுள்ளவித்தியாசம்தான் என்னே! சுகத்திற்கும் துக்கத்திற்கும், வசதிக்கும் வேதனைக்கும் உள்ள வித்தியாசம் போன்றது. இன்னும் சொல்லப்போனால், வாழ்வுக்கும் சாவுக்கும் உள்ள வித்தியாசம் போன்றது என்று கூடச் சொல்லலாம். இந்த உன்னத சேவைக்கு ஏராளமான நர்ஸ்கள் அவசியம் தேவை. கால தாமதம் செய்யாது உடனே வந்து சேருங்கள்.

முந்திய அநுபவம் அவசியமில்லை; ஏனெனில், நர்ஸாகப்பதிவுசெய்துகொள்வதற்கு முன்பே யாவும் வெகு குறைந்த காலத்திலேயே போதிக்கப்படுகின்றது. ஏற்கனவே தேர்ச்சிபெற்றநர்ஸ்கள் நேரிடையாக உடனே ஏற்றுக்கொள்ளப்படுவார்கள்; முந்திய அனுபவத்திற்காக சம்பளஉயர்வும் உண்டு. திருப்திகரமாக சேவைசெய்து முடிந்தபின் ஒரு தனி சன்மானமும் உண்டு.

ஐ. எம். என். எஸ். பொறுப்புகளை ஏற்க சாத்தியப்படாதவர்கள் ஏ. என். எஸ். கோஷ்டியில் விசேஷ ஏற்பாட்டுடன் சேரலாம். மற்ற விவரங்களுக்கு உங்கள் பிரதேசத்திலுள்ள ஸெயின்ட் ஜான் ஆம்புலன்ஸ் ப்ரிகேடின் லேடி சூப்பரின்டென்டெண்டுக்கு எழுதுங்கள். அன்னாருடைய விலாசத்தை அறிவதில் உங்களுக்கு ஏதேனும் சிரமமிருந்தால் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும் ;-- டைரெக்டர் ஜெனரல், இந்தியன் மெடிகல் ஸர்விஸ், டில்லி.

---

*இந்தியாவுக்கு சேவை புரியுங்கள் !*

# ஏ.என்.எஸ்.

*ஆக்ஸிலியரி நர்ஸிங் சர்வீஸ்.*

AAA 990